www.tamilarangam.net

# PROVO

## பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்

அன்பளிப்பு ரூ 10/-

(இலங்கை)

- ★ ஆசிரியர் குழு,
- ★ 'மேதினத்து' மேன்மை,
- ★ தோழர் சண்ணுக்கு அஞ்சலி,
- ★ மூன்றாவது பாதை எது?
- ★ தேசிய சக்தி - (உயிர்ப்பு)
- ★ பம்பாய் தந்த கவிதை
- ★ தனிநபர் பயங்கரவாதம் - (உயிர்ப்பு)
- ★ கூட்டுச்சேரா இயக்கமும் இன்றைய உலகும் -(சமரன்)
- ★ தோழர் கொன்சாலோவின் உயிரைப் பாதுகாப்போம்.

P''RAYA
87 RUE DE COLOMBES
92600 A... SUR -
-SEINE , FRANCE

C. P. C. (M) தோழர் சண்ணுக்கு



நமது அஞ்சலி

நவ சினப் புயலுடன்
கை குலுக்கியவன்
நீ. !


பொறி முட்டினாய்
புரட்சிப் புயலுக்கு !
சிறு பொறியானாய்
இங்கே.

# நவசகாப்தம் ★

**PROLETARIAT VANGUARD'S ORGANAIZATION (ProVO)**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நாம் போகும் பாதை----நாம் போகும் பாதை

இலங்கையின் இனப்பிரச்சனை தீர்க்க, பல் இன (தேசிய இன அல்ல) மக்களும் இலங்கை தேசிய நீரோட்டத்தில் கலக்க, பத்தாண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர, மக்களும் நாடும் வளர்ச்சிப் பாதையில் முன்னேற------இப்படிப் பல. எதற்கெடுத்தாலும் "வானமே கையில் வந்து விட்டது." என உணர்வூட்டும் சூது சூழல் பிரச்சாரத் தந்திரம் மூலம் மக்களையும் நாட்டையும் திசை திருப்பி 'மக்களை எல்லாவற்றிலும் எல்லா விதத்திலும் ஏமாளிகளாக்கும்' வேலையை ஆளும் வர்க்கமும், சிறீலங்கா இனவாத அரசும் செய்து வருகிறது. இதில் ஒன்றுதான் இனப்பிரச்சனைக்கு தீர்வைத் தேடவந்த "பாராளுமன்ற தெரிவுக் குழு" வழக்கம் போல் இதுவும் தமிழர்கள் சந்தித்த 'அமைதியாக ஏமாற்றும் பேச்சுவார்த்தை, தீர்வுக்கான முயற்சியின்' தொடர்ச்சியாக ஏமாற்ற வந்தது. சிங்கள பௌத்த இனவாதமும், இனவாத கட்சிகளும் (யூ.என்.பி, எஸ்.எல்.எப்.பி,) அரசும் சேர்ந்து பாராளுமன்ற தெரிவுக் குழுவை கொலை செய்தது. சிறீலங்கா இனவாத பாசிச அரசுக்கு எதிராக 'போராட்டத்தை கைவிட்டுவிட்டு' தமிழீழ மக்களின் பிரச்சனைக்கு 'பாராளுமன்ற பாதையை கைபிடித்த' தமிழ்த் தலைமைகள்? நாலு அம்ச கோரிக்கைகளின் மீது ஒன்றுபட்டு நின்ற 'ஏழு கட்சி கூட்டணி' இன்று தெரிவுக் குழு கொலை செய்யப்பட்டதை பார்த்து ஒப்பாரி வைப்பதுடன், பாராளுமன்றத்துள் வேறு வழி பற்றி தேடுகிறது. எதற்கென்று அப்புறம் அவர்கள் அறிவிப்பார்கள். அதுவரை அவர்கள் அங்கேயே இருக்கட்டும்.

விடுதலைப் புலிகளோ தாங்கள் சமஷ்டி ஆட்சி பற்றி (சமஷ்டி) பேசத்தயார் என அறிவித்துள்ளனர். அரசு படைகளுக்கு எதிராக போரிட்டுக் கொண்டும் இருக்கின்றனர். புனைகளோ, புலிகளோ யாரானாலும் தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சனைக்கு அரசுடன் தீர்வு பற்றி 'பேசினால், பேசட்டும்.' ஆனால், தமிழீழ மக்களின் சார்பாக எந்த கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள், எந்தக் கோரிக்கைகள் ஏற்கப்படுகிறது, தீர்வின் அடிப்படைகள் என்ன என்பதை மட்டும் தீர்வுக்கு முன், தமிழீழ மக்களின் முன் வைக்கவேண்டும். அப்பொழுதுமக்கள் தங்களின் தீர்வை தெளிவுடன் அறிவிப்பார்கள். அதைவிடுத்து நடத்தப்படும் 'திரைமறைவு பேச்சை' மக்கள் என்றுமே நிராகரிப்பார்கள்.

இலங்கையில் மாகாண சபைத் தேர்தல் நடக்கப் போகிறது. யுத்தம் நடக்கும் வடக்கு- கிழக்கு மாகாணம் (தமிழீழம்) தவிர ஏனைய ஏழு மாகாணங்களில் (சிறீலங்காவில்) தேர்தல் தேதி குறிக்கப்பட்டுவிட்டது. குறித்த படி நடக்கும். சாகடிக்கப்பட்ட இரண்டு தலைகள் வாக்கு சீட்டுக்காக மக்கள் முன் கொண்டுவரப்படும். உயிரற்ற தலைகள் மோசம்: மக்களே எச்சரிக்கை ! எச்சரிக்கை !

ஜே. ஆரின் தலைமையில் தேசிய ஒடுக்குமுறை யுத்தம் நடந்த போது. பாதுகாப்பு துறை அமைச்சராக இருந்தவரும், பிரேமதாசா ஜே. ஆரின் இடத்தை பிடித்தவுடன் அவர்களுக்கிடையில் நடந்த ஆட்சி அதிகார ஆட்டத்துக்கான போட்டியில் தூக்கியெறியப்பட்டவர்களில்

www.tamilarangam.net

(டி.யு.என்.எப்) ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியை உருவாக்கியவர்களில் முக்கியமானவரும் இன்று திருவாளர் அத்துலத் முதலி 'தமிழ் மக்களால் கொடிய இராணுவ அமைச்சர்' என அழைக்கப்பட்டவர். சித்திரை மாத கடைசியில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் மர்ம மனிதனால் 'சுட்டுக் கொல்லப்பட்டார். அடுத்து 'ஏழை சனாதிபதியல்ல' "ஏழைகளின் சனாதிபதி" என முதலாளித்துவ பிரச்சாரக உலகால் அழைக்கப்பட்ட முதலாளித்துவ இனவாத, மதவாத அரசியல் வாதி. ஏகாதிபத்தியங்களின் நம்பிக்கைக்குரிய 'மகா உத்தமன்?'. பிரேமதாசா தொழிலாளி வர்க்க தினமான "மே தினத்தில்" நாட்டின் உழைக்கும் மக்களை ஏமாற்றும் பிரச்சார நாடகத்தை, தெருக்கூத்தை நடத்திக் கொண்டிருந்த போது, மக்களின் வாக்குகளை மாகாண சபை தேர்தலுக்காகவும் திரட்ட முயற்சித்துக் கொண்டிருந்த வேளை 'வெடி குண்டு மனிதனால்' கதை முடிக்கப்பட்டது. பிரேமதாசா பிரதமராக இருந்தபோதும், சனாதிபதியாக வாழ்ந்த வேளையிலும் உலக கொள்ளைக்கார உலகவங்கி, சர்வதேச நாணய நிதி நிறுவனம், மற்றும் பல் தேசிய கொம்பனிகளுக்கும் நாசகார ஏகாதிபத்தியங்களுக்கும் மக்களையும், நாட்டையும் அடகு வைத்தான். தீராக் கடனில், மீள்முடியாத சுமையில் மக்களையும் நாட்டையும் அமிழ்த்தி விட்டுள்ள மக்கள் விரோதி, தேசவிரோதி. இவற்றால் பாதிக்கப்பட்ட, வெறுப்படைந்த தேசத்தின் ஒரு குடிமகனால் சாகடிக்கப்பட்டார்.

அத்துலத் முதலியையும், பிரேமதாசாவையும் கொன்றது புலிகள் தான் எனக்காட்ட அரசும், ஆளும்வர்க்கமும் கடும் பிரயத்தனம் செய்கிறது. 'மர்ம மனிதன்', 'வெடி குண்டு மனிதன்' அடையாளம் காணப்பட்டதாக உளவுத்துறை அறிவிக்கிறது. சில 'கொலை பற்றி ஆராயும் அரசியல் அறிஞர்?' குண்டு வெடிப்பு செய்கையை பார்த்தால் "புலிகள்" செய்தது போல் தெரிகிறது. ஆனால் இவர்கள் மாறி மாறி அழிக்கப்பட்டதை அதற்கான அரசியல் சூழ்நிலைகளை பார்த்தால் சிங்கள ஆளும் வர்க்க போட்டி காணப்படுகிறது. ஒரு தமிழனைக் கொண்டே சிங்கள கட்சிகள் தங்களுக்கிடையிலான 'கணக்குகளை' தீர்க்கவும் முடியும். ஆகவே "வெடி குண்டு மனிதன்" தமிழன் என்பதால் புலிகள் செய்ததாகிவிடாது.-------இப்படி பல செய்திகள்.

விடுதலைப் புலிகளோ என்றும் போல் 'தங்களுக்கும் இதற்கும்' சம்பந்தம் இல்லை என்கின்றனர். இந்தியப் பிரதமர் ராஜீவ் தேர்தல் கூட்டத்தில் கொல்லப்பட்டதை கண்டு ஆடிப் போன "தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கம்" அதன் தலைவர்களும் பிரேமதாசா வெடி குண்டு மூலம் தகர்ந்து போனதை கண்டு செய்வதறியாது திகைத்து போயுள்ளனர். இதில் இலங்கையின் ஆளும் வர்க்கம் பெரிதும் நிலை தடுமாறிப் போயுள்ளது. இவர்கள் அடுத்த 'சார்க்' கூட்டத்தில் கூட விடுதலைப் புலிகளை ஒரு "பயங்கரவாத இயக்கமாக" தெற்காசியாவில் அறிவிக்க முனையலாம்.

பிரேமதாசாவுக்கும், அத்துலத் முதலிக்கும் -நாட்டின் பரந்து பட்ட மக்களுக்கும், நாட்டிற்கும் என்ன உறவு? இவர்களுக்கும் - உலக கொள்ளைக்கார ஏகாதிபத்தியங்களுக்கும் என்ன சம்பந்தம்?, தமிழீழ தேசிய ஒடுக்குமுறை யுத்தத்திற்கு எந்தளவில் பொறுப்பு?, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும், சிறீலங்கா மக்களின் சனநாயகப் புரட்சிக்கும் எதிரான -உள்நாட்டு இனவாத அரசுக்கும் ஆளும் வர்க்கத்துக்கும் இவர்களுக்கும் என்ன உறவு?, இறுதியில் ஆயிரம் ஆயிரம் சிங்கள மக்களை, போராளிகளை, ஜே.வி.பி தலைமையை, தமிழ் மக்களை, போராளிகளை அடிக்க அடிக்க சித்திரவதை செய்து கொலை செய்வதற்கு 'சுட்டு விரல் ஆணை' பிறப்பித்த இவர்களுக்கு - மக்களும் தேசமும் வழங்கும் தண்டனை என்னவாக இருக்க வேண்டும்?__________. இதற்காக உணர்வு கொண்ட மக்களும், தேசமும் என்றும் துயரப்படப் போவதில்லை.

சிறீலங்கா அரசின் தமிழீழ மக்களின் மீதான தேசிய ஒடுக்குமுறை யுத்தம் பல முனைகளிலும் வேறு வேறுபட்ட தந்திரங்களுடன் முடுக்கி விடப்பட்டுள்ளது. அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக இன்று தமிழீழ மக்களின் பக்கம் நின்று போராடும் சக்திகள் தங்களை எல்லா நிலைகளிலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அரசு படைகளுடன் போரிடும் புலிகள் எதிரிக்கு எதிரான மக்களின் உள்ளார்ந்த ஒற்றுமையை, போராடும் பலத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் பலயீனப்படுத்தி வருகின்றனர். எதிரியை எதிர்த்து போராட்ட வெற்றியை நோக்கி முன்னேற தமிழீழ மக்களின் உளப்பூர்வமான பங்களிப்பும், ஒத்துழைப்பும் போராடும் சக்திகளுக்கு இன்றியமையாதது. அரசுக்கு எதிரான மலையக, சிங்கள மக்களின் போராட்டங்கள் தமிழீழ மக்களின் தேசிய போராட்டத்துக்கு பக்கபலமாக உதவும். இவை அரசுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான ஒவ்வொரு முனை போராட்ட சக்திகளும் நட்பு சக்திகள். இத்தகைய கொள்கைகளை கொண்டு போராடும் தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளை, சிறீலங்கா இராணுவம் புலிகளை தேடுவதை விட புலிகள் இப்போராளிகளை தேடிச் சல்லடை போட்டு கைது செய்கிறது. சிறையிலடைக்கிறது, சித்திர வதை செய்கிறது சுட்டுக்கொல்கிறது. அமைப்புக்களை தடை செய்கிறது. அதேவேளை தமிழீழ பகுதிகளில் வாழும் முஸ்லீம் மக்களை அவர்களது சனநாயக உரிமைகளை மீறுகிறது. (காலங்காலமாக வாழ்ந்த இடங்களை விட்டு அப்புறப்படுத்துவது, தொழில் செய்யும் சுதந்திரத்தை தடுப்பது, மாற்று எண்ணம் கொண்ட முற்போக்கு அமைப்புகளில் இணைவதை தடுப்பது.)

சிறீலங்கா அரசால், அரசின் ஆதரவு பெற்ற குழுக்களால், முஸ்லீம் மத அமைப்புகளால் முஸ்லீம் மக்கள் திசை திருப்பப்படுவதை எதிர்க்க. இத் 'தீய சக்திகளிடமிருந்து' மக்களை விடுவிக்கும் பிரச்சாரங்கள், கிளர்ச்சிகள், தேவையான கால நேரத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். இதற்கு பதில் சந்தர்ப்பவாத நோக்கில் எல்லைப் புறங்களில் வாழும் முஸ்லீம்கள் மீது படுகொலை புரிவது, தமது கட்டுப்பாட்டு பிரதேசங்களிலேயே தமிழர்கள் முஸ்லீம்களை தாக்கிவிடுவார்கள் என மக்களை ஏமாற்றி முஸ்லீம் மக்களை நிரந்தர வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றுவது. இவை எல்லாம் தமிழீழ போராட்டத்தை, நேரடியாக சம்பந்தங் கொண்ட சக்திகளின் தேசிய கோரிக்கையை சனநாயக உணர்வுகளை நேரடியாக பலயீனப்படுத்துகிறது.

'புலிகளின் தாகம்' "தமிழீழத் தாயகம்" என்ற கோசத்தை முன்வைத்து செயற்படும் புலிகளின் தலைமை, இலண்டன் பி.பி.சி. யின் நேரடிப் பேட்டியில் முஸ்லீம் மக்கள் தொடர்பான கேள்விக்கு 'தேசியத் தலைவர்' பிரபாகரன் அளித்த பதிலின் "பலயீனத்தை" பிரபா உட்பட தலைமை இப்போது புரிந்து கொண்டிருக்கும். "தமிழீழ தாயகம்" தமிழீழ மக்களின் (தமிழ் முஸ்லீம் மக்களது) தாகம். அது சிதறடிக்கப்பட்டால் தமிழீழத் தாயகம் சிதறுண்டுவிடும் வடக்கு, கிழக்கு இணைப்பு இருப்பு பலயீனமாகிவிடும். உதிரக் கோற்றின் உறைவிடம் ஆகிவிடும் "தமிழீழ தாயகம்". 'புலிகளின் தாகம்' வெறும் 'தாகமாகவே' இருக்கும். எனவே புலிகளின் தலைமை இரண்டு காரியத்தை உடனடியாக செய்ய வேண்டும்,

ஒன்று (அ) "முஸ்லீம் மக்களது சனநாயக உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பது. பாதுகாப்பு கொடுப்பது, சொந்த வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் உடனே மீளக் குடியமர்த்தப்பட வேண்டும்." (யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டது நினைவு கொள்ளதக்கது.)

(ஆ) " அப்பாவி முஸ்லீம் மக்கள், எல்லைப் புற கிராமங்கள் மீதான படுகொலைகள் உடனே நிறுத்தப்பட வேண்டும்".

www.tamilarangam.net

இவற்றில் நாம் செய்த தவறுகளை 'மக்கள் முன் சுய விமர்சனம்' விடுதலைப் புலிகள் செய்வார்களானால் இன்னமும் நல்லது.

இரண்டு (அ) "சிறீலங்கா அரசை, அதன் கூட இருக்கும் எகாதிபத்தியங்களை எதிர்த்து போராடும், தமிழ்த் துரோகத் தலைமைகளை அம்பலப்படுத்தும், அணியப்படுத்தும், எதிர்த்து போராடும். 'தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயகசக்திகளை, அமைப்புகளை' புலிகளின் தலைமை செயற்பட அனுமதிக்க வேண்டும். அவர்களுக்குள்ள சனநாயக உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும்."

(ஆ) "புலிகளின் சிறைக் கூடங்களில் வாழம் 'தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள்' நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும்" அவர்கள் மேலான பாரதூரமான குற்றங்கள் சுமத்தப்படின் மக்கள் முன் வைத்து விசாரிக்கப்படவேண்டும். இவைகுறித்து புலிகளின் தலைமை மக்களின் சுதந்திர விடுதலைத் தாகத்தில் அக்கறையும், அறிவார்ந்த ஆர்வம் கொண்டுள்ளதாயின் மீள் பரிசீலனை செய்யும். ஆரோக்கியமான முடிவை எடுத்து வெளிப்படையாக அறிவித்து உடன் அமுல்படுத்தவேண்டும். இதைச் செய்வதன் மூலம் அரசுக்கு எதிரான புலிகளின் போராட்டம், தமிழீழ மக்களின் சுதந்திர போராட்டம் மேலும் ஒரு படி முன்னேறும். எதிரியை ஓரடியாவது பின்வாங்க வைக்கும்.

விடுதலைப் புலிகளின் தலைமை இதைசெய்யும் என நம்பலாம். அல்லது அதைத் தலைமை செய்யவைக்க ஒவ்வொரு உண்மையான புலியும், புலிகளின் ஆதரவுச் சக்திகளும் நிர்ப்பந்திக்க வேண்டும். அதே வேளை 'தமிழீழ புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள், அமைப்புகள், இதற்கு ஆதரவானவர்கள்' அனைவரும் இவ் இரண்டு கடமைகளை முன்னிறுத்தி பலமான பிரச்சார இயக்கத்தை, கிளர்ச்சி இயக்கத்தை தாங்கள் வாழும் இடங்களில் -புகலிடங்களானாலும் இயல்தகவான வழிகளில் உக்கிரமாக நடத்தவேண்டும்.

தமிழீழ மக்களின் தேசியப் போராட்டத்தை பலப்படுத்தும்.
இது புலிகளின் தேசிய தன்மைக்கு ஒரு உரைகல்லாகும்.
புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள் செயற்பட களம் அமைக்கும்.

ஆசிரியர் குழு
பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம் (இலங்கை)

************************************************************

" முதலாளி வர்க்க நுகத்தடிகளின் கீழ், சம்பள அடிமைத்தன நுகத்தடிகளின் கீழ் நடைபெறும் தேர்தல்களில் பாட்டாளி வர்க்கம் பெரும்பான்மையை பெறவேண்டும். அதற்கு பின்தான் அது அதிகாரத்தை பெறவேண்டும். என்று சுயவர்கள் அல்லது முட்டாள்கள்தான் சிந்திப்பார்கள். வர்க்கப்போராட்டம் பாட்டாளிவர்க்கத்தின் தலைமை ஆகியவற்றின் இடத்தில் பழையமுறையிலான, பழைய அதிகாரமுடைய வாக்களிப்பை வைப்பது முட்டாள்தனத்தின் அல்லது ஆசாடபூதித்தனத்தின் சிகரமாகும்."

*************************** தோழர் --லெனின்

***************************

www.tamilarangam.net

*******************

## "மே தினத்து" மேன்மை

*******************

எட்டுமணி நேர
வேலை கேட்டு
எட்டாத தூரத்தில்
இருந்து—
எழுந்த புரட்சி
இன்றுவரை எங்கள்
எழுச்சியின் கீதமாய்
ஒலித்துக்கொண்டிருக்கின்றது !

முதலாளித்துவத்தின்
முஷ்டியை உடைப்பதற்காய்
முன்நின்ற தோழர்கள்
சிக்காக்கோ நகரின்
சிந்திய குருதியின்
சிவப்பு இன்னும்
தொழிலாளி வர்க்கத்தின்
தேசியக் கொடிகளின்
நிறமாய்ப் பிரதிபலிக்கின்றது !

சிக்காக்கோ தெருக்களில்
முழங்கிய கோஷங்கள்
இன்று—
உலகப் பாட்டாளி வர்க்கத்தின்
உரிமைக் குரலாய் மட்டுமல்ல
தேசிய கீதமாயும்
ஒலித்துக் கொண்டிருக்கின்றது !

எங்கள் தேசத்தின்
எங்கள் தெருக்களில்
மே தினத்தில் மட்டுமே
உரிமைக் கோஷங்களும்
தொழிலாளர் கீதங்களும்
முழங்கப்பட்டு வந்தன !

ஆனால் இன்று
கோஷங்களுக்கே வேட்டு
வைத்துவிட்டனர் !

கோஷங்கள் எங்கள்
இதயச் சிறையினுள்
சிறைவாசம் புரிகின்றன !

கோஷங்களை முழங்கவே
சுதந்திரம் இல்லாத
எங்கள் தேசத்து மக்கள்
சுவாசிப்பதற்குச் சுதந்திரம்
கேட்கிறார்கள் !

உயிர் வாழ்வதற்காய்
உணவு பயிரிட்ட
எங்கள் வயல்களில்
இன்று—
உதிரச் சேறு
உறைந்து கிடக்கின்றது !

தொழிலாளர்களுக்கு
உணவூட்டிய
தொழிற்சாலை இயந்திரங்கள்
இன்று
துருவேறிக் கிடக்கின்றன !

எங்கள் தேசத்துப்
பாட்டாளி வர்க்கத்தின்
பரிதவிப்பு
பாரதத்தையும் கடந்து
பாரெங்கும் பேசப்படுகின்றது !

—கணபதி கணேசன்—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



********************

தோழர் சண்ணுக்கு அஞ்சலி

********************

மனித சமூக வரலாற்றில் சுரண்டப்படுகின்ற, அடக்கி ஒடுக்கப்படுகிற மக்களின், தொழிலாளிவர்க்கத்தின் உரிமைக்கும், சுதந்திரத்துக்கும் விடுதலைக்கும் மார்க்சியம் வழிகாட்ட தொடங்கியதில் இருந்து இன்றுவரை மக்கள் போராட்டத்தின் மூலம் புடம்போட்டு எடுக்கப்பட்ட பொதுவுடமை கட்சிகளும், கூடவே கட்சியின் தலைவர்களும் மக்களின் சுதந்திர வரலாற்றில் நிலைநிறுத்தப்பட்டுள்ளார்கள். போராடும் மக்களின் மனங்களில் இடம்பெற்றுள்ளனர்.

தோழர் சண்முகதாசன் ஒரு மார்க்சிய லெனினியவாதியாக வாழத் தொடங்கியதிலிருந்து, இலங்கை பொதுவுடமை இயக்கத்தின் வரலாற்றில் முக்கிய பங்காற்றியுள்ளார். இலங்கை பொதுவுடமை இயக்கத்திலும், சர்வதேச பொதுவுடமை இயக்கத்திலும் ஏற்பட்டு வந்த பல மாற்றங்கள், வளர்ச்சிகளுடன் நேரடித் தொடர்புடையவர். தனது மரணம் வரை மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனையின் பக்கம் நின்று உறுதியாக உழைத்தவர். நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ, ஏகாதிபத்திய சித்தாந்தங்களுக்கு எதிராக மட்டுமல்ல, திரிபுவாத, நவீன திரிபுவாத சித்தாந்தங்களுக்கும் எதிராக, பாட்டாளிவர்க்க புரட்சிகர சித்தாந்தத்தின் பக்கம் நின்று போராடி வந்திருக்கிறார். புரட்சிகர சித்தாந்த போராட்டத்தின் ஊடாக ஒரு பொதுவுடமை கட்சி மூலக்கருவையும் காப்பாற்றி வந்துள்ளார். இன்று 'சர்வதேச புரட்சிகர இயக்கத்தில்'

இலங்கை இடதுசாரிகள் ஒரு பங்கை வகிக்கின்ற அளவிற்கு சர்வதேச புரட்சிகர இயக்கத்தில் ஒரு தலைசிறந்த பங்கையாற்றியுள்ளார். இவைதான் அவரை நாம் நேசிக்கின்ற நமது மனங்களில் இருத்தி வைத்திருக்க காரணமான அடிப்படைகள்.

தோழர் சண்ணினதும், அவர் அங்கம் வகித்ததும், பின்பு அவர் தலைமை தாங்கி வந்ததும் ஆன பொதுவுடமை கட்சிகளின் கொள்கைகள், நடைமுறை செயற்பாடுகள், தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனையில் புரட்சிகர பார்வை, அணுகுமுறை, தலையீடு இல்லாதது குறித்து கருத்துப் போராட்டங்களும், சமூக விமர்சனங்களும் இருக்கிறது. அதே வேளை இலங்கை பொதுவுடமை இயக்க வரலாற்றில் தனது சுவடுகளை பதித்ததிலிருந்து, தொழிற்சங்க போராட்ட அனுபவங்கள், அரசியல் சித்தாந்த வளர்ச்சியூடாக தன்னையும், தன்னுடன் இருந்த நேர்மையான சக்திகளையும் பாராளுமன்ற சந்தர்ப்பவாத சகதியில் இருந்து மீட்டதிலும், நவீன திரிபுவாத பாதைக்கும், ட்ரொஸ்கியவாதத்துக்கும் எதிராக இறுதிவரை உறுதியாக போராடியதிலும், குறிப்பிட்டு சொல்லும்படியான பங்காற்றியுள்ளார். வரலாற்றில் பெரும்பாலும் தொழிற்சங்க இயக்கங்களே திரிபுவாத பாதைக்கு பலியாகிவிடும்பொதுப்போக்கில் இருந்து, இலங்கை தொழிற்சங்க இயக்கத்தையும் (சி.டி.யு.எவ்.) அதன் தலைமையையும் புரட்சிகர அரசியல் பாதையில் தொடர்ந்து முன்னேற்றினார். (கட்சியின் திரிபுவாத தலைமையையும் தொழிற்சங்கத்துடன் இருந்த திரிபுவாத சக்திகளையும் தனிமைப்படுத்தினார்)

பாராளுமன்ற பாதையை நிராகரித்தும், நீண்டகால மக்கள் யுத்தப்பாதையை ஏற்றும் (கொள்கையளவிலேனும்) மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனையை இன்றைய மார்க்சியம் என தெளிவுடன் பிரச்சாரப்படுத்தியதிலும், பாதுகாத்தும் தோழர் ஸ்ராலினின் பெருமளவான சரியான பார்வைகள் அணுகு முறைகளையும் சிறியளவான தவறான போதாக்குறையான பார்வைகள் ----

www.tamilarangam.net



---அனுகுமுறைகளையும், சரியாக பிரசித்துச் சொண்டும், பிரச்சாரப்படுத்தியும் இலங்கையிலும், சர்வதேசளவிலும் ஒரு பிரசித்தமான பொதுவுடமைவாதியாக திகழ்ந்தார். உலகளவில் மீண்டும் மார்க்சிய-லெனினிய கட்சிகளும், புரட்சியாளர்களும் ஒன்றுபட்ட இயக்கத்தை கட்டியமைக்க பெரும் பணியாற்றியுள்ளார்.

இலங்கையில் போலி பொதுவுடமை இயக்கங்கள், ட்ரொஸ்கிய இயக்கங்கள் அதன் தலைவர்கள் போல் சிங்கள பௌத்த பேரின-வாதத்தையும் அரசையும் சார்ந்து வாக்கு வேட்டைக்காக சிங்கள தொழிலாளி வர்க்கத்தையும் பரந்துபட்ட மக்களையும் இனவாத பாதைக்கு பலியாக்கியதை போன்றல்லாமல் சிங்கள பௌத்த பேரினவாதத்தை தயவு தாட்சண்யமின்றி கண்டித்து எதிர்த்தும் தமிழ் குறுந்தேசியவாதத்தையும், இனவாதத்தையும் கடுமை-யாக எதிர்த்து வந்தவர். சிங்கள, தமிழ் தொழிலாளி வர்க்கத்தின் பரந்துபட்ட மக்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்தினை வலியுறுத்தியவர். நவகாலனிய சமூக கட்டமைப்புக்குள் இருக்கும் இலங்கையில் உள்நாட்டு பிற்போக்கு வர்க்கத்தையும் இனவாத அரசையும், ஏகாதிபத்தியங்களையும் வெற்றி கொள்ளும் இலங்கை மக்களின் புதிய சனநாயகப் புரட்சி பற்றிய கருத்தோட்டத்தில் விடாப்பிடியாக இருந்தவர். தமிழ் மக்கள் மத்தியில் தேசிய எழுச்சி வீறு கொண்டெழுவதற்கு முன் சாதி அடக்குமுறைக்கெதிரான பல போராட்டங்களை அவரும் அவர்சார்ந்த இ.பொ.க. (சீனச்சார்பு) உம் ஊக்கமுடன் நடத்தியது. மலையக மக்களின் பொருளாதார, அரசியல் உரிமைகளுக்காக, தொழிற்சங்க இயக்கங்களை கட்டி அமைத்தார். இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றில் குறிப்பிடும்படியாக மலையகத்தில் தொழிற்சங்க போராட்டங்களை நடத்தினார். உழைக்கும் தொழிலாள விவசாய மக்களின் விடுதலைக்காக 'செங்கொடி' சங்கம் அமைத்து செயற்பட்டனர்.

1964 இல் இலங்கைப் பொதுவுடமைக் கட்சி இரண்டாக பிளவுபட்டது. இதில் இ.பொ.க. (சீனச்சார்பு) கட்சிக்கு தலைமை தாங்கினார். கட்சியின் தத்துவ ஏடாக சிங்களப்பத்திரிகை 'சம்தவா' வையும், மார்க்சிய லெனினிய ஆதரவுப் பிரச்சாரங்களை மேற்கொண்ட 'தொழிலாளி' பத்திரிகை-யையும் நடத்துவதில் முக்கியபங்காற்றினார்.

இலங்கையின் குறிப்பான சூழ்நிலைமையில் தேசிய இன முரண்பாட்டின், இனப்பிரச்சனையின் பிரதான நிகழ்ச்சிப்போக்கை உணர்ந்து புதிய சனநாயகப் புரட்சியின் பகுதியாக தமிழ் மக்களின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை, ஆயுதப்-போராட்டமாக முன்னெடுக்க தவறினர். தமிழ் மக்களின் தேசிய உணர்வுகளையும் தேசியக் கோரிக்கைகளையும், பாட்டாளி வர்க்க சர்வதேசியப் பாதையுடன் இணைப்பதற்குப் பதில், அக்கோரிக்கைகளை மொத்தத்தில் தமிழ் முதலாளித்துவ பிற்போக்குத் தேசிய வாதமாக குறுக்கி நிராகரித்தனர். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு ஆதரித்த போதிலும், தமிழ் மக்கள் மத்தியில் அதற்கான போராட்டங்களை எவ்வடிவிலும் முன்னெடுக்கத் தவறினர்.

அவரும் அவர்சார்ந்த கட்சியும் முன்வைத்த அரசியல் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான தள செயற்பாடுகளில், ஆரோக்கியமற்ற நிலையும், கூடசேர்ந்து கடந்தகால, நிகழ்கால அரசியல் போராட்ட அரங்கில் தீர்மான கரமான சக்தியாக செயற்பட முடியாமல் செய்தது. ----

www.tamilarangam.net



மேற்படி அவரைப் பற்றிய பார்வைகள் எவ்வாறு இருப்பினும், அவரது இருப்பு அவருக்கும், அவர் சார்ந்த இ.பொ.க. (மா ஓயிஸ்டு) கட்சிக்கும், வளர்ந்து வரும் மார்க்சிய லெனினிய புரட்சியாளர்களுக்கும், பெரும் அநுபவத்தையும் நல்ல அறிவுரைத்தல்களையும் மேலும் கொடுத்திருக்கும். ஆனால்அவரது மறைவு அதை இல்லாமல் செய்து விட்டது.

அவரது மறைவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கும், கட்சித் தோழர்களுக்கும்"பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம்" தனது ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவிக்கின்றது. தோழர் சண்முகதாசனின் மறைவிற்கு அஞ்சலியை செலுத்துகிறது.

அமைப்பு கமிட்டி
பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம். (இலங்கை)

---

## சிறு பொறி

நவ
சீனப் புயலுடன்
கை குலுக்கியவன்
நீ.

பொறி மூட்டினாய்
புரட்சிப் புயலுக்கு
சிறு பொறியானாய்
இங்கே !

உங்கள்
தவறுகள்
தண்டிக்கத்தக்கதல்ல
திருத்தப்படவேண்டியது.

கனவுகளல்ல
கொள்கைகளும்
நடைமுறைகளும்
திருத்தப்பட்டிருந்தால்!

நமது
தேசங்கள்
சிவந்து கொண்டிருக்கும்
இந்நேரம்.

ஆக்கம்: கிருஷ்ணா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



***************

. . . . . . . . . . . . . . . .

## எது? மூன்றாவது பாதை

***************

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப்போரா-
ட்டம், இன்றைய நிலையில் பிரிந்துபோகும் உரிமையையும், அங்கீகரித்து முன்னெ-
டுக்கப்படும் ஆயுதப்போராட்டம், கடுமையான தேக்கநிலைக்கும், பல புதிய
திசைவிலகல்களுக்கு உள்ளாகியுள்ளது. சிறிலங்கா சிங்கள பெளத்த பேரினவாத
அரசின், தேசிய ஒடுக்குமுறை யுத்தம் எல்லாதிசைகளிலும் நாளுக்கு நாள்
தீவிரப்படுத்தப்படுகிறது. யுத்தத்தின் கொடூரம் மக்களை சொந்த மண்ணிலேயே
ஏதிலியாக்குகின்றது. அதே வேளை அரசுக்கு எதிரான ஆயுதப்போராட்டப்
பாதையைக் கைவிட்டு, பாராளுமன்றத்தின் மூலமும், பேச்சுவார்த்தை மூலமும்
தீர்வுகாணும் கனவில் திசைமாறிய, தேசிய ஒடுக்குமுறைக்கு மறைமுகமாக
உதவும் ஆயுதக்குழுக்கள், துரோக அரசியல் கட்சிகள் ஒருபுறம். தமிழ் தேசிய
ஒடுக்கு முறைக்கு எதிராக, அரசுடன் போரிடும் தமிழ் முதலாளித்துவ தேசிய
சக்தியான 'விடுதலைப் புலிகள் இயக்கம்' மறுபுறம், புலிகள், தேசியப் போரா-
ட்டத்தின் தமிழ் முதலாளித்துவத்தின் அத்தனை பிற்போக்குதனங்களின் தனிஆதிக்க
சர்வாதிகார 'பாசிச' போக்கின் மையமாகவும், விளங்கிக் கொண்டிருக்கிறது.
இத்தகு சூழ்நிலையில் தமிழ் மக்களின் தேசிய
விடுதலைப் போராட்டம் ஒரு குழப்பகரமான நிலையில் உள்ளது. தமிழீழ
தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றி பாதையை நோக்கி முன்னேறுமா?
தேக்கநிலை உடைக்கப்படுமா? இதையாரால் செய்ய முடியும்? யார் செய்வது?
என்ற கேள்வியும் (?) அச்சமும் !! அரைகுறை நம்பிக்கையும், போராட்ட-
த்தின் மேலும், மக்களின் மீதும் அக்கறை கொண்டவர்கள் வாழும் எல்லாத்தளங்-
களிலும் (இலங்கை, இந்தியா மற்றும் வெளிநாடுகளில்) இப்பிரச்சனை சிந்திக்கத்
தூண்டுகிறது, விவாதிக்கப்படுகிறது, எழுதவும், பிரசுரிக்கவும்படுகிறது.
தமிழீழ மக்களின் புரட்சிகரமான தேசிய கோரிக்கையையும்
மக்களின் சனநாயக உரிமைகளையும் முரண்அற்ற விதத்தில் ஒன்றிணைத்து, வழிகாட்டும்
தகமையுள்ள முன்னேறிய அரசியல் பாதையும், அதன்வழியில் கட்டப்பட்ட போரா-
டும் திறனுள்ள மக்கள் இயக்கமும், இப் போராட்ட பாதையினை தீர்மானிக்கும்
சக்தியாக மாற வேண்டும். என்பதும் பொதுவாக தமிழீழ தேசிய சுதந்திரத்-
திற்கும், மக்களின் சனநாயக உரிமைக்கும் ஆக சிந்திக்கின்றவர்களால் ஏற்றுக்
கொள்ளப்படுகிறது.
அத்தகைய முன்னேறிய அரசியல் பாதையை, அதன் வழி
கட்டப்படும் அமைப்பு மார்க்கத்தை எத்தகைய தத்துவம் மிக மிக சிறப்பாக,
முன்வைக்கிறது. என்பதில் மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனை தத்துவம் தான்
புரட்சிகர அரசியல், அமைப்பு மார்க்கத்தை முன்வைக்கிறது. முன்னேறிய
வர்க்கமான தொழிலாளி வர்க்கத்தினதும், விவசாயிகளினதும் பரந்துபட்ட
பெரும்பான்மை உழைக்கும் மக்களின் சார்பாகவும், தேசிய போராட்டத்திலும்
வர்க்கப் போராட்டத்திலும் முன்வைக்கிறது. பின்தங்கிய நாடுகளின் தேசிய,
வர்க்கப் போராட்டங்களில், மக்களின் சனநாயக புரட்சியை நிறைவு செய்து
ஒரு சமத்துவசமூக புரட்சிக்கு (சோசலிச புரட்சிக்கு) செல்லும் மனித வரலாற்

www.tamilarangam.net


---வளர்ச்சிக்கு உத்திரவாதம் அளிக்கின்றது. எனவே இந்த புரட்சிகர தத்துவ வழியில் உருவாக்கப்படும் அரசியல் வழியும், யுத்த பாதையும் இதன்பால் கட்டப்படும் 'பொதுவுடமைக் கட்சியும், அதன் தலைமை வழிகாட்டலில் நிறுவப்படும் பலமிக்க 'ஐக்கிய முன்னணி, மக்கள் இராணுவம்' இவைதான் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் இன்றைய தேக்க நிலையை உடைக்கும். திசைவிலகல்களை திருத்தி சீரமைக்கும். இதன்மூலம் சிறிலங்கா இனவாத அரசையும் அதனுடன் சேர்ந்து நிற்கும் ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்தும் முன்னேறும் அரசியல் பாதையில் வெளிச்சத்தை நமக்கு தரும் பிரதான எதிரிக்கு எதிரான பரந்துபட்ட மக்களையும், வேறுபட்ட வர்க்கங்களையும் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கம் தனது தலைமையில் இறுதி இலட்சியத்தில் திசைவிலகலின்றி வழி நடத்தி செல்வதற்கான உறுதியின் அடித்தளமாகும். இவற்றின் மூலம் மட்டுமேதான் தமிழீழ தேசிய கோரிக்கையுடன் மக்களின் சனநாயக கோரிக்கைகளை முரணற்ற விதத்தில் ஒருங்கிசைவான முறையில் இணைத்து, தமிழீழ தேசிய விடுதலைப் புரட்சி போக்கை வெற்றியை நோக்கி முன்னெடுத்து செல்லவும், இலங்கை மக்களின் புதிய சனநாயகப் புரட்சியை வளர்க்கவும் நடைமுறையில் போராட்டத்தின் தீர்மானகரமான சக்தியாக மாறவும் வழி பிறக்கும்.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தின் வழியாக வளர்ந்து வரும் மார்க்சிய லெனினிய சக்திகளும், ஒரு 'புரட்சிகர கட்சியை' கட்டவேண்டிய தேவையை நன்குணர்ந்துள்ளார்கள். தத்துவார்த்த ரீதியில், அரசியல் அமைப்பு நிலையில், போராட்ட கள செயற்பாடளவில் இதை எவ்வாறு காரிய சாத்தியமாக்குவது என்பதில் பலவித சிக்கல்களை முகங் கொள்கிறார்கள். இதைக் காரியசாத்தியப்படுத்துவது மிக மிக கடினமானது. பலதியாகங்களை வேண்டிநிற்பது. ஆனால் இதை விட குறுக்கு வழி எதுவும் இன்று போராட்டம் சந்தித்துள்ள தேக்க நிலையை உடைத்து புரட்சிகரமான பாதையில் முன்னேற வழி விடாது. இவ்வாறு புரட்சிகர கட்சியைக் கட்டுவது, தினமும் உச்சரிப்பதன் மூலம், அழகாக எழுதி விடுவதால் சாதிக்கப்படுவதல்ல. இது உணர்வு நிலையில் முதல் நிலை மட்டுமே.

மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனை குறித்து, அடிப்படைப் புரிதலும் இன்றைய சர்வதேசிய, தேசிய பொருளாதார அரசியல் கட்டுமானங்கள், நிலவரங்கள், அரசமைப்பு முறைகள், சமுதாய முரண்பாடுகள் அவை வெளிப்படும் விதங்கள், இவற்றில் உடன்பாடு, முரண்பாடு கொண்ட வர்க்கங்கள், வர்க்க அரசியல் போராட்ட சக்திகளின் அணி சேர்க்கைகள், இவற்றின் மீது தொழிலாளி வர்க்கத்தின் முன்னணி சக்திகளது பார்வை, அணுகு முறை அதன் இறுதிய இலட்சியத்துக்கு இசைவான முறையில் தனித்துவம் மிக்க பாத்திரத்துடன் போராட்டத்தில் தீர்மானகரமான தலையீடு இவை குறித்து தத்துவார்த்த அரசியல் தெளிவும், குறிப்பாக இலங்கையின் சு சமுதாய வளர்ச்சி கட்டம், தேசிய இன முரண்பாடுகளின் தோற்றுவாய், வளர்ச்சி, சமகாலம், போராட்ட சக்திகள் பற்றிய மதிப்பீடு, இன்று தொழிலாளி வர்க்கம் தனது சமுதாயக் கடமையை எங்கிருந்து தொடங்குவது, இவை பற்றிய உயர்ந்த பட்ச புரிதலுடன் தீட்டப்பட்ட ஒரு 'அரசியல் திட்டத்தின்' மேல் நாம் வாழும் தளங்களில் போராட்ட கள நேரடி செயற்பாடுகள் மூலம் பங்களிப்புகள் வழியாக அரசியல் திட்டத்தையும், தங்களையும் புடம்போட்டு வளர்த்து வருபவர்களின் ஒன்றுபட்ட மையமாக கட்சி இருக்க வேண்டும்..---

www.tamilarangam.net



இத்தகைய ஒரு புரட்சிகர அரசியல் திட்டத்தை உரு-
வாக்கவும், அதைச் செயற்படுத்தவும் தயாராகவுள்ள புரட்சிகரமான முன்னணிப்
போராளிகள் ஒன்றுபடுவதன் மூலம், புரட்சிகர அரசியல் கட்சியை கட்ட முடியும்.
இத்தகைய நிகழ்ச்சி நடந்தேறுவதை, காரிய சாத்தியப்படுத்த தெளிவுடன்
கூடவே உறுதியான சக்திகளை ஒன்றுபடுத்துவதே நமது பிரதான பணியாக கருத
வேண்டும். இதை எவ்வளவு தீர்க்கத்துடன் நடைமுறைக்கு வருகிறதோ, அப்போது
போராட்டத்தில் பிரகாசமான வெளிச்சம் தெரியும்.

இந்த மாபெரும் கடமை
இன்று பல காரணங்களால் பல தளங்களில் சிதறுண்டு இருக்கும் தமிழீழ, சிறிலங்கா
தேசங்களின் புரட்சிகர இயக்கத்தின் முன்னணி சக்திகளால், முயற்சிக்கப்பட்டு
வருகிறது. தமது புரிதலுக்கும் சக்திக்கும் ஏற்ப அந்த பிரதான பணிக்கு
முன்னுரிமை கொடுக்கிறார்கள். ஒரே பணியை தமது தோழ்களில் சுமந்து கொண்டு
பல தளங்களில் வாழும் இவர்கள் தமக்கிடையில், கருத்தறிதலை, கொள்கை
ரீதியான உறவை ஒன்றுபடும் அல்லது முரண்படும் போக்கை தெளிவாக்கும் திசை
யில் வளர்கிறார்கள். கருத்து நிலையில் ஒன்றுபடும் சக்திகள் நடைமுறையில்
ஆரோக்கியமான உறவுகளை வளர்த்து கூட்டு வேலைகளை நோக்கி ஒன்று பட
வேண்டும்.

தமிழீழ மக்கள் முகங்கொள்ளும் யுத்தத்தின் கொடூரம், துன்பங்கள்,
தொல்லைகள், இழப்புகள், இயக்கங்களின் அராஜகங்கள், சனநாயக உரிமை
மீறல்கள் இவற்றை எல்லாம் எழுதுவது, உலகறியச் செய்வது அவசியம். இது
சமுதாய வாழ்வின் அன்றாட நிலவரங்களை வெளியிடும் செய்தி தாபனங்கள்
தத்தமது வர்க்க கண்ணோட்டத்தில் இருந்து வெளியிடுவார்கள். இது எவ்விதத்திலும்
மக்கள் சந்திக்கும் எந்தப் பிரச்சனைகளையும் தீர்த்து விடுவதற்கான சிந்தனையை
தூண்டுவதில்லை. தமிழீழ மக்களின் தேசிய சனநாயக பிரச்சனைக்கு காரணமான
இனவாத அரசை, அதன் கூட்டாளிகளை, இயக்கங்களின் குறிதவறும் சிந்தனைகள்,
செயல்களை அடையாளம் காட்டி மக்களுக்கு எல்லோரும் எதிரிகள் எனக்காட்டி
அதற்கு தீர்வைக் கூறாது அல்லது மக்கள் சக்தியை தட்டி எழுப்பாது தீர்வைக்
. . . . . . . , திசை மாறும் நிலைகள் அடுத்த கட்டம். இதற்கு மேல்
மக்களின் பிரதான எதிரியை தனித்து அடையாளம் காட்டியும், அரசுடன் மோதும்
அதேவேளை மக்களின் சனநாயக உரிமைகளை மதிக்காத சக்திகளை, திசை
தவறும் இயக்கங்களை விமர்சனத்துடன் சுட்டிகாட்டும். மொத்தத்தில் தமிழீழ
மக்கள் முன் ஒரு புதிய புரட்சிகர அரசியல் இயக்கத்தின், புதிய நடவடிக்கைகளின்
தேவையை உணர்த்தி ஒரு இதழ், பத்திரிகை, கட்டுரை, கவிதை, சிறுகதை
என பிரசுரித்தால், இது சமுதாய அவலங்களை சுட்டிகாட்டி தீர்ப்பதற்கான
சிந்தனையை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதில் மிக மிக முன்னேறிய நிலை,
ஆனால் இங்கே தான் புதிய எழுதுகோல்கள் மக்களின் இருட்டான வாழ்வை கிழி
த்து வெளிச்சத்தை காட்டும் புதிய புரட்சிப் பாதையையும் திறக்கும். புதிய
எழுதுகோல்களும், திசை விலகினால் மக்களை மீண்டும் இருட்டுக்கு அழைத்து
செல்லும் புதிய திசைவிலகலையும் ஏற்படுத்தும்.

கடந்தகால போராட்டத்தில் விலை
மதிப்பில்லா அனுபவங்களையும் ஏட்டறிவை, பட்டறிவை சுமந்து வந்து நிற்கு
புதிய பாதை (மூன்றாவது பாதை) தேடும் சக்திகள் மக்களின் இருட்டான
வாழ்வில் வெளிச்சத்தை ஏற்படுத்தும் சக்தி பெற்ற அரசியல், அமைப்பு பாதையை
நோக்கி தெளிவுடன் சுவடுகளை பதிக்க வேண்டும்.

www.tamilarangam.net



தமிழீழ மக்களின் சமகால போராட்ட நிலவரம், அதன் எதிர்காலம் பற்றி சிந்திக்கும், வெளிப்படுத்தும் சுதந்திரம் புலிகளைத்தவிர மக்களுக்கு புலிகளால் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் மாற்று சிந்தனை கருத்துக்கள், நிலைப்பாடுகள், தமிழீழத்துக்கு வெளியில்தான் முன்வைக்கப்படும் சூழ்நிலை காணப்படுகிறது.

தமிழீழ மக்களின் பக்கத்தில் இருந்து மேற்கூறிய போக்குகள் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்தும் இதழ்கள், பத்திரிகைகள் தமிழ் மொழியில் பெருமளவில் தமிழீழத்துக்கு வெளியில், சிறிலங்காவில் ஒன்றிரண்டு தவிர குறிப்பாக ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வெளிவருகிறது. இவற்றுள் புலி எதிர்ப்பு, புலி ஆதரவு ஒருவகை, திசைமாறிய இயக்கங்களின் பின்னணி பத்திரிகைகள் இன்னோர்வகை. இவை சில கலகலப்பான விளம்பரங்களுடன் தமது கண்ணோட்டத்தை முன்வைக்கிறது. இவற்றை விடுத்து தமிழீழத்தவர் வாழும் ஒவ்வொரு ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் ஒரு இதழ் ஆவது தமிழீழ மக்களின் எதிர்காலத்தின் மீது அக்கறை கொண்டு போராட்ட தேக்கநிலையை சுட்டிகாட்டி இதற்கான காரணங்களை ஆராய்ந்து, பிரச்சனைகள் தலைக்குமேல் என சொல்லி அதைத்தீர்ப்பதற்கான வழியாக "மூன்றாவது பாதை" ஒன்று உருவாக வேண்டும் என முன்வைக்கிறது.

இப்படி முற்போக்கு ஜனநாயக கருத்துக்களை தாங்கிவரும் அரசியல், கலாச்சார இதழ்களின் அண்மைய ஆசிரியர்குழு அல்லது முதல்பக்கத்தில் மூன்றாவது பாதை உருவாக்குவது, வளர்ப்பது பற்றி அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பான சில கட்டுரைகள் சிறந்த விவாத போக்கை வெளிப்படுத்தி உள்ளது. இது அந்தந்த வெளியீட்டாளர்களுக்குள்ளாக ஓடுகின்ற புதிய அரசியல் பாதையின் தேவை, தன்மை குறித்த பிரக்ஞையை காண்பிக்கிறது. இது போன்ற முயற்சிகள் மிகவும் வரவேற்கப்படவேண்டியது. ஆதரவளிக்கப்பட வேண்டும்.

மூன்றாவது பாதை உருவாக்குவது, வளர்ப்பது பற்றிய தேடலுக்கூடாக வெளிப்படும் திசைவிலகலை கவனிக்கும் முன், எது மூன்றாவது பாதை என்பதை அதை எப்படிப்புரிந்து கொள்கிறோம் என்பதை தெளிவுபடுத்திச் சொல்வது நல்லது.

இலங்கையின் இன்றைய அரசியல் சாசனத்தையும், அதன் மேல்கட்டப்பட்டுள்ள அரசமைப்பு முறையையும், (இனஅடக்கு முறைக்கான சரத்துக்களை உள்ளடக்கியதும் தேசிய இனங்களின், சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பை சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்தாத சரத்துக்களை கொண்டது.) இதில் ஆளும் அதிகாரத்துக்கு செல்வதற்கான வழியாக பாராளுமன்றப் பாதையையும் ஏற்றுக் கொண்டுள்ளதும், ஏகாதிபத்திய சார்பு கொள்கையின், பிராந்திய ஆதிக்க அரசு சார்பை பெற்றுள்ள தமிழ், முஸ்லிம் தரகு முதலாளித்துவ அரசியல் கட்சிகள், இவர்கள் பலருக்கு தனியான ஆயுதக் குழுக்களும் உண்டு. ரி.யு.எல்.எப். தொடக்கம் ஈ.பி.டி.பி. வரை. இவர்கள் சிறிலங்கா அரசின் தமிழின ஒடுக்குமுறை யுத்தத்துக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவுபவர்கள். சில சமயங்களில் சில விவகாரங்களில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் பொருளாதார அரசியல் அதிகார பேரங்களுக்காக அரசுடன் முரண்பட்டுக் கொண்டிருப்பவர்கள். புலிகளின் பாசிச நடவடிக்கைகளைக் காட்டி தமிழ் மக்களின் பிரதான எதிரியான சிறிலங்கா அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான முரண்பாட்டில், யுத்தத்தில் அரசுக்கு சேவகம் செய்யும் துரோக---

www.tamilarangam.net



---நிலைப்பாட்டினை மக்களுக்கு வழங்குபவர்கள். இவர்கள் புலிகளை மட்டுமல்ல தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும், போராடும் புரட்சிகர தேசபக்த ஜனநாயக சக்திகளையும் வேட்டுவைப்பவர்களும் கூட இவர்கள் முதலாவது பாதையினர். அடுத்து தமிழீழ மக்களின் தேசியக் கோரிக்கையின் பக்கம் நின்று யுத்தம் அரசுடன் நடத்தும் தமிழ் முதலாளிவர்க்கத்தின் (தேசிய, தரகு முதலாளி வர்க்கம்) அரசியல் பிரதிநிதியாக போராட்ட சக்தியாக இருக்கும் 'விடுதலைப் புலிகள்' இவர்கள் திட்டவட்டமான ஏகாதிபத்திய எதிர்ப்பு தன்மை அற்றவர்கள். தங்களைத் தவிர மற்றைய வர்க்க சக்திகளை செயற்பட மறுப்பு மட்டுமல்ல, தமிழ் முதலாளி வர்க்கத்தின் ஏகப்பிரதிநிதியாக நினைத்து செயற்படும் தனியாதிக்க 'பாசிச' சக்தியாகும்.

இவர்கள் தமிழ் தேசிய இன மக்களுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான முரண்பாட்டில் தமிழ் முதலாளி வர்க்கத்தின் பக்கம் நின்று போராடுவதால் ஒரு தேசிய சக்தியாக தன்னை போராடும் வரை அடையாளம் காட்டும். அதே வேளை பரந்துபட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் ஜனநாயக உரிமைகளை, போராடும் தேசபக்த ஜனநாயக சக்திகளை ஒடுக்கிய வண்ணம், தேசியப் போராட்டத்தில் தமிழ் முதலாளி வர்க்க 'பாசிச' ஆட்சியதிகாரத்தை தேசிய யுத்தத்தின் சிந்தப்படும் உதிரத்தின் மூலம் நிலைநிறுத்த முற்படுகிறது. எது எவ்வாறு இருப்பினும் சிறிலங்கா அரசுடன் போரிடும் வரை தமிழ்த் தேசியத்தின் பக்கம் தன்னை இனம் காட்டும். இது இரண்டாவது பாதை.

மூன்றாவது பாதை, இது இன்று நடைமுறையில் தமிழீழ அரசியல் போராட்ட அரங்கில் தாக்கம் செலுத்தாத பாதை. உருவாக்கி வளர்த்தெடுக்கப்பட வேண்டிய பாதை. தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப்போராட்டத்தை, இன்று பிரிந்து போகும் நிலையை முன் வைக்கும் வழியை ஏற்கும், தேசிய சிறுபான்மை (முஸ்லிம், மலையக) இனங்களின் சுயநிர்ணய உரிமையை, சுயாட்சியமைப்பை ஏற்கும், தொழிலாளிவர்க்க சித்தாந்த அரசியல் கட்சி வழிகாட்டலை ஏற்கும், தமிழீழ தேசிய கோரிக்கையுடன் மக்களின் ஜனநாயக கோரிக்கைகளையும் இணைத்துக் கொள்ளும் பரந்துபட்ட தமிழீழ மக்களின் அரசியல் போராட்ட பிரதிநிதியாக தன்னை வெளிப்படுத்தும் புரட்சிகர தேசபக்த ஐக்கிய முன்னணியாக விளங்கும். இது சிறிலங்கா அரசுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில், தமிழ்த் தேசியத்தின் பக்கம் நிற்கும் போராட்ட சக்திகளுடன் மேல் இருந்து கட்டப்படும் ஐக்கிய முன்னணி கொள்கையை பின்பற்றும், அதேவேளை பிரதான எதிரிகளுக்கு எதிரான இலங்கையின் ஏனைய போராட்ட முனைகளின் (சிறிலங்கா, மலையக) சக்திகளுடன் பிரதான எதிரிக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றிணைந்து போராடும். உலகளவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் போராட்டத்துக்கு ஆதரவை மனப்பூர்வமாக வழங்கும். தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை புரட்சிகர பாதையில், தொழிலாளி வர்க்க தலைமையில் முன்னெடுக்கும் புரட்சிகர தேசபக்த மக்களியக்க பாதையாகும்.

மூன்றாவது பாதை பற்றிய தேடலக்கூடாக வெளிப்படும் திசைவிலகலை கவனிப்போம். முதலாவது, "மூன்றாவது பாதை, மூன்றாவது பாதை" எனக்கூறிக் கொண்டு பாட்டாளிவர்க்க சித்தாந்தத்தை உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொண்டு ஒரு 'பாட்டாளி வர்க்க கட்சியை' கட்டுவது பற்றியோ அதன் தலைமையின் கீழ் 'ஐக்கிய முன்னணியை, மக்கள் இராணுவத்தை' உருவாக்குவது பற்றி எந்தவிதமான கருத்தும் வெளிப்படுத்தாமல் செய்யாது அடிப்படையில் மார்க்சிய,----

www.tamilarangam.net



---லெனினிய, மாஓ சிந்தனை தமது வழிகாட்டும் தத்துவம் என்பதைக் கூட முன்வைக்காத நிலையில் மூன்றாவது பாதை உருவாக்க வேண்டுமெனக் கூறுவதன் மூலம் தாங்கள் எந்தவிதமான அரசியல் அமைப்பை கட்டவுள்ளனர் என்பதையோ எத்தகைய தத்துவ வழிகாட்டி பாதையில் இயங்க தயாராகவுள்ளனர் என்பதை வெளிப்படுத்தாத போக்கு. குறைந்தது கடந்தகால அனுபவங்களை தொகுப்பதிலும், விமர்சனபூர்வமாக ஆய்வதில், சமகால அரசியல் போக்கை தெளிவுபடுத்துவதில், எதிர்கால வழியை கண்டறிவதில் மார்க்சிய லெனினிய ஆய்வுமுறை பின்பற்றபடவேண்டும். என்பதைக் கூட வெளிக்காட்டாத நிலை, இது ஒரு வகை.

அடுத்து பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு புரட்சிகர கட்சியை கட்ட வேண்டுமென வலியுறுத்துபவர்கள் மத்தியிலும் சிலர் கடந்த காலத்தில் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அது தற்போது பிந்து போகின்ற நிலையை முன்வைப்பதும் சரியென அங்கீகரித்த அதனடிப்படையில் செயற்பட்டவர்கள். இவர்கள் பெரும்பாலும் சிறுமுதலாளிய சந்தர்ப்பவாத மார்க்சிய இயக்கங்களில் மார்க்சியவாதிகளாகவும், மார்க்சிய பாதையை நோக்கி வளர்ந்து கொண்டிருந்தவர்களும் இவ் இயக்கங்களின் உடைவுகள் சிதறல்களால் அதிலிருந்து வெளியே வந்தவர்கள். தமிழீழ போராட்டத்தில் ஏற்பட்ட தேக்கநிலை காரணமாகவும், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்பான மாற்றங்களாலும் இன்று இவர்கள் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதாகவும் பிரிந்து போகின்ற கோரிக்கை என்பது முதலாளித்துவ தேசியவாதக்கோரிக்கை என்ற நிலைஎடுத்து ஐக்கிய இலங்கை புரட்சிதான் சாத்தியமானது, தேசிய சுயநிர்ணய உரிமைக்காக போராடுவது தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒரு பகுதிக் கோரிக்கை என வாதிடுபவர்கள். இவர்கள் தமிழீழ கோரிக்கை அதன் தொடக்க காலத்தில் இருந்தே முதலாளித்துவ தேசிய கோரிக்கையென முடிவு செய்கிறார்களா அல்லது சிறுமுதலாளித்துவ சந்தர்ப்பவாத மார்க்சிய தேசிய இயக்கங்களின் தோல்விகள் தேக்கநிலையில் இருந்தும் புலிகளின் ஆதிக்கத்துக்கு பின்னால் அத்தகைய நிலைப்பாட்டிற்கு வருகிறார்களா என்று தெரியவில்லை. ஐக்கிய இலங்கை புரட்சி பற்றி பேசி தேசிய இன முரண்பாட்டின் பிரதான நிகழ்ச்சிப் போக்கை காணத்தவறி அரசியல் அரங்கிலிருந்து ஒதுக்கப்பட்ட பழைய புகலிட மார்க்சியர்கள் சிலர் இப்போது கூடாக மீண்டும் இத்தகைய புதிய பரிவாரங்களுடன் ஐக்கிய இலங்கை புரட்சி பற்றி பேசவும் எழுதவும் முன்வந்துள்ளார்கள். தமிழீழ போராட்டத்தில் எத்தகைய இடது சாரி இயக்கமும் அற்ற நிலையில் இவர்களும் மூன்றாவது பாதை பற்றியே முன்வைக்கிறார்கள். தமிழீழ தொழிலாளி வர்க்கம் இலங்கையின் குறிப்பான சூழ்நிலையில் இனமுரண்பா-ட்டின் வேகம், அதன் பிரதான நிகழ்ச்சிப்போக்கு இன்னும் தீவிரம் அடைந்துள்ள நிலையில் பிரிந்து போகும் கோரிக்கையை கைவிடும் அளவுக்கு இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படாத நிலையில் தனது கோரிக்கையை கைவிட்டு ஐக்கிய இலங்கைப் புரட்சிப் பாதைக்கு மீண்டும் செல்வதானது புரட்சிகர மாக்கத்தை தேடுவதற்கு இயக்கத்தை கட்டுவதற்கு, பதில் ஒரு திசை விலகலாகவே அமையும்.

வேண்டுமானால் தமிழீழ தொழிலாளி வர்க்க முன்னணி சக்திகள் மத்தியில் நிலவும் தமிழ் குறுந்தேசியவாத போக்கை விமர்சிக்கவும் தேவையானால் கண்டிக்கவும் செய்யலாம், ஆனால் ஐக்கிய இலங்கைப்புரட்சி பற்றிய நிலைப்பாட்டுக்கு செல்வது சரியான தீர்வாகாது. தமிழீழ பிரிவினைக் கோரிக்கையை எதிர்க்கும் இவர்கள் மத்தியில் இன்னுமோர் கருத்தும் வெளிப்-படுகிறது. தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்----

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



---இவர்கள் தமிழ் மக்களின் தேசிய எல்லையை வரையறுப்பதும், வரைவதும் கூட ஒரு முதலாளித்துவ தேசியவாதம் என கூறமுற்படுகின்றனர். அப்படியானால் தேசிய இனங்களின் பாரம்பரிய பிரதேசங்களின் எல்லையை வரையறுப்புச்செய்யாத அல்லது தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தாலும் அதன் எல்லையை வரையறுத்துக் கொள்வதை ஏற்றுக் கொள்ளாத ஒரு சுயநிர்ணய உரிமையைப் பற்றி இவர்கள் பேசுகிறார்கள். இது மிகவும் எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டும். தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் இனவாத அரசால் சூறையாடப்பட்டு சிங்கள அத்துமீறல் குடியேற்றங்கள், நில ஆக்கிரமிப்புகள் தேசிய இன ஒடுக்கு முறையின் பிரதான வெளிப்பாடாக காணகின்ற நமது நாட்டில் தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வில் அது பிரிவினையை ஒடுக்கால் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் .தமிழ் தேசிய இனத்தின் பாரம்பரிய பிரதேசத்தின் ஒருமைப்பாட்டை உறுதிப்பாட் டை பேண வேண்டுமானால், தேசிய எல்லையை வரையறுப்பது தவிர்க்க முடியாதது என்பதை உணர வேண்டும்.

இறுதியாக தமிழீழ தேசிய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்காகவும், பிரிவினைக்கும் கடந்த காலங்களில் போராடியவர்களில் சிலர் இன்று பிரிவினையை நிராகரித்து தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்ற மேற்கூறிய திசை விலகல் பாதைக்கு சென்றதுடன் மேலும் ஆபத்தான நிலைப்பாட்டை முன்வைக்கிறார்கள். இவர்கள் ட்ரொஸ்கியவாத பாதையை இப்போது முன்மொழிகிறார்கள். நான்காவது அகிலக் கூட்டத்தாருடன் சுருசுருப்பாக பேசிக்கொண்டே மூன்றாவது பாதை பற்றி முன்வைக்கிறார்கள். இவர்கள் முன் வைப்பது தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் புரட்சி மட்டுமல்ல, ஐக்கிய இலங்கைப் புரட்சி கூட சாத்தியம் இல்லை. தனி ஒருநாட்டில் புரட்சி வெற்றி பெற முடியாது. உலகம் தழுவிய புரட்சிதான் ஒரே வழி என கூறுகிறார்கள். முதலாளித்துவத்தினதும்; ஏகாதிபத்தியங்களினதும் ஏற்றத்தாழ்வான சீரற்ற வளர்ச்சியையும் புறக்கணித்து இம்முடிவுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். இப்படியாக ஒரே மூச்சில் ட்ரொஸ்கியின் கால்களில் விழ்ந்து விட்டார்கள். இவர்களுக்கு ரசியா, சீனா, கிழக்கு ஐரோப்பியாவில் நடந்த முதலாளித்துவ மீட்சி வரப்-பிரசாதமாகிவிட்டது. தமிழீழம் பிரிவது என்ற கோரிக்கை ஏற்றுக் கொண்டிருந்த போது, இவர்களது எழுத்துக்களிலும், சட்டைப் பையிலும் வாழ்ந்த தோழர் ஸ்ராலின் இன்று இவர்களது பரமவிரோதியாகி விட்டார். உலகளவில் ஏகாதி-பத்தியமும், நவீன திரிபுவாதிகளும், ட்ரொஸ்கியவாதிகளும் கட்டவிழ்த்து விட்டுள்ள மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனை எதிர்ப்பு மார்க்கத்தாலும், நவீன தத்துவங்களாலும் ஆகர்சிக்கப்பட்டுள்ளனர், கட்டிப் போடப்பட்டுள்ளனர். ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் இவர்களின் புகலிடம் இருப்பதால் அங்கு ட்ரொஸ்கியத்தையும் லெனினியத்தையும் இணைக்க தொழிலாளி வர்க்கத்துக்கு வழிகாட்ட விரும்பும் நவீன ட்ரொஸ்கியவாதத்தின், அமைப்புகளின் தாக்கம் இவர்களை முற்றாகவே திசை திருப்பி சீரழித்துள்ளது இந்த ட்ரொஸ்கியவாத திசைவிலகல்காரர்களும் 'மூன்றாவது பாதையை' 'மக்கள் பாதையை' உருவாக்குவது வளர்ப்பது பற்றி முன்வைக்கிறார்கள்.

ஆகவே மேற்பார்த்த சந்தர்ப்பவாத வழிகாரர்கள்., திரிபுவாத பாதையாளர்கள், ட்ரொஸ்கியவாதிகளின் மூன்றாவது பாதைக்கும் புரட்சிகர பாட்டாளி வர்க்க சக்திகளின் மூன்றாவது பாதைக்கும் இடையில் மடுவிற்கும் மலைக்கும் இடையிலான வேறுபாடு தத்துவார்த்த நிலையிலும், அரசியல் அமைப்பு கண்ணோட்டத்திலும் உண்டு என்பது தெளிவாகும்.

தேசிய ஒடுக்குமுறை இன யுத்தம் நடந்து கொண்டிருக்கின்ற நமது நாட்டில் நடைமுறையில் ஒரு புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சி யுத்தத்தில் தலையீடு செய்கின்ற நிலை இல்லாதிருக்கின்றபோது புரட்சிகர அரசியல் பங்கு வகிக்காது இருக்கின்ற போது (பிரதான பங்கு மட்டுமல்ல — ஒரு பகுதி பங்கை கூட) புரட்சிகர தேசபக்த சக்திகளின் பலம் வாய்ந்த ஐக்கிய முன்னணியை நாம் எங்கே போய் தேடமுடியும்.. கண்ணே இல்லாத போது பார்வை எப்படி இருக்கும் எனவே, நாம் ஒன்றை மட்டும் தெளிவாக புரிந்து கொள்வோம். போராட்ட களத்திலிருந்தும், யுத்தத்திலிருந்தும் அன்னியப்பட்டு நின்று ஒரு புரட்சிகர கட்சியைக் கட்டிவிட முடியாது, என்பதே அது. நாம் புரிந்து கொண்டிருக்கின்ற மார்க்சிய லெனினிய மா ஓ சித்தாந்தத்தை நமது நாட்டின் ஸ்தூலமான சமுதாய செயற்பாடுகளுடனும், தேசியப் போராட்ட நடவடிக்கைகளுடனும் இணைத்து பிரயோகித்தாக வேண்டும். அதைவிடுத்து நேரடியாக 'தத்துவ புத்தகங்களுடன் ஒருமைப்பாடு காண்பதும், அப்படிப் புத்தகத்துடன் ஒருமைப்பாடு கண்டவர்களை கொண்டு தேடிபிடித்து கட்சியை கட்டுவது அல்லது அனுபவவாத பாதையில் செல்வதென்பது, மீண்டும் தோல்விக்கும், திசைவிலகலுக்கும் இட்டுச்செல்லும் என்பதை வளர்ந்துவரும் புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில், சிறு முதலாளித்துவ சுத்த இராணுவ சித்தாந்தத்தின் இருப்பும், சந்தர்ப்பவாத மார்க்சியத்தின் எழுச்சி அலை ஓய்வுக்கு பின்னும், உயிர்த்துடிப்புடன் எழுந்து நிதீவருகிற புரட்சிகர தேசபக்த எண்ணம் கொண்ட இளம் தளிர்கள், ஒவ்வொன்றும் உண்மையான மக்கள் விடுதலைப் பாதையை மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனைப் பாதையை கண்டுபிடிக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சந்தர்ப்பவாத அரசியலும், நவீன திரிபும், ட்ரொஸ்கியவாத பாதையையும் நோக்கிச் செல்லும் மூன்றாவது திசை விலகல் பாதையில் தலைகாட்டும் திசை விலகலை நிராகரிக்க வேண்டும் புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சியைக் கட்டும், அதன் தலைமை வழிகாட்டலை ஏற்றுக் கொள்ளும் முற்போக்கு தேசபக்த சனநாயக சக்திகளின் "பலம்மிக்க ஐக்கிய முன்னணியை!" உருவாக்கும் புரட்சிகரமான மூன்றாவது பாதையை நோக்கி அணி திரள வேண்டும்.

மீண்டும் எழுகிறது

கொம்யூனிசம்
விழவில்லை, காலமாகி விடவில்லை
போலிக் கொம்யூனிசம்
வீழ்ந்தது

மீண்டும்
எழுகிறது
புதியதென்புடன்
உண்மைக்
கொம்யூனிஸ்ட்டுகளும், கொம்யூனிசமும்

மீண்டும்
முதலாளித்துவ ஏகாதிபத்தியத்துக்கும்
போலிக் கம்யூனிசத்துக்கும்
சாவு மணியடிக்கும்
புதிய சகாப்தம்.

www.tamilarangam.net



*****************

## தேசிய சக்தி (உயிர்ப்பு)

*****************

கடந்த இதழில் புலிகளை தேசிய சக்தியாக மதிப்பிடுவது தொடர்பாக எமது கருத்துகளை முன்வைத்திருந்தோம். இச் கருத்துக்கள் தொடர்பாகவும், எமக்கு நேரடியாக கிடைத்த விமர்சனங்கள், கருத்துகளின் அடிப்படையிலும் ஏனைய சஞ்சிகைகளில் வந்த கருத்துகள் தொடர்பாகவும் இப்போது விரிவாக பரிசீலிக்க முயல்வோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று அடைந்துள்ள தேக்க நிலை சமூக உணர்வுள்ள அனைவருக்கும் கவலை அளிப்பதுதான். இதனைக் கடந்து விட வேண்டும். போராட்டம் பிற்போக்கு சக்திகளின் தலைமையிலிருந்து மீட்டெடுக்கப்பட்டு புரட்சிகர சக்திகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற உணர்வும் பரவலாக வெளிப்படஅவே செய்கிறது ஆனால் இந்த மகத்தான பணியை எங்கிருந்து தொடங்குவது என்பது தான் விவாதத்திற்குரியதாக இருக்கிறது. இன்று உள்ள யதார்த்த நிலமை சகிக்க முடியாத அளவிற்கு மோசமானதுதான். ஆனால் இதனை வெறுமனே திட்டித் தீர்த்துவிடுவதன் மூலம் கடந்துவிட முடியாது. போராட்டத்தில் ஏற்பட்ட பிளவுகள், பின்னடைவுகள், இவற்றின் விளைவாக போராட்டத் தலைமை 'பாசிச' சக்திகளுக்கு சென்றது. என்பவற்றில் எதிரியின் சதிகள், ஊடுருவல்கள் போன்ற புறக்காரணிகள் பங்களித்துள்ளன என்பதும் உண்மையே. எனினும் எல்லாப் பிரச்சினைகளையும் புறக்காரணிகள் மீது சுமத்தி விட்டு சமூக உணர்வுள்ள சனநாயக, முற்போக்கு, புரட்சிகர சக்திகள் தப்பித்துக் கொள்ள முடியாது. உண்மையிலேயே இந்த பின்னடைவுகளிலிருந்து மீண்டுவிட விரும்பினால் "கடந்த காலம் முழுவதையும் அலசி ஆராய வேண்டும்" என்ற சமரின் கருத்துடன் நாம் முழு உடன்பாட்டைக் கொண்டுள்ளோம்.

தேசிய விடுதலைப் போராட்டம் உருவான நிலமைகள், மக்களின் எதிர்பார்ப்புகள், போராட்டத்தில் ஈடுபட்ட சக்திகளின் தன்மைகள், அந்த சக்திகள் போராட்டத்தில் பதித்த முத்திரைகள், இன்று போராட்டத்தின் தலைமை 'பாசிச' சக்திகளின் கரங்களுக்கு சென்றதற்கு காரணமாக அமைந்த முற்போக்கு சக்திகளின் கடந்த கால தவறுகள் போன்ற ஒவ்வொன்றும் கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலிக்கப்படுவதும், இந்த பரிசீலனைகளில் இருந்து புரட்சிகர சக்திகள் முக்கியப் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வதும் அவசியமாகின்றது. இந்த வகையில் கடந்த காலத்திலும் தற்போதும் அரங்கிற்கு வந்து போன பல்வேறு சக்திகள் பற்றியும் ஒரு தெளிவான நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்வதும் அவசரத் தேவையாகிறது.

இன்று இன்னும் சில குரல்களை கேட்கிறோம்.

" புலிகள் பற்றிய ஆய்வுகள் தேவைதானா ----? புலிகளின் தாக்குதல்களை மதிப்பிடுகையில் 'ரெய்திங்கதிர்' படிப்பது போன்று இருக்கிறது. புலிகளின் நடத்தைக்கு அவர்களுக்கு அரசியல் தெரியாதது காரணமல்ல----." " இப்படி பல ஆட்சேபனைகள் புலிகளை மதிப்பிடுவது தொடர்பாக எழுப்பப்படுகிறது. அப்படியாயின் புலிகள் தொடர்பான மதிப்பீடு ஏன் தேவைப்படுகிறது.

இன்று எமது மண்ணில் ஒருயுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. சமூக அக்கறையுள்ள ஒவ்வொருவருமே யுத்தம் தொடர்பாக ஒரு நிலைப்பாட்டை எடுத்தாகவேண்டும். நடப்பது ஒரு தேசிய விடுதலை யுத்தம் எனக்கருதி பேரினவாதத்திற்கு எதிராக போரிடும் புலிகளை பலப்படுத்துவதா? அல்லது

www.tamilarangam.net



புலிகளின் 'பாசிசத்தை' தமிழ் மக்களின் முதல் எதிரியாக கருதி அதற்கு எதிராக போராடுவதாக கூறும் சிறிலங்கா அரசை பலப்படுத்துவதா? இது உடனடியாக விடை காணப்படவேண்டிய கேள்வியாகும். உண்மையில் இந்த ஆய்வுக்கு ஊடாகத்தான் மூன்றாவது பாதை அல்லது மாற்று தலைமை பற்றிய கருத்து உதயமாகிறது. மூன்றாவது பாதை அல்லது மாற்று தலைமை பற்றிய கருத்தை தெளிவுபடுத்தி கொள்வதற்கும் இந்த பரிசீலனையை இன்னும் ஆழப்படுத்துவது அவசியமாகிறது.

"உன்னையும் எதிரியையும் அறிந்திருந்தால் தோல்வியின்றி நூறு சமர்களை நடத்தலாம்" என்பது முதுமொழி. இந்த வகையில் இன்றைய போராட்டத்தில் ஒருபுரட்சிகர மாற்று தலைமை உருவாக வேண்டும் என்று விரும்பும் எவருமே போராட்டத்தின் இன்றைய நிலைமைகள். இந்த நிலைமைக்கு இட்டுசென்றதில் புலிகளினதும், ஏனைய அமைப்புக்களினதும், மற்ற போக்கு சக்திகளினதும் கடந்த கால பாத்திரம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதை தவிர்த்துவிடமுடியாது. இந்த வகையில் புலிகள் பற்றிய மதிப்பீடும் தட்டிக்கழிக்க முடியாத ஒரு அவசர பணியாகும். இதனால் புலிகளின் சிந்தனை முறை, அரசியல், அமைப்பு வேலைமுறை பின்னால் உள்ள வர்க்க சக்திகள், இராணுவ உபாயங்கள்-------போன்ற போன்ற ஒவ்வொன்றுமே விரிவாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். இந்த அம்சங்கள் ஒவ்வொன்றும் நெருக்கமாக பின்னிப் பிணைந்தவை. இறுதி ஆய்வுகளில் அவர்களது வர்க்க நிலைமைகளால் தீர்மானிக்கப்படுபவை. புலிகள் யாரை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் மிகவும் முக்கியத்துவம் பெறும் பிரச்சனையாகிறது. கேள்வியாகிறது.

எமது மதிப்பீடுகளில் இருந்து புலிகள் தமக்கு சாதகமான சில பகுதிகளை மட்டும் பிரித்தெடுத்து, அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு சென்று தம்மைப் பலப்படுத்திக் கொள்ள பயன்படுத்துவதால், இந்த ஆய்வுகள் புலிகளைப் பலப்படுத்தும் ஒரு வேலையைத்தான் செய்து முடிக்கிறது என்ற அபிப்பிராயமும் நிலவுகிறது. ஒரு சக்தியை சரியாக மதிப்பிட வேண்டுமானால், முதலில் அதனை புறநிலையாக, நமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் வைத்து மதிப்பிட கற்றுக்கொள்ள வேண்டும். நம்மைப் பற்றியோ, நாம் வெறுக்கும் ஒரு சக்தியைப்பற்றியோ மதிப்பிடுகையில் அங்கு விருப்பு வெறுப்புகளுக்கு இடங்கொடுத்து விட்டால் உண்மையான நிலைமைகளை கண்டு கொள்வது சாத்தியப்பட மாட்டாது. இதனால் இந்த மதிப்பீடுகள் எமது சொந்த செயற்பாடுகளுக்கு வழிகாட்ட உதவ மாட்டாது; ஏனெனில் அவை திருத்தமான, விஞ்ஞான பூர்வமான உண்மைகளை அல்லாமல் ஒருவரது சொந்த விருப்பு வெறுப்பு சம்பந்தப்பட்ட விடயமாகி விடுகிறது. ஆதலால் விஞ்ஞான பூர்வமான, புறநிலையான மதிப்பீடு என்பதையும் ஒருவரது சொந்த விருப்பு வெறுப்புகளையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

எதிரியை ஒருவர் மோசமாக வெறுக்கலாம். ஆனால் இந்த வெறுப்பானது அவரது பலமான அம்சங்களை இனங்கண்டு கொள்ளத்தடையாக அமைந்துவிடக் கூடாது. புரட்சியாளர்களது நோக்கம் எவ்வளவுதான் உயர்ந்ததாக இருப்பினும்கூட அவர்கள் தமது சொந்த பலவீனங்களை இனங்கண்டு கொள்ள இந்த உயர்ந்த நோக்கங்கள் தடையாக அமைந்துவிடக்கூடாது. இப்படியாக-----

www.tamilarangam.net



---எதிரியினதும் தம்முடையதும் பலமான அம்சங்களையும் பலவீனமான அம்சங்களையும் தமது சொந்த விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட விதத்தில் மதிப்பிட முடிந்தால் மட்டுமே புரட்சியாளர்கள் தமது பலமான அம்சங்களில் தாக்குவது சாத்தியப்படும். இப்படியாக மட்டுமே புரட்சிகர சக்திகள் புறநிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதும், தலைமையை தாம் கையேற்பதும் சாத்தியப்படும். எமது மதிப்பீட்டில் நாம் வெளிப்படுத்தும் புலிகளின் பலமான அம்சங்கள் பற்றிய விடயங்களை ஒரு குறுகிய காலத்திற்கு புலிகள் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு இருக்கவே செய்கிறது. இதனைத் தவிர்ப்பதற்காக, முழுமையா மதிப்பீடுகளை தவிர்க்க முனைந்தோமானால் புறநிலை யதார்த்தத்தை புரிந்து கொள்ளத் தவறிவிடுவோம். இது மாற்று வழிமுறைகள் பற்றிய தெளிவைத் தராதல மாற்றுத் தலைமையை கொடுக்க முனையும் புரட்சிகர சக்திகளுக்கே உண்மையில் பெரிய இழப்பாகும்.

மக்களிடம் கொண்டு போவது என்னும் விடயத்தை எடுத்துக் கொண்டால், பகுதி உண்மைகள் மக்களை பற்றிப் பிடிக்க மாட்டா, அரை குறையான ஒரு பக்க விமர்சனங்கள் ஒரு போதும் மக்களின் உணர்வுகளைத் தொடுவதில்லை. ஏனெனில் அவை மக்கள் அன்றாடம் தமது சொந்த வாழ்வில் பெறும் தனிப்பட்ட சில அனுபவங்களுக்கு எதிரானதாக அல்லது அந்த அனுபவங்களை மறைத்து விடுவதாக இருப்பதால் அந்தக் கருத்துக்களில் மக்களுக்கு சந்தேகமே ஏற்படுகிறது. மக்கள் தமது சொந்த வாழ்வினூடாகவும், போராட்டத்தினூடாகவும் சரியான கருத்துக்களையும் தவறான கருத்துக்களையும் வேறுபிரித்தறிந்து கற்றுக் கொள்வார்கள். மக்களின் இந்த ஆற்றலில் நம்பிக்கை வைத்தே புரட்சியாளர்கள் செயற்பட வேண்டும். இன்று நடைபெறும் விவாதங்களின் பிரதான நோக்கமே முற்போக்கு சக்திகள் தமக்கிடையே கருத்துப் பரிமாற்றங்களை நடத்தி ஒரு பொதுவான நிலைப்பாட்டிற்கு வருவதேயாகும். இப்படியாக ஒரு பொதுவான நிலைப்பாட்டை அடைவதிலும் அதனூடாக பொதுவான திட்டத்தின் அடிப்படையில் இணைந்து வேலை செய்வதிலும் சனநாயக, முற்போக்கு, புரட்சிகர சக்திகள் வெற்றி பெறும் பட்சத்தில் மக்கள் மத்தியில் கருத்துக்களை கொண்டு போவதற்கான மிகவும் சிறப்பான வழிமுறைகளை உருவாக்கிக் கொள்வது சாத்தியமே. அப்போது புலிகள் தற்காலிகமாக அடையும் இன்றைய பகுதிவெற்றிகளை நிரந்தரமாகவும் முழுமையாகவும் இழக்க நேரிடும். ஏனெனில் உண்மைகள் மக்களுக்கு நன்மையளிப்பவை என்பதால் மக்களுக்கு மிகவும் நெருக்கமானவை.

இதுவரையில் நடைபெற்ற விவாதங்களை அவதானிக்கும் சிலரிடம் கசப்புணர்வுகள் தோன்றுவதை உணர முடிகிறது. மாற்று அமைப்பைக் கட்டுவதை நோக்கமாகக் கொண்டு தமக்குள் ஒற்றுமைப்பட வேண்டிய முற்போக்கு சக்திகள் புலிகளை எவ்வாறு மதிப்பிடுவது என்ற பிரச்சனையில் தமக்குள் மோசமான சர்ச்சைகளை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள். இந்த விவாதங்களை முற்போக்கு சக்திகளை பிளவுபடுத்துவதற்கே அதிகம் பயன்பட்டுள்ளன என்று இவர்கள் கருதுகிறார்கள். இந்த கருத்திலும் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது. ஆனால் இதற்கு காரணம் புலிகளை மதிப்பிடுவது பற்றிய பிரச்சனை அல்ல. இந்த விவாதம் நடத்தப்படும் முறையே என்பது எமது அபிப்பிராயமாகும். முற்போக்கு சக்திகள் ஆழமான விவாதத்தினூடாக தமக்கிடையில் கருத்துக்களை விரிவாக பரிமாறி அதற்கூடாக ஒரு பொதுவான இணக்கத்திற்கு வருவதே நமது நோக்கம் எனக் கருதினால் எப்போதும் அந்த உயர்ந்த நோக்கத்தை மனதில் இருத்திக் கொண்டு மிகுந்த பொறுப்புணர்வுடன் ஆக்கபூர்வமான விவாதத்தை நடத்த வேண்டும்.

www.tamilarangam.net



1) எதிர்த்தரப்பார் கூறுவதை ஊன்றிக் கவனித்து அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை முழுமையாக கிரகித்துக் கொள்வதும்,..
2) தாம் எதிர்த் தரப்பாரிலிருந்து எந்த விதத்தில் வேறுபடுகிறார்கள் என்பதை எதிர்த் தரப்பாரும் புரிந்து கொள்ளும் விதத்தில் தமது கருத்துக்களை தெளிவாக வெளிப்படுத்துவதும்,..

ஒரு ஆரோக்கியமான விவாதத்திற்கு அவசியமானதாகும். வாதங்களில் வார்த்தை ஜாலங்கள், சொல்லலங்காரங்கள், வியாக்கியானங்கள் என்பவற்றில் அக்கறை செலுத்தாமல் தரவுகள், ஆதாரங்கள், முரணற்ற தர்க்கம் போன்றவற்றில் கவனம் செலுத்துவது இந்த விவாதத்தைப் பலப்படுத்தும்.

இங்கு நாம் நடத்தும் விவாதம் எதிரியை அம்பலப்படுத்தும் நோக்குடன் நடத்தும் விவாதம் அல்ல. சமூக அக்கறையுள்ள முற்போக்கு முகாமினுள் நடக்கும் விவாதம் என்பதையும் கருத்திற் கொள்வது நன்று. முற்போக்கு சக்திகள் தமக்குள் சுமுகமான உறவுகளை ஏற்படுத்துவது விவாதங்களை ஆரோக்கியமாக நடத்தி, பொதுவான கருத்து இணக்கத்திற்கு வருவதன் மூலம் மட்டுமே இந்த ஐக்கியம் சாத்தியப்படும். எதிர்காலத்திலும் போராட்டத்துடன் தொடர்புடைய பல்வேறு விடயங்களிலும் கருத்து வேறுபாடுகள் எழுவதும், அவை ஜனநாயகபூர்வமான விவாதங்கள் மூலமாக தீர்க்கப்படுவதும் தவிர்க்கமுடியாதவை என்பதால் விவாதங்கள் நடத்தும் முறையில் இப்போதே போதிய கவனம் எடுப்பது அவசியமானது.

**மறைமுகமான 'விவாதம்'**

புலிகளை மதிப்பிடுவது தொடர்பான விவாதங்களை ஊன்றிக் கவனிக்கும் எவருமே இந்த விவாதங்களினூடாக இன்னோர் கருத்துப் போராட்டம் பின்புலத்தில் நடப்பதை அவதானிக்கலாம். தேசியத்தை எவ்வாறு மதிப்பிடுவது என்பதே அந்த விவாதமாகும். தேசியவாதம் என்பதே முதலாளித்துவ மோசடி என்று சிலர் வாதிடுகிறார்கள். இன்னும் சிலரோ, இன்றைய போராட்டத்தில் பின்னடைவுகளுக்கெல்லாம் காரணம் தேசியத்தை முன்னெடுத்ததே என்கிறார்கள். இவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நிராகரித்து விட்டு ஐக்கியப்பட்ட புரட்சியை முன்மொழிகிறார்கள். புலிகளை மோசமான சமூக விரோத சக்தியாக அடையாளம் காட்டி புலிகளை நிராகரிப்பதன் மூலம் முழுத் தேசியத்தையுமே நிராகரிக்க முனைகிறார்கள். தேசிய விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்தியத்தின் கரங்களில் சிக்கவைத்து விடும் என்றும், இனவாதத்தை இன்னும் கிளறிவிடவே பயன்படும் என்றும் அச்சம் கொள்கிறார்கள். இன்னோர் பகுதியினர் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்துக் கொண்டே புலிகளை விமர்சிக்கிறார்கள். ஆனால் இவர்கள் மத்தியிலும் கூட தேசிய நிகழ்வுப் போக்கு குறித்து பொதுவான விளக்கம் இருப்பதாகக் கூறமுடியாது.

தேசிய நிகழ்வுப் போக்கு குறித்து ஒரு பொதுவான விளக்கத்தை எட்டாது, இப்படியாக எதிரெதிர் நிலைகளில் நின்று கொண்டு புலிகளின் தேசியத் தன்மை என்ற விடயத்தை விவாதித்து தீர்க்கமுடியும் என்று நாம் கருதவில்லை. எனவே தேசிய நிகழ்வுப் போக்கை எவ்வாறு மதிப்பிடுவது என்பதில் எமது முதன்மையான கவனத்தைக் குவிப்பது அவசியம் எனக் கருதுகிறோம். ___

www.tamilarangam.net



--புலிகளை மதிப்பிடுவது தொடர்பாக மட்டுமல்ல. இலங்கையின் புரட்சி பற்றிய அக்கறையுடைய எவருமே இலங்கையில் தேசிய முரண்பாடுகள் இவ்வளவு தீவிரமடை-ந்திருக்கும் நிலையில் தேசியத்தை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதில் தெளிவைப் பெறாத வரையில் மேற்கொண்டு இலங்கையில் புரட்சிகர மாற்றங்கள் எதிலுமே (ஐக்கியப்பட்ட புரட்சியோ தேசிய விடுதலைப் போராட்டமோ) எந்தவிதமான சாத்திரமான பங்கும் ஆற்ற முடியாது.

தேசியத்தை எவ்வாறு புரிந்து கொறளது எனும் விடயம் என்றோ நடந்து முடிந்த விவாதம் என்று சிலர் கதைக்கலாம். ஆனால் புலிகளை மதிப்பிடுவது தொடர்பான விவாதத்தில் கலந்து கொள்பவர்களில் பலரும் அவ்வாறு கருதவில்லை என்றேபடுகிறது. பலர் ஐக்கியபட்ட புரட்சி - தேசிய விடுதலை என்பதில் ஆரோக்கியமான விவாதம் நடத்தபடவில்லை என்று வெளிப்-படையாகவே சுட்டிக் காட்டியுள்ளார்கள். "சுயநிர்ணய உரிமைக்காகப் போராட வேண்டும், ஆனால் இன ஐக்கியத்தை வலியுறுத்த வேண்டும்" எனும்போது இந்த தேவையை உரைவே செய்கிறோம். தேசிய நிகழ்வுப் போக்கை எவ்வாறு புரிந்து கொள்வது? சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? பிரிந்து செல்வதை எந்த நிலையில் மார்க்சியவாதிகள் (கொம்யூனிஸ்ட்டுகள்)(பாட்டாளி வர்க்க புரட்சியாளர்கள்) அங்கீகரிக்கிறார்கள்? அப்படி பிரிந்து போவதை அங்கீகரித்தால் அப்போது ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசங்களைச் சேர்ந்த மார்க்சியவாதிகளின் (கொம்யூனிஸ்ட்டுகள்-பாட்டாளி வர்க்க புரட்சியாளர்கள்) கடமை என்ன? இலங்கையில் தேசிய முரண்பாட்டின் தன்மை பிரிவினையை ஏற்கக் கொள்ளும் நிலையில் இருக்கிறதா? போன்ற கேள்விகளுக்கு முக்கியத்துவத்தைக்கொடுத்து இவை தொடர்பான விடயங்களை விரிவாக விவாதித்து தீர்வு காண முற்போக்கு சக்திகள் முனைய வேண்டும் எனக் கருதுகிறோம். ஏனெனில் ஐக்கியப்பட்ட புரட்சியை வலியுறுத்துபவர்கள் மத்தியிலும் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பவர்கள் மத்தியிலும்கூட இவை தொடர்பான விவாதங்களில் திட்டவட்டமான நிலைப்பாடுகளை காணமுடியவில்லை கடந்த காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட பல்வேறுகுழுக்களும் தனிநபர்களும் இதன் காரணமாக பல சந்தர்ப்பங்களில் ஊசலாட்டத்தைக் காட்டினார்கள். இன்று மாற்று அமைப்பை உருவாக்குவது எனும் நோக்கில் தத்துவார்த்த விடயங்களை விவாதித்து தீர்ப்பது என முனையும் போது இந்த விடயங்கள் முக்கியத்துவம் பெறுவது புரிந்து கொள்ளத் தக்கதே. மேலே கூறப்பட்ட வினாக்கள் தவிர்க்க முடியாதவாறு இன்னும் சில வினாக்களுக்கு இட்டுச் செல்கின்றன. இன்றைய நிலையில் மார்க்சியவாதியாக (கொம்யூனிஸ்ட்டுகளாக, பாட்டாளி வர்க்க புரட்சியாளராக) இருப்பது என்பதற்கு அர்த்தம் என்ன? புரட்சிகர போராட்டங்கள் முனைப்பாக நடைபெறும் குறைவிருத்தி நாடுகளை பொறுத்தவரையில் புரட்சிகரகட்சி, பாட்டாளி வர்க்கத் தலைமை என்பவற்றை எவ்வாறு புரிந்து கொறவது?

மேலெழுந்த வாரியாக பார்க்கும் போது இந்தக் கேள்விகள் முக்கியத்துவமற்றதாக படலாம். ஆனால் இந்த அடிப்படையான விடயங்களில் தெளிவு ஏற்படுத்திக் கொள்ளாமல் ஒரு பொதுவான திட்டத்தை நோக்கி முன்னேறுவதோ அல்லது இன்று எமக்குள் நடக்கும் விவாதங்களுக்கு முடிவுகளை காண்பதோ சாத்தியப்படாது. இந்த விடயங்களில் நாம் எதிர்கால-த்தில் முதன்மையான கவனத்தை குவிப்பது அவசியம் எனக் கருதுகிறோம்.

www.tamilarangam.net



## பொருளாதாரவாதம் குறித்து

தேசியசக்தி பற்றிய விவாதத்தைத் தொடங்கு முன்பு தேசியம்பற்றி ஒரு மேலெழுந்த வாரியான, பருமட்டான வரையறையை வகுத்துக்கொள்வதன் அவசியம் கருதி சென்ற கட்டுரையில் தேசியத்தை முதலாளித்துவத்துடன் தொடர்புபடுத்தி வரையறுக்க முயன்றோம். இந்த வரையறை பற்றி 'மனிதம்' சஞ்சிகையில் விமர்சிக்கும் கரிகாலன் எமது கருத்து பொருளாதாரவாதத் தொ பாற்பட்டது என்கிறார்.

நவீன தேசம் பற்றிய கருத்தாக்கமானது 18ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியின் பின்பே பிரெஞ்சுப் புரட்சியுடனேயே உருவானது என்பதும், முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் தேசிய இயக்கங்களின்இரண்டு கட்டங்களை லெனின் குறிப்பிட்டுக் காட்டுவதும், இந்தக் கருத்துக்கள் அண்மைக்காலம் வரையில் சர்ச்சைக்குரியதாக இருக்கவில்லை என்பதும், இன்றுங்கூட மரபுவழி இடதுசாரிகள் இந்தக் கருத்தின் அடிப்படையிலேயே தேசியத்தை விளக்க முனைவதும் உண்மையே. ஆனால் ரசியப் புரட்சிக்குப் பிற்பட்ட காலங்களில் காலனித்துவ நாடுகளிலும் ஏனைய குறைவிருத்தி நாடுகளிலும் தேசிய இயக்கத்தின் தோற்றத்தையும், தேசங்களின் ஒன்று கலத்தல் நடைபெற்று முடிந்துவிட்டதாகக் கருதப்பட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளிலுங்கூட தேசிய இயக்கங்கள் தோன்றுவதையும் இந்த கருத்தால் விளக்க முடியாது. எனவே இதற்குமேல் தேசியத்தை முதலாளித்துவத்தின் வளர்ச்சி என்ற பொருளாதார காரணியை மட்டும் கொண்டு விளக்குவதில் சிரமங்களை எதிர் நோக்கவே செய்கிறோம். இன்று பல மார்க்சியவாதிகள் வேறுபட்ட கோட்பாடுகளை இது தொடர்பாக முன்வைக்கிறார்கள். இவற்றை இன்னோர் சந்தர்ப்பத்தில் விரிவாக பரிசீலிப்போம். பொருளாதார வாதம் பற்றிய விமர்சனத்தை முன் வைக்கும் கரிகாலனிடம் வாசகர்கள் தேசியம் பற்றிய விரிவான விளக்கத்தை எதிர்பார்ப்பது நியாயமே. ஆனால் இவரது விமர்சனம் தேசியத்தை விரிவாக புரிந்து கொள்ள எந்தவிதமான பங்களிப்பையும் செய்யவில்லை. புலிகளை மதிப்பிடுகையில் இவர் முன் வைக்கும் 'குழுநலன்' பற்றிய கருத்தாக்கத்தை இந்தக் கட்டுரையில்பின்பகுதியில் விரிவாக பரிசீலிப்போம்.

பொருளாதார வாதம் பற்றிய கருத்தாக்கத்தை இங்கு சற்று விரிவாக பார்ப்பது பயனுள்ளதாக அமையுமெனக் கருதுகின்றோம். சமூக இயக்கத்தை, வரலாற்றை எவ்வாறு புரிந்து கொள்வது என்ற கேள்வி பல காலமாகவே எழுப்பப்பட்டு வந்துள்ளது.. வரலாறானது தற்செயல் நிகழ்ச்சிகளின் தொகுப்பு எனவும் , தனிமனிதனின் சித்தாந்தத்திலிருந்து பிறப்பதாகவும் விளக்க முனைந்தவர்கள் இந்த தற்செயல்களதும் தனிமனிதர்களதும் தோற்றத்திற்கான காரணத்தை இறுதியில் கடவுளால் முன்பே தீர்மானிக்கப்பட்ட விதியில் கண்டார்கள். இதன்படி வரலாறு, சமூக இயக்கங்கள் போன்றவற்றை விளக்குவது என்பது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகவும், முழுக்க தற்செயல் நிகழ்வுகளினூடாகவும் நடைபெறும் ஒரு புரியாப் புதிராகவுமே விளங்கியது. வரலாற்று ஓட்டத்தில் முன்பு பரந்துபட்ட மக்கள் கைகளைக் கட்டிக் கொண்டு ஒன்றும் செய்யமுடியாது திகைத்துக் கொண்டிருக்கும் மந்தைகளாகவே கருதப்பட்டனர். வரலாற்றை முதன் முதலில் விஞ்ஞான பூர்வமாக விளக்க முயன்ற கார்ல் மார்க்ஸ், சமூக வாழ்வின் பல்வேறு தளங்களில் இருந்து பொருளாதார தளத்தை வேறுபிரித்தும், பல்வேறு உறவுகளிலிருந்து உற்பத்தி உறவுகளைத் தனிமைப்படுத்தியும், இவற்றை—

www.tamilarangam.net



---அடிப்படையான, முதன்மையான, ஏனைய உறவுகளை நிர்ணயிக்கும் காரணியாகக் காட்டினார். சட்டஉறவு பற்றியும் அரசியல் வடிவங்கள் பற்றியுமான விளக்கங்களை அவற்றிலிருந்தோ அல்லது மனித மனத்தின் பொதுவான வளர்ச்சியிலிருந்தோ தேடாமல் வாழ்வின் பொருளாதார நிலையிலிருந்து தேடச் சொன்னார். 'சிவில் சமூகம்' பற்றிய விளக்கத்தை அரசியல் பொருளாதாரத்தில் தேடச் சொன்னார். உற்பத்தி உறவுகளின் மொத்தமே சமூகத்தின் பொருளாதார கட்டுமானத்தை உருவாக்குகிறது. இதுவே உண்மையான அத்திவாரமாகும். இதிலிருந்தே சட்ட, அரசியல் மேற்கட்டுமானங்களின் குறிப்பிட்ட வடிவங்களாகிய சமூக உணர்வுகள் எழுகின்றன எனக் காட்டினார். இதுவே வரலாற்றை புரிந்து கொள்வதற்கான திறவு கோலாயிற்று.

அடுத்தடுத்து, வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி முறைகளில் ஏற்படும் மாற்றங்கள் சமூக உறவுகளில் அவற்றிற்கேற்ப ஒத்த தன்மையுள்ள மாற்றங்களை உருவாக்குவதைச் சுட்டிக்காட்டினார். இதன் மூலம் சமூக இயக்கத்தின் விதிகளை வெளிப்படுத்தினார். இதற்கு மேல் அரசியல் என்பது ஒரு விஞ்ஞானமாயிற்று. குறிப்பிட்ட சமூக இயக்கத்தை மதிப்பிடுகையில் அந்த சமூகம் இருக்கும் கட்டம், அது இயங்கிச் செல்லும் திசை, அந்த சமூக இயக்கத்தில் சம்பந்தப்படும் பிரதான சக்திகள் போன்றவற்றை சரியாக மதிப்பிடுவதன் மூலம் குறிப்பிட்ட சமூக இயக்கத்திற்கான திட்டத்தை, யுத்ததந்திரத்தை வகுப்பதன் மூலம் புரட்சிகர சக்திகள் குறிப்பிட்ட சமூக இயக்கத்தில் உணர்வுபூர்வமாக செயற்படுவது சாத்தியமாயிற்று. வரலாற்றிலும், சிந்தனைத் துறையிலும் மார்க்சின் இந்த கண்டுபிடிப்பு மாபெரும் சாதனையே. மார்க்ஸ் உயிருடன் இருந்த காலத்திலேயே மார்க்சின் அடிப்படையான கருத்தாக்கங்களை அதன் கடைக்கோடி நிலைக்கு எடுத்துச்சென்று, அதனை வெறுமனே பொருளாதாரவாதமாக் குறுக்கி விடும் செயற்பாடுகள் அவரைப் பின்பற்றிய சிலராலேயே மேற்கொள்ளப்பட்டன. இப்படியாக குறுக்கல்வாதங்களை திட்டவட்டமாக நிராகரித்த மார்க்ஸ், அவர்களது அர்த்தத்தில் தானே ஒரு "மார்க்சியவாதி" அல்ல என்றும் கேலி செய்தார். ஆயினும் இந்தப் போக்கு மார்க்சின் மறைவின் பின்பும் தொடர்ந்தது. இதனைக் கண்டித்த எங்கெல்ஸ் "---பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் வரலாற்றைப் புரிந்து கொள்கையில், வரலாற்றுப் போக்கின் இறுதியான நிர்ணய சக்தியாக விளங்குவது எதார்த்த வாழ்க்கையில் நிகழும் உற்பத்தியுமே ஆகும். இதற்கதிகமாக எதையும் நானோ, மார்க்சோ உறுதிப்படுத்தவில்லை. 'பொருளாதாரக் காரணம் மட்டுமே ஒரேயொரு நிர்ணய சக்தியாக விளங்குகிறது' என்ற அர்த்தத்தில் யாராவது இதனைத் திரித்துக் கூறினால், இதனை அர்த்தமற்ற, சூட்சுமமான, அர்த்தமற்ற சொற்றொடராக அவர் மாற்றிவிடுகிறார். என்றே பொருள். பொருளாதார நிலைமைகள்தான் அடிப்படை. ஆனால் வரலாற்றுப் போராட்டப் போக்கின்மீது மேற்கட்டுமானத்தின் பல்வேறு வகைகளும் செல்வாக்குச் செலுத்துகின்றன. பலப்பல நேரங்களில் அப் போராட்டத்தின் வடிவத்தை நிர்ணயிக்கின்றன. வர்க்கப் போராட்டத்தின் அரசியல் வடிவங்கள், அப்போராட்ட-பத்தின் விளைவுகள், அதாவது போராட்டத்தில் வெற்றிவாகை சூடிய வர்க்கம் உருவாக்குகின்ற அரச அமைப்பு போன்றவையும், சட்டத்துறை அமைப்புகளும், இந்த உண்மையான போராட்டங்களின் பிரதிபலிப்பு போராட்டத்தில் பங்கு கொள்வோரின் மூளையில் தோன்றுவதும் கூட, அரசியல் ரீதியான, ---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

—— சட்டபூர்வமான, தத்துவஞானக் கோட்பாடுகள், சமயக் கண்ணோட்டங்கள் ஆகியவையும் போதனைகளின் அமைப்புகள் இவையெல்லாம் மேலும் வளர்ச்சியுறவும் ஆகிய அனைத்தும் வரலாற்றுப் போராட்டப் போக்கின்மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. என்று வலியுறுத்திக் கூறினார். ஆனால் இந்தவிதமான பொருளாதார வாதமானது இத்துடன் முடிந்துவிடவில்லை. இரண்டாம் அகிலத்தில் இதற்கெதிராக லெனின் போராடினார். லெனின் எழுதிய "என்ன செய்ய வேண்டும்", "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்" போன்ற நூல்கள்கூட ஒருவகையில் பொருளாதாரவாதக் கருத்துக்களுக்கு எதிரான தாக்குதல்களாகவே அமைந்தன. மூன்றாம் அகிலத்திலும் இதேவிதமான கண்ணோட்டங்கள் செல்வாக்குச் செலுத்தி இருந்ததாக பல மார்க்சியவாதிகள் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்கள். மரபுவழி இடதுசாரிக் கட்சிகளின் கண்ணோட்டத்தில் இந்த பொருளாதாரவாதக் கண்ணோட்டமே ஆதிக்கம் செலுத்துவதாக இன்றும் இவர்கள் விமர்சிக்கிறார்கள்.

தேசியம், ஆணாதிக்கம், சாதியம், கலை, இலக்கியம் —— போன்ற பல்வேறு பிரச்சனைகளையும் பொருளாதாரம் என்ற ஒரே காரணத்தின் ஊடாக, வர்க்கப் போராட்டம் என்ற ஒரே கருத்தாக்கத்தினூடாகவே விளக்கி விட முனைவது பொருளாதாரவாதத்தின் இன்றைய குறிப்பான தன்மையாகும். இவை வேறுபட்ட தளங்களில் நடப்பதை, இவற்றின் ஒப்பீட்டளவிலான சுயாதீனத் தன்மையை இவை தமக்கேயுரிய குறிப்பான விதிகளைக் கொண்டிருப்பதை, இவர்கள் அங்கீகரிப்பதில்லை. இதனால் பொருளாதாரவாதமானது மார்க்சியத்தை ஒரு குறுகிய வறட்டுச் சூத்திரமாக்கிவிடுகிறது. இதற்குமேல் இவர்களது தத்துவமானது சமூகத்தின் பல்வேறுபட்ட நிகழ்வுகளை விளக்கவும், யதார்த்தத்தில் நடைபெறும் போராட்டங்களுக்கு வழிகாட்டவுமான ஆற்றலை இழந்துவிடுகிறது. இலங்கையின் மரபுவழி இடதுசாரிகள் இலங்கையில் இனப்பிரச்சனை என்ற ஒன்றே கிடையாது. என்று சாதிக்க முனைந்தனர். இனப்பிரச்சினையின் தீவிரம் காரணமாக அதன் இருப்பை தவிர்க்க முடியாதவாறு ஏற்றுக்கொள்ள நேர்ந்தபோது, அதனை முதலாளித்துவ சக்திகளின் சதி என்றார்கள். இன்று ஐக்கியப்பட்ட புரட்சி பற்றி முன்மொழிபவர்களிடம் இதே கருத்துப் போக்குகளை அவதானிக்க முடிகிறது. சண்டிலில் பரதேசிகள் " அடிப்படைப் பிரச்சினை பொருளாதாரத்திலேயே தங்கியிருக்கின்றது" என்று கூறும் போதும் இதே சாயலைக் காணமுடிகிறது.

பொருளாதாரவாதம் பற்றி விமர்சிக்கும் கரிகாலன், தனது கருத்துக்களை அந்தத் திசையிலேயே தொடர்ந்தும் வளர்த்தெடுத்துச் சென்றிருந்ததால், தேசியம் என்பதை ஒரு தனியான கட்டமைப்பாக இனங்கண்டு அதற்கென தனியான இயங்கு விதிகள் இருப்பதை ஏற்றுக்கொண்டு, இதன்மூலம் தேசிய இயக்கத்தில் புரட்சியாளர்களது பாத்திரம் குறித்து விரிவான விளக்கத்தை வந்தடைந்திருப்பார். ஆனால் குழுநலன்கள் என்ற கருத்தாக்கம் இவரை வேறோர் இடத்திற்கு இட்டுச் சென்றுவிடுகிறது. இலங்கையில் " மேலாதிக்கத்திற்காக போட்டியிடும் முரண்பாடுகள் " பற்றி கரிகாலன் குறிப்பிடுகையில் இன முரண்பாடு அல்லது தேசிய முரண்பாடு என்று குறிப்பிடுவதைத் தவிர்த்து இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்திற்கும் ஐக்கியமின்மைக்கும் இடையிலான முரண்பாடு என்று கூறுகையில் மரபுவழி இடதுசாரிகளிடம் காணப்பட்ட அதே சாயல்களை அவதானிக்க முடிகிறது. இலங்கையில் தேசிய முரண்பாடு மிகவும் கூர்மையடைந்து ஒரு யுத்தம் பத்து வருடங்களாக நடைபெற்று வருகிறது. இவ ஐக்கியம் என்பது வெறும் கனவாய்ப் போய்விட்டது. இந்த நிலையில் இனங்களுக்கிடையிலான ஐக்கியம் ஐக்கியமின்மை ஆகிய இரண்மையும் சமநிலையில் வைத்துப் பேசுவது என்பது இலங்கை இல் தேசிய முரண்பாடு மிகவும் கூர்மையடைந்து இருப்பதை மறுக்க முனையும் போக்காகவே கருதப்பட வேண்டும்.

www.tamilarangam.net



தேசியமும் தரகுமுதலாளிகளும்
*********************

தேசியம் என்பது ஒரே கல்லில் செதுக்கப்பட்டது போன்று ஒரே சீரான, முற்றிலும் உள்ளிணக்கமான ஒரு நிகழ்வுப் போக்கல்ல. வரலாற்றில் தேசியமானது பல்வேறு வடிவங்களில் தோன்றியுள்ளது. குறிப்பிட்ட ஒரு தேசிய இயக்கம் உருவாகும் குறிப்பான வரலாற்று நிலமைகள் அதனை முன்னெடுக்கும் வர்க்க சக்திகளின் தன்மை அவற்றுக்கு வழிகாட்டும் உலகக் கண்ணோட்டம் என்பவற்றைப் பொறுத்து தேசியமானது சோசலிசம், லிபரல் சனநாயகம், அரசதேசியம், இராணுவ சர்வதிகாரம், ஏகாதிபத்திய ஆதிக்கம் பாசிசம் போன்ற முற்றிலும் வேறுபட்ட பல வடிவங்களை எடுத்துள்ளது. இந்த பல தரப்பட்ட வர்ண தேசிய இயக்கங்களிலும் குட்டி முதலாளி வர்க்கம் ஒரு அத்தியாவசியமான கூறாக இருந்து வந்துள்ளது. இதனுடன் கூட்டுச்சேரும் வர்க்கம் தொழிலாளரா, விவசாயிகளா, தேசிய முதலாளிகளா, ஏகபோக முதலாளிகளா என்பதைப் பொறுத்து இதன் வடிவம் வேறுபட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு சக்தியை தேசிய சக்தி எனக் குறிப்பிடுவது அது குறிப்பிட்ட ஒரு கூறாக இருப்பதை மாத்திரமே குறிக்கும் — அந்த குறிப்பான வரலாற்றுச் சூழலில் குறிப்பிட்ட ஒரு சக்தி பற்றிய ஒரு மதிப்பீடு மட்டுமே. தேசிய சக்தி என்ற மதிப்பீடு எந்த வகையிலும் குறிப்பிட்ட சக்திக்கான புரட்சிகர அங்கீகாரமாக மாட்டாது. குறிப் குறிப்பிட்ட அந் அந்த சக்தி முற்போக்கான பாத்திரம் வகிக்கிறதா அல்லது பிற்போக்கு பாத்திரம் வகிக்கிறதா என்பது பரந்துபட்ட மக்களின் நலன்கள், வரலாற்றின் வளர்ச்சிப்போக்கு போன்றவற்றுடன் அந்த சக்தி எந்த விதமான உறவைக் கொண்டுள்ளது என்பதன் அடிப்படையிலேயே தீர்மானிக்கபட வேண்டும். கிட்லர், முசோலினி, மட்டுமல்ல இஸ்ரேல் கூட தேசியம் எவ்வளவு மோசமான பிற்போக்கு வடிவங்களையும் எடுக்கலாம் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளாகும்.

பொதுவாக ஒரு காலனித்துவ நாட்டில் காலனிய ஆதிக்கத்திற்கு எதிராக தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெறும் போது ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்தியங்களுடன் நெருக்கமான பொருளாதார பிணைப்புகளைக் கொண்டிருக்கும் தரகு முதலாளிவர்க்கமானது தேசிய இயக்கத்தை எதிர்க்கும் சக்தியாக இருக்கும் என்பது உண்மையே. ஆனால் வேறுபட்ட நிலைமைகளில் குறிப்பிட்ட ஒரு ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான போராட்டத்தில் ஏனைய ஏகாதிபத்தியங்களுடன் தமது நலனைப் பிணைத்துக் கொண்டுள்ள குறிப்பிட்ட சில தரகு முதலாளி வர்க்க பிரிவுகள் அந்த தேசிய இயக்கத்தை ஆதரிக்கவும் செய்யும் அதுவும் இலங்கை போன்றதோர் நாட்டில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமானது நேரடியாக ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தமாக இல்லாமல் உள்ளூர் பேரினவாதத்திற்கு எதிரானதாக இருக்கையில், இன ஒடுக்குமுறை, இனப் படுகொலைகள் என்ற வடிவத்தை அடைந்துவிட்ட நிலையில் தமிழ்த் தரகு முதலாளிகளின் நலன்களுங்கூட தமிழ் தேசியத்துடன் பிணைந்தே இருக்கின்றது. இதனால் தரகு முதலாளி வர்க்கமும்கூட ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தேசியத்தை முன்னெடுக்கவே செய்யும். ஆனால் இந்த வர்க்கத்தால் முன்னெடுக்கப்படும் தேசியம் முரணற்றதாக இருக்குமா என்பதும், இதன் தலைமையில் அடையப்படும் விடுதலை சாதாரண உழைக்கும் மக்களைப் பொறுத்த வரையில் உண்மையான விடுதலையாக இருக்குமா என்பதும் வேறு விடயம். இதற்காக தரகு முதலாளிகளும்

www.tamilarangam.net


—தேசியமும் ஒருபோதும் ஓரளவிற்கேனும் இனங்காணமுடியாதவை என வாதிடமுடியாது. புலிகள் தரகு முதலாளி வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக நிரூபிக்கப்பட்டாலும் கூட அது இன்று அவர்கள் தேசிய சக்தியாக செயற்படவில்லை என்று நிரூபித்ததாகி விடமாட்டாது. எப்படியிருப்பினும் புலிகளின் அரசியலையும், அதன் எதிர் காலப்போக்குகளையும் புரிந்துகொள்ள இப்படிப்பட்டதோர் வர்க்கப் பகுப்பாய்வு அவசியமே.

இந்த விடயம் தொடப்பாக 'சமர்' கருத்துத் தெரிவிக்கையில் "எமது தேசத்தில் தரகு முதலாளித்துவ சக்திகள் அல்லது ஒடுக்கப்பட்ட வறிய, கூலி விவசாயிகள் தேசிய விடுதலைக் கோசத்துக்குரிய தலைமை சக்திகளாக அமையமுடியும்." என்கிறது. ஆனால் தரகு முதலாளித்துவ சக்திகள் தேசிய விடுதலைப்போராட்டத்தை முன்னெடுக்கமாட்டா எனவும், புலிகள் போராட்டத்தை சிதைப்பது அது பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தவே என்றும் வாதிடுகிறது. புலிகளுக்கு ஏகாதிபத்தியங்கள் உதவுவது (!) புலிகளிடம் தேசிய வாதம் இல்லாதிருப்பது (!!) இந்திய இராணுவத்திடம் பேரம் பேசியது, சுயநிர்ணய உரிமையை அற்ப காரணங்களுக்காக விட்டுக்கொடுக்க தயாராக இருப்பது, போன்றவைஅது தரகு முதலாளி வர்க்கத்தை பிரதிநிதிப்படுத்தும் தன்மைக்கான சான்றுகள் என்கிறது. தரகு முதலாளி வர்க்கத்தை திருப்திபடுத்துவதற்காகவே புலிகள் ஏனைய இயக்கங்களை அழித்தும், முஸ்லிம்களை வெளியேற்றியும், சிங்கள மக்களை படுகொலை செய்தும், தமிழ் மக்களது சனநாயக உரிமைகளை பறித்தும் போராட்டத்தை சீரழிப்பதாக குறிப்பிடப்படுகிறது.

இதே பிரச்சினையை 'தூண்டிலில்' பிரஜைகள் வேறோர் கோணத்தில் அணுகுகிறார்கள். ஒவ்வொரு சக்தியும் தமது வர்க்க நிலைப்பாட்டிற்கு ஏற்பவே போராட்டத்தை அணுகுவதாகவும்; புலிகளுக்கென ஒரு வர்க்கநிலை இருப்பதாகவும் கூறுகிறார்கள். அந்த வர்க்கநிலை தரகு முதலாளித்துவம் அல்ல — ஏனெனில் அப்படியிருப்பின் அவர்கள் இதுவரைக்கும் சரணடைந்து இருப்பார்கள் எனவும் வாதிடும் இவர்கள் புலிகளின் தேசியத்தை முதலாளித்துவ தேசியம் என்கிறார்கள். ஆனால் அவர்கள் எந்த வர்க்கத்தைப் பி பிரதிநிதித்துவப் [illegible] படுத்துகிறார்கள் என்ற கேள்விக்கு திட்டவட்டமான பதில் அளிப்பதைத் தவிர்த்து விடுகிறார்கள். இந்தத் தவறு எவ்வாறு நேர்கிறது என்பதை நிச்சயப்படுத்த முடிய்வில்லை. தேசியம் தொடர்பாக வேறோர் தத்துவார்த்த அணுகுமுறை இவர்களிடம் இருப்பின் அதை நேரடியாக முன்வைப்பது அவசியம் எனக் கருதுகிறோம். இதற்கு பிரஜைகளின் எழுத்து வடிவம் — உரையாடல் வடிவத்தில் சாதாரண மக்களுக்கு விளங்க வேண்டும் என்ற நோக்கில் எழுதப்படுவது — தடையாக இருக்குமானால் மாற்று வடிவத்தைத் தேடுவது தவிர்க்க முடியாதது எனக் கருதுகிறோம்.

இதுவரை நடைபெற்றுவரும் விவாதங்கள் தமிழ்த் தேசத்தின் வர்க்கப் பகுப்பாய்வு, பல்வேறு வர்க்கங்களது நலன்கள், தேசியத்துடன் இவை கொண்டுள்ள உறவு, பல்வேறு அமைப்புகளின் அரசியலூடாக இவை வெளிப்படும் விதம், என்ற வகையில் செல்லாமல் இதற்கு தலைகீழான ஒரு அணுகுமுறையே தொடர்ந்து வருகிறது. இந்தப் போக்கு தொடரும்வரை புலிகளின் அரசியலைப் புரிந்து கொள்வதில் பல சிரமங்கள் ஏற்படவே செய்யும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## குழுநலன்கள் என்பது பற்றிய.....

இது தொடர்பாக 'மனிதம்' சஞ்சிகையில் தனது கருத்தை கரிகாலன் முன்வைக்கையில், புலிகளுக்கு குழு நலன்கள் மட்டுமே இருப்பதாகவும் புலிகளுக்கு ஒரு அரசியலே கிடையாது எனவும் வாதிடுகின்றார். இந்த விமர்சனத்தின் பொதுவான போக்கானது புலிகளின் மக்கள் விரோத நடவடிக்கைகளை அடிப்படையாக வைத்து அவர்களை அரசியல் இல்லா " மாஃபியா " கும்பல் போல சித்தரிக்க முனைவதாகவே இருக்கிறது.

புலிகள் வரலாற்றில் திடீரென தோன்றிய ஒரு சக்தி அல்ல அது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் விளைபொருள். தமிழ் மக்கள் தனியான அரசை அமைக்கும் நோக்கில் முன்னெடுக்கும் போராட்டத்தில் தலைமை தாங்கும், சில அரசியல் கோரிக்கைகளை கொண்டுள்ள அமைப்பு, புலிகளிடம் இருக்கும் அரசியல் புரட்சிகரம் அற்றது, பிற்போக்கானது என்பது வேறுவிடயம். ஆனால் இதுவும் ஒரு வித அரசியலே. இந்த அரசியலானது எந்த மக்கள் பிரிவை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதே நாம் காண வேண்டியதாகும். இந்த கடினமான பணியை புலிகள் அரசியலே இல்லாதவர்கள் எனக் கூறுவதன் மூலம் தவிர்த்துவிட முனைவது, மாற்று அமைப்பை கட்ட முனையும் எமது முயற்சியில் எந்த விதமான காத்திரமான பங்களிப்பையும் செய்துவிடாது. புலிகளை "மாபியா" போன்ற கும்பல்களிடம் இருந்து அடிப்படையில் வேறுபடுத்துவது இந்த அரசியலே. இந்த அரசியல் காரணமாகவே "மாஃபியா" கும்பல்கள் போலன்றி புலிகள் மக்களின் குறிப்பிட்டத்தக்க பிரிவினரின் ஆதரவின் ( அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ ) பெறுகிறது. இதனாலேயே சிறீலங்கா அரசும் இந்திய அரசும் எத்தனையோ முயற்சிகளை எடுத்தும் மக்களிடம் புலிகளை முற்றாக தனிமைப்படுத்தி அழித்து விட முடியாது உள்ளது.

இன்றைய நவீன சமுதாயத்தில் அரசானது சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் மிகவும் ஆழமாக ஊடுருவி உள்ளதால் அன்றாட வாழ்வில் எல்லாத்துறைகளிலும் அரசியல் இருக்கவே செய்கிறது. இதனைக் கருதித்தான் பெண்ணிலைவாதிகள் "தனிப்பட்டது என்பதும் அரசியலே" என்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் ஒரு வலதுசாரித் தீவிரவாத, படுபிற்போக்கான அரசியலைக் கொண்டுள்ள ஒரு அமைப்பை அதற்கு அரசியலே கிடையாது என்று நிந்திப்பதன் மூலம் அந்த சக்தியை வரலாற்றிலிருந்து அகற்றி விட முடியாது. அரசியலை நேரடியாக முன்னெடுக்காத "மாஃபியா" கும்பல்களை விட பிற்போக்கான அரசியலைக் கொண்டுள்ள 'பாசிச' அமைப்புகள் சமூகத்திற்கு மிகவும் ஆழமான தீங்குகளை இழைக்கக்கூடியவை. எனவே புலிகளை நிந்திப்பதன் மூலம் அன்றி அதன் அரசியலை ஆழமாக புரிந்துகொள்வதன் மூலம் மட்டுமே மாற்றுத் தலைமை பற்றிய பிரச்சனை சரியான முறையில் அணுகப்பட முடியும்.

எமது விவாதங்களில் தேசத்தின் நலன்கள், வர்க்க நலன்கள், குழுநலன்கள் என்ற பதங்கள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. புலிகளை அவர்களது "குழுநலன்கள்" என்பதற்கூடாக மதிப்பிடும் முயற்சிகளும் நடைபெறுவதால் முதலில் நலன்கள் பற்றிய விடயத்தில் பொதுவான விளக்கத்தை எட்ட முனைவது அவசியமாகும். பொதுவாக ஒரு மனிதரின் நலன்கள் என்றால் என்ன? இந்த நலன்களுக்கும் நடப்பில் உள்ள சமூக, பொருளாதார, அரசியல் உறவுகளுக்கும் உள்ள உறவு என்ன? என்ற கேள்விகள் இந்த நோக்கில் முக்கியத்துவம் பெறுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொதுவாக ஒவ்வொரு மனிதரும் தமது நுகர்விற்கான (பொருள் வகையிலும், ஆன்மீக வகையிலும் துய்ப்பிற்கான) ஆற்றலை பெருக்கிக் கொள்ள விரும்புகின்றனர். இதற்காக குறைவான சிரமத்தை ஏற்க (குறைந்தளவு உழைப்புச் சக்தியை செலவழிக்க) விரும்புகின்றனர். இவற்றின் ஒட்டுமொத்தமான தொகுப்பே ஒருவரது நலன்கள் என்றாகிறது. குறிப்பிட்ட சமூகத்தின் பொருள் உற்பத்தி எவ்வாறு நடைபெறுகிறது? அந்த உற்பத்தியில் ஒருவரது இடம் என்ன? என்பவற்றை பொறுத்து ஒருவர் அடையாக் கூடிய நலன்களது அளவும் அவற்றை அடையும் முறைகளும் சமூக அளவில் வரையறுக்கப்படுகின்றன. உற்பத்தி உறவில் ஒரே நிலையில் உள்ளவர்கள் மொத்த நலன்களை கொண்டுள்ளார்கள். இவர்கள் ஒரே வர்க்கமாக அமைகிறார்கள். உற்பத்தி உறவில் முரண்பட்ட நிலையில் உள்ள வர்க்கங்கள் ஒன்றுக்கொன்று முரணான நலன்களைக் கொண்டுள்ளார்கள். இதனால் தமது நலன்களை அடைவதற்காக முரண்பட்ட வர்க்கங்கள் முட்டிக் மோதிக்கொள்ள நேர்கிறது. இது வர்க்கப்போராட்டமாகிறது. இந்தப் போராட்டத்தின் இறுதி வெற்றி யாருடைய கையில் அரசு அதிகாரம் இருக்கிறது என்பதன் மூலம் தீர்மானிக்கப்படுவதால் இந்த நலன்களுக்கான போராட்டம் அரசு அதிகாரத்திற்கான போராட்டமாகிறது இந்த வர்க்கப் போராட்டத்தினூடாக சமூகம் இயங்கிறது.

சமூகத்திலுள்ள ஒவ்வொரு மனிதருக்கும் சில குறிப்பிட்ட நலன்கள் உண்டு. அந்த நலன்கள் அடையும் பொருட்டு அவர்கள் தனி நபர்களாகவோ அல்லது குழுக்களாகவோ, தாபனங்களாகவோ, வர்க்கங்களாகவோ தம்மை இனங்காண்கிறார்கள், ஒழுங்கமைக்கிறார்கள், போராடுகிறார்கள். இப்படியாக பல்வேறு சக்திகளும் சமூகத்தில் போராடிக் கொண்டிருந்தாலும் சமூக வளர்ச்சியில் எல்லோரும் ஒரே விதமான தாக்கத்தை நிகழ்த்துவது இல்லை. யாருடைய நலன்கள் சமூக வளர்ச்சி போக்கின் திசையில் அமைகின்றன? யாருடைய நலன்கள் நடப்பிலுள்ள சமூக அமைப்பை காப்பதை, அல்லது சமூக இயக்கத்தை பின்னோக்கி செலுத்துவதை வேண்டி நிற்கின்றன? எந்த தனிநபர், குழு, வர்க்கம்? தாபனம் தனது நலன்களை சரியாக இனங்கண்டு உணர்வுபூர்வமாகவும் நீண்டகாலக் கண்ணோட்டத்துடன், முரணற்றும் முன்னெடுக்கின்றன? என்ற கேள்விகளே சமூக இயக்கத்தை வரலாற்றை புரிந்து கொள்வதில் முக்கியத்துவமானவை.

முதலாளித்துவ சமூகத்தில் பாட்டாளி வர்க்கம் மிகவும் புரட்சிகரமான வர்க்கமாக கூறப்படுகிற அந்த வர்க்கம் எந்த விதமான நலன்களையும் கொண்டிராத ஒரு விதமான 'தூய்மையான' வர்க்கம் என்ற அர்த்தத்தில் அல்ல. அப்படிப்பட்ட தூய்மையான சக்திகள் என்று எதுவுமே யதார்த்தத்தில் கிடையாது. பாட்டாளி வர்க்கத்தை புரட்சிகர வர்க்கமாக கருதுவது எந்த அர்த்தத்தில் என்றால், அது சமூகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியில் மட்டுமே தனது நலன்கள் கைகூடும் நிலையில் உள்ளது. இதனால் தனதுநலன்களை அடைவதற்கு சமூக மாற்றம் என்பதை ஒரு அவசியமான முன் நிபந்தனையாகக் கொண்டுள்ளது. இதனால் சமூகப் புரட்சிக்கு தீவிரமாக பங்காற்ற முன்வருகிறது என்பதனாலேயே கொம்யூனிச சமூகத்தில் பாட்டாளி வர்க்கம் தன்னை ஒரு வர்க்கம் என்ற வகையில் இல்லாமல் செய்வதும்கூட தான் புரட்சியின் மூலம் அடைந்த நலன்களை நிரந்தரமாகக்காப்பதற்கே. ஏனெனில் பொதுவில் வர்க்க சமுதாயத்தில் உழைக்கும் மக்களின் நலன்களை என்றென்றைக்குமாக உத்தரவாதப்படுத்திவிட முடியாது. இதனால் நீண்ட காலக்கண்ணோட்டத்தில் பாட்டாளி வர்க்கம் தனது நலன்களை காக்கப்படுவதை ----

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



---உத்தரவாதப்படுத்துவதற்கு ஒரேவழி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு மட்டுமல்ல தானே ஒரு வர்க்கமாக இருப்பதற்கான நிலைமைகளையே முடிவிற்கு கொண்டு வருவதே ஆகும். தமது சொந்திய வர்க்க எல்லைகளைக் கடந்து பரந்து பட்ட உழைக்கும் மக்களுடன் தம்மை இணைத்துக் கொண்டு அவர்களுக்காக தன்னை முழுக்க அர்ப்பணித்துக் கொண்டு போராடிய மாபெரும் புரட்சியாளர்கள் கூட தமது உடனடியான, சொந்திய பொருள்வகை நலன்களைக் கடந்து வருகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் இவர்களை இப்படிப்பட்ட தியாகங்களுக்கு உந்தித் தள்ளுவது பரந்துபட்ட மக்களுக்காக, சமூகநீதிக்காக போராடுவதால் இவர்களுக்கு ஏற்படும் திருப்தியும், சமூக மாற்றத்தில் இவர்களுக்கு இருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையுமேயாகும். இங்கு இவர்களது உடனடியான ஆன்மீக நலன்களும், நீண்ட காலக்கண்ணோட்டத்தில் அவர்களது முழுமையான நலன்களும் சம்பந்தப்படவே செய்கிறது. எனவே எந்த ஒரு சமூக இயக்கத்தையும் வரலாற்றையும் மதிப்பீடு செய்யும்போதும் எழுப்பப்பட வேண்டிய கேள்வி அந் சமூக இயக்கத்தில் குறிப்பிட்ட குழுக்களுக்கு நலன்கள் இருக்கிறதா இல்லையா என்பதல்ல. (உண்மையில் இந்த கேள்வி அபத்தமானது! பாசாங்கானது!) யாருடைய நலன்கள் அந்த சமூக இயக்கத்தின் வளர்ச்சிப் போக்குடன் அல்லது அன்றைய வரலாற்றுத் தேவையுடன் இசைவாக அமைகின்றன என்பதே.

மேலாதிக்கமான தேசிய ஒடுக்குமுறையை முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் தேசம் என்ற வகையில் அந்த சமூகத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் தமது உயிர்ப் பாதுகாப்பு மற்றும் அடிப்படையான சனநாயக உரிமைகளுக்காக போராடுவது என்பது அவர்களது உடனடி நலன்களாகிறது. தேசிய அரசை அமைப்பதன் மூலமே இந்த நலன்கள் உத்திர வாதப்படுத்தப்படலாம் என்பதால் தேசிய அரசை அமைப்பது அத் தேசத்தின் அங்கத்தவர்கள் அனைவரதும் நீண்ட கால நலனாகிறது. தேசம் என்பது பல்வேறு வர்க்கங்களையும் கொண்ட ஒரு சமூகம் என்பதால் அந்த தேசத்துள் அமையும் பல்வேறு வர்க்கங்களும் தமக்கென குறிப்பான நலன்களையும் கொண்டிருக்கவே செய்கின்றன. ஆயினும் தேசிய ஒடுக்குமுறை மிகவும் தீவிரமடைந்திருக்கும் நிலையில் தேசத்தின் பொதுவான நலன்களை பாதுகாப்பதன் மூலமே வர்க்கங்கள் ஒவ்வொன்றும் தமது வர்க்க நலன்களுக்காகப் போராடுவது சாத்தியப்படும் என்பதால் இந்த வர்க்கங்கள் தமது வர்க்க நலன்களை பொதுவான தேசத்தின் நலன்களுக்கு உட்படுத்தி போராடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. தேசிய நலன்களுக்காகப் போராடும்பொழுது தமது வர்க்க நலன்களையும் கருத்திற் எடுத்தே போராடுகின்றன. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இவ் வர்க்கங்கள், தேசத்தின் நலன்கள் என்பதை தமது வர்க்கத்தின் நலன்களே என்பதாக அர்த்தப்படுத்த முனைகின்றனர். தேசத்தின் நலன்கள் என்பது சுரண்டும் வர்க்கங்கள், மேட்டுக்குடியினரின் நலன்களாக அர்த்தப்படுத்துகையில் தேசத்தின் ஒற்றுமை என்பதை அந்த சமூகத்தினுள் அல்லது அந்த சமூகத்திற்கு வெளியே எழும் எழுச்சிகளை நசுக்குவதற்கான சாதனமாக அர்த்தப்படுத்துகையில் அந்த தேசியமானது பிற்போக்கானதாகிறது, தேசத்தின் நலன்கள் என்பது பரந்து பட்ட மக்களது சமூக பொருளாதார, அரசியல் விடுதலையுடன் இனம் காணப்படுகையில் அந்த தேசியமானது முற்போக்கானதாகிறது.---

www.tamilarangam.net



---இப்போது எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் குழுநலன்கள் தேசிய நலன்களுடன் எப்படி உறவு கொள்கின்றன என்று பார்போம். எமது தேசத்தின் நலன்களைக் காப்பதற்காக பலர் ஒன்றுதிரண்டு போராடும்போது அங்கு குழுக்கள் தோன்றுகின்றன. அந்த குழுக்களுக்கென்று சில குறிப்பான நலன்களும் உருவாகின்றன. சில குழுக்கள் தமது குழுநலன்களை தேசத்தின் நீண்டகால நலன்களுக்கு உட்படுத்தி போராடலாம். இதன் மூலம் தேசிய விடுதலைப் போராட்டம் பலப்படுத்தப்படுகின்றது. சில குழுக்கள் தேசத்தின் நலன்களை தமது குழுநலன்களுக்கு உட்படுத்திப் போராடலாம். இதனால் தேசிய விடுதலைப் போராட்டம் பலவீனப்படுத்தப்படுகிறது. இப்படியாக ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் தேசத்தின் நலன்கள் இனது வர்க்க, குழு, தனிப்பட்ட நலன்களுடன் முட்டிமோதவே செய்யும். இங்கு எழுப்பப்பட வேண்டிய கேள்வி குழுநலன் உண்டா? இல்லையா? என்பதல்ல. மாறாக தேசத்தின் நலன்கள் அடிப்படையிலேயே கேள்விக்குள்ளாக்கப்படும் தீர்க்கமான கட்டங்களில் யாருடைய நலன்கள் தேசத்தின் நலன்களுடன் ஒத்திசைந்தன என்பதே.

இந்திய அரசிடம் உதவி பெறும்போதும், அமைப்புகள் தமிழ் மக்களது சனநாயக உரிமைகளை மறுத்தபோதும், அமைப்பினுள் சனநாயகத்தை மறுத்தபோதும், இயக்கங்கள் ஐக்கியப்பட்டபோதும்—மோதிக்கொண்டபோதும், இலங்கை அரசிடம் பேசியபோதும்—மோதியபோதும் பலதரப்பட்ட நலன்களும் தமக்குள் முட்டிமோதிக் கொண்டுதானிருந்தன. ஆனால் தேசத்தின் நலன்கள் அடிப்படையிலேயே கேள்விக்குள்ளாக்கும் இரண்டு குறிப்பான சந்தர்ப்பங்களை தேசிய விடுதலைப் போராட்டம் முகங்கொடுக்க நேர்ந்தது.

1) தமிழ் மக்களது குறைந்தபட்ச நலன்களைக்கூட உத்திரவாதப்படுத்தாமல் இந்திய அரசு திணித்த ஒப்பந்தம்.

2) தேசியப் பிரச்சனைக்கு ஒரு குறைந்தபட்ச தீர்வைக்கூட முன்வைக்க பேச்சுவார்த்தையின்போது இலங்கை அரசு திட்டவட்டமாகவே மறுத்தது.

இப்படிப்பட்ட இரண்டு தீர்க்கமான கட்டங்களிலும் பல்வேறு குழுக்களும் எப்படி நடந்துகொண்டன என்பதுதான் இங்குள்ள பிரச்சனை. விரும்பியோ விரும்பாமலோ, அறிந்தோ அறியாமலோ, இவை நடந்து கொண்டன என்பது இரண்டாம் பட்சமானது. பலரும் குறிப்பிடுவதுபோல் புலிகள் தேசத்தின் மீது கொண்டுள்ள அக்கறையில் இருந்தல்லாமல் தமது குழுநலன்களை அடிப் படையாக வைத்தே செயற்பட்டும் இருக்கலாம். ஆனால் இந்தக் காரணங்கள் எதுவுமே புலிகள் இந்தக் காலகட்டங்களில் தேசத்தின் நலன்களுடன் தம்மை இணைத்துக் கொண்டதை மறுத்துவிட மாட்டாது. இதே காலகட்டத்தில் ஏனைய குழுக்களது நடவடிக்கைகளையும் சற்று ஒப்பிட்டு பார்ப்பது பொருத்தமானதாக இருக்கும். முன்பு ஈழம் என்பது முழு இலங்கையுமே குறிப்பிடும் என்று புது வியாக்கியானம் கொடுத்து 'அரசியல் நீரோட்டத்தில்' கலந்தபோதும், மாகாணசபையில் பதவி வகித்தபோதும் 'தேசியக் கொடியின் (சிங்கக்கொடி)' மகிமைபற்றி பேசியபோதும், 'பிள்ளை பிடித்தபோதும்' 'ஈழப்பிரகடனம்' செய்தபோதும், மீண்டும் கொழும்புக்குச் சென்று 'சனநாயகத்திற்காகப் போராடும் போதும்,' பேச்சுவார்த்தைகளில் இலங்காவின் பேரினவாத கட்சிகள் வடக்கு – கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்ட நிலையிலும் அரசுடன் தமது உறவுகளை முறித்துக் கொள்ளாதபோதும் இந்த அமைப்புகள் தேசத்தின் நலன்களுக்குத்தான் செயற்படுவதாக யாராவது கருதுகிறார்களா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிகள் தீர்க்கமான இரண்டு கட்டங்களில் தமிழ் தேசியத்துடன் இசைந்து போனார்கள். என்பது, எந்த வகையிலும் புலிகளது ஊசலாட்டங்கள் மற்றும் பலவீனமான 'பாசிச' போக்கு தன்மைகளை அங்கீகாரமாகிவிடாது. எதிர்காலத்திலும் அவர்கள் தேசியத்துடன் இணக்கமான போக்கைத்தான் வெளிப்படுத்துவார்கள் என்பதற்கான உத்தரவாதமும் அல்ல. புலிகளது எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய எதிர்வு கூறல் எதுவுமே அவர்களது அரசியல் பற்றிய புரிதலில் இருந்தே பிறக்க முடியும். குழுநலன்கள் என்பதோ அவர்களது அரசியலையே மறுப்பதோ இந்தவிதமான புரிதலுக்கு உதவமாட்டாது.

புலிகள் தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தினால் ஏன் இத்தனை பேரம் பேசல்கள்? இத்தனை குத்துக்கரணங்கள்? சரணாகதி அறிக்கைகள்? என்ற கேள்வி எழவே செய்கிறது. இதுபுலிகளது தேசியத்தில் உள்ள அடிப்படையான குறைபாடு. புலிகள் புறந்தள்ளப்பட்ட தமிழ்மக்களின் தேசிய நலன்களை முரணற்ற விதத்தில் முன்னெடுக்காமல் ஊசலாடுகிறார்கள். இதற்கு காரணமான புலிகள் அரசியலை புரிந்து கொள்வதுதான் இப்போது எம்முன்னுள்ள பிரச்சனை. புலிகள் இந்திய நலன்களுக்கு ஆதரவாகவும், பிரேமதாசாவை நம்புவதாகவும் அறிக்கை விட்டார்கள். என்பது உண்மை தான். அவை வெறுமனே இந்திய, இலங்கை அரசுகளை அரசுகளை ஏமாற்றுவதற்கான தந்திரோபாய நடவடிக்கைகள் அல்ல. அவர்களது உண்மையான அரசியலின் வெளிப்பாடு என்று கொண்டாலும் கூட அவர்கள் இறுதியில் எப்படி நடந்தாக வேண்டியிருந்தது என்பதுதான் முக்கியம்.

குறிப்பிட்ட ஒரு வரலாற்று சக்தி எதனைக்கருதுகிறது? எதனை விரும்புகிறது? என்பதல்ல இங்குள்ள பிரச்சனை. அது இறுதியில் எப்படி செயற்பட்டாக வேண்டியிருந்தது, என்பதுதான் தீர்க்கமான அம்சமாகும். சில சக்திகள் உணர்வு பூர்வம் அற்று கூட வரலாற்று பாத்திரத்தை ஆற்றமுடியும். வரலாறானது குறிப்பிட்ட சக்திகளின் விருப்பங்களையல்ல, இவற்றினது நடத்தைகளையே பதிவு செய்யும். குறிப்பிட்ட ஒரு சக்தியினது விருப்பத்துக்கும் அதன் நடத்தைக்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பின் வரலாறு அந்த சக்தி உணர்வு பூர்வமற்று தனது வரலாற்று பாத்திரத்தை ஆற்றி முடித்ததாகவே தீர்ப்பளிக்கும்.

திலீபனது உண்ணாவிரதத்தை, புலிகள் இந்தியாவுடன் பேரம் பேசுவதற்காக பாவிக்கப்பட்ட அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கை என விமர்சிப்பவர்களும் உண்டு. ஆனால் திலீபனின் உண்ணாவிரதத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் தமிழ் தேசியத்தின் அன்றைய காலகட்டத்தில் மிகவும் குறைந்த பட்ச கோரிக்கையாகவும் அமைந்தன என்பதும் மறுக்கப்படமுடியாததாகும். இந்த கோரிக்கைகள் மூலம் தமது நலன்களும் பிரதிபலிக்கப்பட்டதாகவே மக்கள் அதனை ஆதரித்தார்கள்.

புலிகளது அரசியல் நலன்களுக்கு எப்படி அவர்களது அறியாமையை காரணம் கூறமுடியாதோ, அதுபோலவே மக்கள் ஏதோ ஒரு விதத்தில் புலிகளை ஆதரிப்பதற்கும், மக்களது அறியாமை காரணமல்ல. புலிகள் ஏதோ ஒரு விதத்தில் தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதே காரணமாகும். தமிழ் தேசியத்துக்கும் புலிகளுக்கும் உள்ள உறவை புரட்சிகர சக்திகள் சரியாக இனங்கண்டு கொண்டு அதனை இன்னும் சிறப்பான விதத்தில் பிரதிபலிப்பதன் மூலம், புரட்சிகரமான வழிமுறையில் முன்னெடுப்பதன் மூலம் மட்டுமே புலிகளிடமிருந்து போராட்டத்தலைமையை கையகப்படுத்தலாமேயன்றி 'மாஃபியா கும்பல்' என்று திட்டித்தீர்ப்பது எந்தப் பயனையும் விளைவிக்கப்போவதில்லை.

குழு நலன்கள் என்ற கருத்தை வலியுறுத்துபவர்கள் சதாம்-குஃசைன், நொரியேகா போன்றோரை உதாரணமாக காட்டுகிறார்கள் மக்கள் நலன்களை தமது கரங்களில் எடுத்துக் கொண்ட தனி நபர்களாக இவர்கள் சித்தரிக்கப்படுகிறார்கள்.

www.tamilarangam.net


சதாம் உசேனையும் அவரது 'பாத்' ஆட்சியையும் 60, 70களில் அரபு உலகைக் குலுக்கியெடுத்த அரபுத் தேசிய வாதத்தின் விளை[illegible]பொருள்களதான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அரபுத் தேசிய இயக்கத்துக்கு தலைமை தாங்கிய குட்டி முதலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிய பின்பு அதன் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு தனது வர்க்க நிலையை கடக்கிறது. இதன் விளைவாக தனது முன்னைய முற்போக்கான தேசியவாத நிலைப்பாடுகளை தளர்த்தி ஏகாதிபத்தியங்களுடன் அதிகம் முரண்படாத ஒருவழி முறையை தேர்ந்-தெடுக்கிறது. இப்படிப்பட்ட ஒசந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்த தேசிய எழுச்சியை நசுக்கிவிட முயலும் ஏகாதிபத்தியங்களின் முயற்சிகளை இவர்கள் இன்னமும் எதிர்க்கவே செய்கிறார்கள். பரவிவரும் அரபுத் தேசிய வாதத்தை முறியடிப்பதற்கா-ன சந்தர்ப்பத்துக்காக ஏகாதிபத்தியங்கள் காத்திருந்த போது அதற்கான ஒரு சந்தர்ப்பத்தை குவைத்தை ஆக்கிரமித்ததன் மூலம் சதாம் உசேன் வழங்கினார்

மத்திய கிழக்கில் ஏகாதிபத்தியங்கள் தமது நிலைப்பாடுகளை நியாயப்-படுத்துவதற்காக அங்கு ஏகாதிபத்தியங்களின் சூழ் நலன்களுடன் முரண்பட்டு நிற்கும் அரபுத் தேசிய வாத தலைவர்களுக்கு எதிராக ஏராளமான அவதூ பிரச்சாரங்களை கட்டவிழ்த்துவிடுகின்றன. லிபியா, ஈராக், சிரியா போன்ற நாடுகள் ஏகாதிபத்தியங்களால் விமர்சிக்கப்படுவதன் நோக்கமே இதுதான்! தனிமனித சர்வாதிகாரம் நிலவுவதாகவும், மக்கள் அடிமைகளாக நடத்தப்படுவதாகவும் காட்ட முனைகிறார்கள். இந்த விடயத்தில் ஈராக் ஆனது ஏகாதிபத்தியங்களால் ஆதரிக்கப்படும் சவுதி, குவைத் போன்ற நாடுகளை விட நல்ல நிலையிலேயே இருக்கின்றது என்பதை மறைக்கிறார்கள். ஈராக்கின் குவைத் மீதான ஆக்கிரமி-ப்பை எதிர்ப்பது, அதன் உள்நாட்டு கொள்கைகளை விமர்சிப்பது என்று வரும்-போது புரட்சியாளர்களது சுன்னோட்டங்கள் ஏகாதிபத்தியங்களின் பிரச்சாரங்-களுக்கு பலியாகிப்போய்விடக்கூடாது. இது மிகவும் முக்கியமானது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க ஏகாதி-பத்தியத்தின் நவகாலனித்துவப் பிடி மிகவும் வலிமையானது. இந்த வலிமையை அமெரிக்காவினால் ஆதரிக்கப்படும் பொம்மை அரசுகளால்கூட சகிக்க முடியாத நிலைமை ஏற்படுகின்றது. இதனால் இவர்கள் அமெரிக்காவுடன் முரண்பட நேர்கிறது. இதன் ஒரு வெளிப்பாடுதான் பனாமா விவகாரம், அமெரிக்காவைப் பொறுத்த வரையில் பொருளாதார ரீதியிலும், இராணுவ ரீதியிலும் கேந்திர முக்கியத்துவமுடைய பனாமாக் கால்வாயைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் அமெரிக்காவின் கரிசனை எவ்வளவு இருக்கும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள அமெரிக்க போதைப் பொருள் கடத்தல் பிரச்சனையாக பிரச்சாரம் செய்தது. ஆனால் சமூக அக்கறை உடையவர்களது மதிப்பீடு இதுவாக இருக்க முடியாதல்லவா! சதாம் ஹுஸை-னையும், நொரியேகாவையும் மதிப்பிடுவதில் தவறிழைப்பதும்; அதே மதிப்பீட்டை புலிகள் விடயத்திலும் பிரயோகிப்பது அந்தத் தவறை இன்னும் ஆழப்படுத்துவதும் தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்கு முடிவுகட்ட எந்த விதத்திலும் உதவப்போவதில்லை.

யுத்தத்தின் நோக்கங்களை அரசியலில் காணுமாறு, அரசியல் கொள்கைகளை பொருளாதார நலன்களில் கண்டறியுமாறும் மார்க்சியம் கற்பிக்கின்றது. எந்தவொரு யுத்தத்தையும், அதில் மோதும் குழுக்களது---

www.tamilarangam.net



---நலன்களையும் புரிந்துகொள்ள அந்த சமூகம் பற்றிய வர்க்கப் பகுப்பாய்வு முன்நிபந்தனையாகிறது. குறிப்பிட்ட ஒரு அரசியலை நிர்ணயிப்பதில் பொருளாதாரம் மட்டுமே பங்களிப்பதில்லை. வரலாறு, சித்தாந்தம், தலைமை தாங்குபவர்களது தனிப்பட்ட ஞானாதிசயங்கள் போன்ற ஏனைய காரணிகளும் குறிப்பான பங்களிப்புகளைச் செய்யலாம். ஏனைய காரணிகளின் பங்களிப்புகளை விளக்குவதற்கு, முதலில் வர்க்கப் பகுப்பாய்வை மேற்கொள்வோம், இதனடிப்படையில் பொருளாதார ரீதியிலான விளக்கங்களுக்கு விதிவிலக்காக இருக்கும் அம்சங்களை ஏனைய காரணிகள் மூலமும் விளக்க முனைய வேண்டும். இந்த வகையில் புலிகளின் அரசியலைப் புரிந்து கொள்ள தமிழ்ச் சமூகம் பற்றிய வர்க்கப் பகுப்பாய்வு தீர்க்கமான அம்சமாகிறது. எத்தனைதான் தவறுபாடுகள் இருப்பினும் கூட இன்று நாம் மேற்கொள்ளும் வர்க்கப் பகுப்பாய்வு முறையும், தத்துவார்த்த தேடலும் நீண்ட காலத்திலாவது இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான ஒரே வழியாகும். புலிகளுக்கு அரசியலே கிடையாது என ஒதுக்கிவிடுவதோ, பொருளாதார வாதம் என்று கூறி இந்தவிதமான வர்க்கப் பகுப்பாய்வு முறைகளையே கைவிட்டு குறு நலன்கள் என வாரிடுவதோ எந்த விதமான முன்னேற்றத்தையும் தரப்போவதில்லை. இவை இன்று எம் மத்தியில் தங்கியுள்ள தத்துவார்த்த வறுமையும், சற்றுக்குட்டித் தனமும் நிலைத்து நிற்பதற்கே வழிவகுக்கும்.

## தன்னியல்பும் திட்டமும்
**************

கடந்தகால போராட்ட அமைப்புகள் எதனிடமும் திட்டம் இருக்கவில்லை, தன்னியல்புப் போக்கே நீடித்தது. போராட்டம் அடைந்த மோசமான பின்னடைவுகளுக்கு இதுவே பிரதான காரணமாகும். என்ற உணர்வு இன்று பரவலாக ஏற்பட்டு வருகின்றது. இது ஓர் ஆரோக்கியமான தொடக்கமே! திட்டத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு ஒரு உவமானத்தை எடுத்துச் சொல்வோம்.

ஒரு குழுவினர் ஓர் அடர்ந்த காட்டைக் கடக்க விரும்புவதாக வைத்துக் கொள்வோம். அவர்களிடம் அந்தப் பிரதேசத்தைப் பற்றிய வரைபடமும் ஒரு திசையறி கருவியும் இருப்பின் இவற்றின் உதவியுடன் இவர்கள் தமது இலக்கை அடைய தாம் போக வேண்டிய பாதையை முன்னரே திட்டமிட்டுக் கொள்வதும் சாத்தியப்படும். இதன்மூலம் அவர்கள் தமது பாதையில் எதிர்நோக்கியுள்ள இடையூறுகளையும் ஓரளவு முன்னரே ஊகித்துக்கொள்ள முடிவதால் அவற்றை முகங்கொடுப்பதற்கான தயாரிப்புகளுடன் தமது பயணத்தைத் தொடர்வது சாத்தியப்படும். இப்படிச் செய்வதன் மூலம் அந்தக் குழுவானது தனது இலக்கை குறுகிய காலத்திலும், குறைந்தபட்ச இழப்புக்களுடனும் சென்றடைவது சாத்தியப்படும். இந்த சாதனங்கள் எதுவும் இல்லாமலும், பாதையை முன்னரே திட்டமிடாமலும் ஒரு குழு தமது பயணத்தைத் தொடர்வதாக வைத்துக்கொள்வோம். பயணத்தைத் தொடங்கும்போது எல்லாமே தெளிவாக இருப்பது போலத்தான் தோன்றும். ஆனால் காட்டினுள் நுழைந்து ஆழமாக ஊடுருவத் தொடங்கியவுடன் திசை தவறுகிறது. அவ்வப்போது தோன்றும் உணர்வுகளின் அடிப்படையில் முன்னெதிர்பாராத இடையூறுகளைக் கடந்துபோக முனைகின்றனர். பல தடவைகளில் திசை தவறுகின்றனர். இதனால் அனாவசியமான அலைச்சல் நீடிக்கின்றது.———

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

———எதிர்பாராது தோன்றும் ஆபத்துக்களை முகம் கொடுக்க எந்தத் தயாரிப்பும் இல்லை. இதனால் பலர் களைப்பினாலும், உணவின்மையாலும், மிருகங்களின் தாக்குதல்களினாலும் மடிந்து போகின்றனர். அரிதாக மிகச் சிலர் மட்டும் தமது இலக்கை நீண்ட காலத்தாமதத்தின் பின்பு பாரிய இழப்புகளுடன் சென்றடைகின்றனர்.

சமுதாயத்தை அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் புரட்சிகர பயணம் என்பதும் ஒருவகையில் இதனை ஒத்ததுதான். தாம் வாழும் சமுதாயம் பற்றிய போதிய ஆய்வுகளையும், மிகவும் முன்னேறிய தத்துவத்தையும் பெற்றிருக்கும் ஒரு புரட்சிகர அமைப்பானது அவற்றைப் பயன்படுத்தி தான் செல்லவேண்டிய இலக்கையும் அதற்கான வழிமுறைகளையும் உணர்வுபூர்வமாக வகுத்துக் கொள்கிறது. இதனால் தனது வெற்றியை அர்த்தமற்ற இழப்புகளின்றி அடைவதை உத்தரவாதப்படுத்திக் கொள்கிறது. இந்த சாதனங்களையோ திட்டத்தையோ கொண்டிராத ஓர் அமைப்பு போராட்டத்தில் இறங்கும்போது தனது இலக்கை, பாதையை தவறவிட்டு அலைக்கழிகிறது. பல அழிவுகளின்பின் சிலர் தொடங்கிய இடத்திற்கே திரும்பி வருகின்றனர். அரிதாக ஒருசிலர் மட்டும் நீண்டகால தாமதத்திற்குப்பின் பாரிய இழப்புகளுடன் தமது இலக்கை அடையும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

இந்த வகையில் ஒவ்வொரு புரட்சிகர அமைப்பிற்கும் திட்டம் என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். திட்டத்தின் அத்தியாவசியத் தன்மையானது வலியுறுத்தப்படுகையில் இந்த வலியுறுத்தல் இன்னோர் கோடிக்கு எடுத்துச் செல்லப்பட்டு "திட்டமில்லாத யுத்தம் எப்படி தேசிய யுத்தமாகும்?" என்று சமர் குறிப்பிடும் போது திட்டத்தின் தேவை பற்றிய எமது விளக்கம் எதிர் மறை அர்த்தம் பெறுகிறது. தேசிய விடுதலைப் போராட்டம் மட்டுமல்லாமல் வர்க்கப் போராட்டம் கூட அதன் வெற்றியை உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்கு திட்டத்தை கொண்டிருப்பது அவசியமே. ஆனால் இதற்காக திட்டத்தைக் கொண்டிராத போராட்டம் எதுவுமே தேசிய விடுதலைப் போராட்டமாகவோ வர்க்கப் போராட்டமாகவோ கருதப்படமுடியாது என்பதல்ல. தன்னியல்பு என்பதும் கூட உணர்வைக் கரு அளவில் கொண்டிருப்பது தானே, வரலாற்றில் பல வர்க்கப் போராட்டங்கள் தன்னியல்புடன் நடத்தப்பட்டுள்ளன. நிலப்பிரபுத்துவத்தின் கீழ் நடைபெற்ற பல விவசாயிகளின் போராட்டங்கள், மதப்போராட்டங்கள் எனும் வடிவிலேயே நடந்தேறின. இந்தியாவின் சைவ, சமண, பௌத்த மதங்களிடையிலான போராட்டங்கள் கூட மதத்தின் பேரால் நடத்தப்பட்ட வர்க்கங்களுக்கிடையிலான போராட்டங்களே எனக் விவாதிப்போரும் உளர்.

ஒரு போராட்டத்தில் வெற்றிக்கு திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தும்போது, திட்டம் இல்லாத போராட்டம் வர்க்கப் போராட்டமாகவோ அல்லது தேசிய விடுதலைப் போராட்டமாகவோ அமையாது என்று கூறி விட முடியாது. திட்டம் இல்லாத போராட்டம் அநாவசியமான இழப்புகளை ஏற்படுத்தும், பல சந்தர்ப்பங்களில் இலக்கைத் தவற வைக்கும், பெரும்பாலும் வெற்றியைக் கொண்டுவர மாட்டாது என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் இந்த உண்மைகள் எல்லாம் ஒரு சக்தியை தேசிய சக்தியா இல்லையா என்று மதிப்பிடுகையில் அதனிடம் திட்டம் உண்டா இல்லையா என்ற கேள்வியை எழுப்புவதை நியாயப்படுத்திவிட மாட்டாது. தேசிய இயக்கத்துடன் ஒரு குறிப்பிட்ட சக்தி கொண்டுள்ள உறவிலிருந்தே அது தேசிய சக்தியா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும்.———

www.tamilarangam.net



---இந்த சந்தர்ப்பத்தில் ஒரு எதிர்ப்புக் குரலும் கேட்கிறது. "முற்போக்கு சக்திகள் என்று கூறிக் கொள்வோர் வெறுமனே தத்துவம், திட்டம் என்று கூறி சர்ச்சைப்பட்டு காலத்தை ஓட்டுவதும், தமக்குள் ஐக்கியப்படுவதை தவிர்ப்பதும் தான் மிச்சம். புலிகளிடம் இவற்றில் என்ன இருக்கிறது.? ஆனால் அவர்கள் போரா-ட்டத்தின் தலைமையைக் கைப்பற்றிக் கொண்டு போராட்டத்தை முன்னெடுக்க வில்லையா? என்பதுதான் அந்த ஆட்சேபனைக் குரல். இங்கு புலிகளின் வெற்றி என்பது இன்று அது போராட்டத்தின் தலைமையைக் கைப்பற்றிக் கொண்டதை மட்டுமே கருத்திற்கெடுத்து தீர்மானிக்கப்படுவது அல்ல. அது தமிழ் தேசியத்திற்கு இதுவரை கொண்டு வந்தவை எவை? எதனைப் படைக்க முனைகிறது என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். இன்று போராட்டம் இத்தனை மோசமாக சீரழிந்ததற்கு திட்டமின்மை பிரதான காரணி என உணர்ந்துகொண்டு அந்தத் தவறை சீர் செய்வதன் மூலம்தான் நாம் இந்த சீரழிவிலிருந்து போராட்டத்தை மீட்க முடியும். ஆனால் தத்துவார்த்தப் போராட்டம் என்பதன் பின்னால் குறுகிய கண்ணோட்டம், குழுவாதம் போன்றவற்றிற்கு ஆட்பட்டு இடதுசாரி அமைப்புகள் கடந்த காலத்திலதில் சிதைந்துபோனது பற்றிய விமர்சனத்தை, படிப்பினையை இந்த ஆட்சேபனைக் குரலிலிருந்து கற்றுக் கொள்வது, இன்று மாற்றுத்தலைமையை படைக்க முனையும் எமக்கு பயனுள்ளதாக இருக்கும்.

'... ஆண்டியின் பிரசைகள்' திட்ட-மின்மை பற்றியும், தன்னியல்பு பற்றியும் சில அக்கறைக்குரிய விடயங்களைத் தொட முயன்றார்கள். புலிகளுக்கும், சமூகத்திற்கும் இடையிலான வேறுபாடு என்ன என்பது போன்ற கேள்விகள் கவனத்திற்குரியவை. இது தொடர்பான கருத்துக்களை இன்னும் வளர்த்தெடுப்பது பயனுள்ள அமையும் எனக் கருதுகிறோம்.

## தமிழீழ விடுதலைப் போராட்டமும் 83 ... ஜுலை தாக்குதலும்......

******************************************

... தரகு முதலாளிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் புலிகள் தேசிய விடுதலைப் போராட்டத்தை சீர் குலைப்பதற்கு செய்த வேலைகள் என பல விடயங்களை சமர் பட்டியல் இடுகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கது 83 ஜுலை தாக்குதலாகும். "மக்கள் அமைப்பு போராட்டம் தொடர்பான கருத்துக்கள் வளர்ந்து கொண்டிருக்கும் நிலையில் வெறுமனே இராணுவ நோக்கில் தாக்குதலை நடத்தி போராட்ட அமைப்புகளை பாய்ச்சல் நிலையில் வீங்கச்செய்து அரசியல் கோரிக்கைகளை விட இராணுவத் தேவைகளை வளர்த்திட செய்தது. இந்தக் கருத்தானது விரிவாக பரிசீலிக்கப்பட வேண்டியதாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 83 ஜுலை தாக்குதலின் பங்கு என்ன?

83 ஜுலையில் திருநெல்வேலியில் நடைபெற்ற 13 இராணுவ வீரர்களை பலிகொண்ட புலிகளின் கண்ணிவெடித்தாக்குதல் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க சம்பவமே. என்ற போதிலும் திடீரென தோன்றிய ஒரு சம்பவம் அல்ல, 83ஜுலை தாக்குதல் என்பது தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் முன்னர் நடைபெற்ற பல போராட்டங்களின் ஒரு இயல்பான வளர்ச்சி (...) நிலைமட்டுமே. 1956 ல் சிங்கள மொழியை அரச கருமமொழியாக்கும் சட்டத்தை எதிர்க்க அப்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த தமிழரசுக்கட்சி பாராளுமன்றத்திற்கு வெளியே சத்தியாக்கிரகம் செய்தது. இந்தப் போராட்டம் சிங்களக்காடையர்களால் முறியடிக்கப்பட்டது. பின்பு, 1960இல் தமிழ்ப்பிரதேசம் எங்கும் சத்தியாக்கிரக, சட்ட மறுப்பு போராட்...

www.tamilarangam.net



தீவிரத்தில் தமிழ் பிரதேசத்தில் அரசின் இயல்பான நிர்வாகம் நடத்தப்படுவது சாத்தியமற்று போன நிலையில் இராணுவத்தின் மூலம் இந்த போராட்டம் நசுக்கப்பட்டது.

70 களில் ஐக்கிய முன்னணி அரசு கொண்டுவந்த தமிழர் விரோத அரசியல் அமைப்புச் சட்டம், தரைப்படுத்தல் போன்றவற்றை எதிர்த்து மாணவர்கள் இளைஞர்கள் வீதிகளில் இறங்கலானார்கள். மாணவர் பேரவை போன்ற அமைப்புகள் தோற்றம் இதுடன் தொடங்குகிறது. இந்தப் போராட்டங்கள் தீவிரம் அடைந்த நிலையில் தமிழீழ கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது தன்னியல்பாக முன்வைக்கப்பட்டது. 70 களின் நடுப்பகுதியில் சிறிது சிறிதாக தன்னியல்பாக தொடங்கிய ஆயுதம் தாங்கிய சில நடவடிக்கைகள் 70 களின் பிற்பகுதியில் திட்டவட்டமான அமைப்பு வடிவத்தையும், குறிப்பான இலக்குகளையும் நோக்கி வளர்ந்தது. 80 களின் முதல் மூன்று ஆண்டுகளில் போராட்ட அமைப்புகளின் இராணுவ இலக்குகளாக பொலிஸ் நிலையங்களும், இராணுவத்தின் சிறு பிரிவுகளும் மாறிவிட்டிருந்தன. இந்த வீரமான தாக்குதல்கள் மூலம் போராட்ட அமைப்புகள் கணிசமான அளவு தன்னியக்க ஆயுதங்களை கைப்பற்ற தொடங்கின. இவ்வளவும் நடைபெற்று முடிந்த நிலையில் போராட்டமானது தன்னியல்பாகவே இராணுவ ரீதியில் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்தது. அதுதான் கண்ணி வெடித்தாக்குதல்.

இதே காலகட்டத்தில் சிறீலங்கா அரசின் பேரினவாத அணுகுமுறையுடன் கூடிய படை திரட்டலானது அரசபடைகளை சிங்களப் படைகளாக மாற்றிவிட்டிருந்தது. இதனால் தமிழ்ப் போராட்ட அமைப்புகள் அரச படைகளைத் தாக்கும் போது அந்தத் தாக்குதல்கள் சிங்களவர்களுக்கு எதிரான தாக்குதல்களாக சிங்கள மக்கள் மத்தியில் அர்த்தப்படக் கூடிய நிலைமை உருவாகியிருந்தது. இதனால் சிறீலங்கா இராணுவத்திற்கெதிரான தாக்குதல்களாக அர்த்தப்படுத்தப்பட்டது. இது இன வன்செயலுக்கு வாய்ப்பான சூழ்நிலையை ஏற்படுத்தி கொடுத்தது. 83 ஜூலை இனவன்செயலானது சாதாரண சிங்கள மக்கள் ஆத்திரப்பட்டு தன்னியல்பாக கிளர்ந்தெழுந்து நடத்திய சாதாரணமான இனக் கலவரமல்ல. இதுமிகவும் திட்டமிடப்பட்டது. சிங்கள அரசியல்வாதிகள், படையினர், குண்டர்கள் போன்றவர்கள் மிகவும் திட்டமிட்ட முறையில் வாக்காளர் பட்டியலுடன்வந்து நடத்திய இன ஒழிப்பு நடவடிக்கையாகும். சிறீலங்கா அரசுக்கும், பேரினவாத சக்திகளுக்கும் இதில் நேரடி பங்குண்டு. புலிகள் தமது தாக்குதல் மூலம் இப்படிப்பட்டதொரு தாக்குதல்களை எதிர்பார்க்கவில்லை. பிற்காலங்களில் அரசு மேற்கொண்டு கலவரங்கள் நடப்பது குறித்து அபகீர்த்தியை ஏற்படுத்தும் என்ற நோக்கில் கலவரங்களை தடுப்பத் தவிர்க்க முனைந்த காலங்களில், புலிகள் கலவரங்களை உருவாக்கும் நோக்குடன் நடத்திய அநுராதபுர படுகொலைகள், அரந்தலாவ படுகொலைகள், புறக்கோட்டை குண்டு வெடிப்பு போன்ற மிக மோசமான, சிங்கள மக்களது உணர்வுகளை மிகவும் பாதிக்கக்கூடிய தாக்குதல்களின் போதுகூட இனவன்செயல்கள் என்று குறிப்பிடத்தக்க எதுவும் நடைபெறாதது 83 இனப்படுகொலைகளில் அரசின் பாத்திரத்தை தெளிவாகக் காட்டக்கூடியது. 77இல் ஆட்சிக்கு வந்த யூ.என்.பி அரசாங்கம் உடனடியாகவே ஒரு இன வன்செயலை நடத்தியது. இதனை அடுத்து வந்த காலங்களில் தீவிர இனவாத பிரச்சாரத்தை தானே முன்நின்று நடத்தியது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மீதான நம்பிக்கையில்லாதத் தீர்மானம் என்ற கேலிக் கூத்தின் மூலம் தமது இனவாத பிரச்சாரத்திற்கு ஒரு பகிரங்க மேடையை---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



---உருவாக்கினார்கள். இதனைத் தொடர்ந்து சிறில் மத்தியூ குழுவினர் இனவாத பிரச்சாரத்தை பகிரங்கமாக முன்னெடுத்துச்சென்றார்கள். 81இல் யாழ் நூலக எரிப்பு, அடிக்கடி நடந்து வந்த இனவன்செயல்கள் என்று இது தொடர்ந்தது. இப்படியாக இலங்கா அரசிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் ஆழமாக கட்டமை-க்கப்பட்டிருந்த இனவெறி வெளிப்படும் ஒரு சந்தர்ப்பத்தை மட்டுமே 83 ஜூலை தாக்குதல் ஏற்படுத்திக் கொடுத்தது.

83 ஜூலை இனப் படுகொலைகள் தமிழ் மக்களது மனங்களில் தமது பாதுகாப்பற்ற நிலைமையை உணரச் செய்து, தனியான அரசு அமைப்பதன் மூலம் தமது பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தலாம் என்ற கருத்தை ஆழமாக பதியச் செய்தது உண்மையே. எனினும் போராட்ட அமைப்புகள் வீங்கியதில் இன்னோர் காரணியும் சம்பந்தப்படுகிறது. அதுதான் இந்திய அரசு 1977 முதல் யூ.என்.பி. அரசின் அமெரிக்க சார்பு நிலைப்பாட்டில் எரிச்சலடைந்திருந்த இந்திய அரசு இலங்கா அரசை பணியவைப்பதற்கான தருண-த்தை எதிர்பார்த்திருந்தது. 1983 இனவன்செயலும், அதனைத் தொடர்ந்து சர்வதேச ரீதியில் இலங்கா அரசுக்கு ஏற்பட்ட அவப்பெயரும், தமிழ் மக்கள் தமிழ்நாட்டில் அகதிகளாக குவியத் தொடங்கியதும், தமிழ் நாட்டு மக்களதும் அரசியல்வாதிகளதும் உணர்வு நிலைகள் போன்றவற்றை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட இந்திய ஆளும்வர்க்கம் இராணுவரீதியில் சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தத் தொடங்கியது

1983 ஜூலை வரையில் தீவிரமாக இயங்கி வந்த சில சிறிய குழுக்களையும், கிட்டத்தட்ட அழிந்து போன நிலையில் இருந்த சில குழுக்களையும் தேர்ந்தெடுத்த இந்திய அரசு பயிற்சியும் ஆயுத உதவிகளும் வழங்க ஆரம்பித்தது. இவ்வாறு இந்திய அரசு உதவுவதன் நோக்கம் பற்றி இந்த அமைப்புகள் எதுவும் பெரிதாக சந்தேகிக்கவில்லை. இந்த அமைப்புகளில் இருந்த ஒரு சிலர் இவற்றை விமர்சித்தாலும் பொதுவாக இந்த அமைப்புகள் இந்திய அரசின் உதவிகளைப் பெறுவதற்கு போட்டி போட்டுக் கொண்டு செல்லும் நிலைமைதான் காணப்பட்டது. இந்திய அரசை திருப்திப்படுத்துவதற்காக தமது அரசியல் நிலைப்பாடுகளைக்கூட மாற்றிக் கொண்ட அமைப்புகளும், இந்தியாவிற்கு தாமே உயர்ந்தபட்ச விசுவாசம் உடையவர்கள் என்பதை நிரூபிக்க முயன்றவர்களும்கூட இருந்தார்கள். இந்தியா எமது நட்பு சக்தி என்பதே பொதுவான கோசமாக இருந்தது. இதே கருத்தை தமிழ் மக்களுக்கு ஒரு சில குழுக்கள் தவிர்ந்த அனைத்து அமைப்புகளும் ஊட்டின.

இந்திய தலையீடு சிறிய குழுக்களையும், மற்றும் அழிந்துபோகும் நிலையில் இருந்த குழுக்களையும் செயற்கையாக பருக்கச் செய்தது. போராட்டமானது சுயசார்பில்லாத இந்திய அரசை சார்ந்த நீண்ட பாய்ச்சல் வடிவை எடுத்தது. அமைப்புகளை இப்படியாக வீங்கச் செய்ததில் 83 கலவரமும் இந்திய அரசும் ஆற்றிய பாத்திரத்தைவிட, எப்படிப்பட்ட குறுக்கு வழிகளாலும் தம்மை வளர்த்துக் கொள்ள முனைந்த போராட்ட அமைப்புகளின் தலைமைகள் பிரதான காரணிகளாக விளங்கின. தமது தேசத்தின் நலன்களையும், எதிரியின் நலன்களையும் சரியாக மதிப்பிட்டு செயற்படும் புரட்சிகர நிலைமை இந்த அமைப்புகளிடம் இருந்திருப்பின் 83 கலவரமும், இந்திய அரசும் கூட போராட்-டத்தை இவ்வளவு சீரழித்திருக்க முடியாது. போராட்டத்தை சீரழித்ததில்---

www.tamilarangam.net



---அமைப்புகளின் குட்டிமுதலாளித்துவ தலைமைகளின் குறுகிய கண்ணோட்டங்களே பிரதான பாத்திரம் வகித்தன. அந்தக் காலகட்டத்தில் இருந்த மிகவும் முற்போக்கான, புரட்சிகரமான அமைப்பாக கருதப்பட்ட ஒரு அமைப்பும் கூட ஆரம்பத்தில் இந்தியாவின் தலையீட்டை கடுமையாக விமர்சித்தாலும், பின்பு இந்தியாவின் இந்தியாவின் உதவி பெற்ற அமைப்புகள் பாரிய அமைப்புகளாக மாறி போராட்டத்தை தீவிரமாக முன்னெடுக்கையில், தாம்பின்தங்கிவிட்டதாக உணர்ந்தது. இந்தியாவின் உதவிகளை 'தந்திரோபாய நோக்குடன்' பெறுவது, இந்தியாவைப் 'பயன்படுத்துவது' என்ற முடிவிற்கு வந்தது. ஆனால் இந்த அமைப்பு பின்பு இந்தியாவிடம் இருந்து உதவிகளைப் பெற முடியவில்லை என்பது வேறு விடயம். ஒரு புரட்சிகர குழுகூட தன்னியல்பு அலையில் அமத்துச் செல்லப்பட்டதைத் தானே இங்கு காண்கிறோம்.

பல்வேறு சக்திகளும் கலந்து கொள்ளும் தன்னியல்பாகவே மக்கள் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒரு போராட்டத்தில் சமர் குறிப்பிடுவது … போல முதலே மக்கள் அமைப்பு போராட்டம் போன்ற கருத்துக்களின் வளர்ச்சி பின்பு இக் கருத்து வளர்ச்சியில் வெளிப்பாடாக ஆயுத நடவடிக்கைகள் என்றதொரு ஒழுங்கை எதிர்பார்க்கலாமா? எந்த ஒரு போராட்டமும் சதாரண விளையாட்டு போல, முன்னரே தீர்மானிக்கப்பட்ட திட்டவட்டமான நகர்வுகள், முன்னரே வரையறுக்கப்பட்ட விதிகளின் படி நடை பெற்று முடிவதில்லை. போராட்டத்தில் பல தரப்பட்ட சக்திகள் நேரடியாகவு மறைமுகமாகவும் ஈடுபட்டு போராட்டத்தின் ஒட்டு மொத்தமான போக்கிலும், அமைப்புகள் பரஸ்பரம் ஒன்றின் மீது ஒன்று தாக்கம் நிகழ்த்தும். வரலாறு முன்னர் அறிந்திராத பல விடயங்கள் தன்னியல்பாகவே மக்களின் போராட்டத்தில் இருந்து தோன்றியெழும். புரட்சியாளர் செய்யக் கூடியதெல்லாம் சமூகம் பற்றியும் போராட்டம் பற்றியும் விரிவாக பரிசீலனை செய்து, தமக்கு வெளியிலும் வேறு சக்திகள் செயற்படலாம் என்பதையும், மக்கள் மத்தியிலிருந்து தன்னியல்பாக எழக் கூடிய போராட்ட வடிவங்களையும் கருத்திற்கு எடுத்து தமது திட்டத்தையும், மூலஉபாயத்தையும், நடை முறைத்தந்திரங்களையும் வகுத்து செயற்படுவதுதான். இதன் மூலமாக அந்த போராட்டத்தின் உணர்வுபூர்வமான சக்தியாக நிலைநாட்டிக் கொள்வதன் மூலம் போராடும் மக்களின் உண்மையான தலைமையாக திகழ்வதுதான். எமது போராட்டத்தில் நடந்தது என்னவென்றால், மக்களின் தன்னியல்பான போராட்டங்களுக்கு புரட்சியாளர்களது உணர்வு மிகவும் பின்தங்கிவிட்டதுதான். இப்போது தன்னியல்பை குறை கூறுவதன் மூலம் நாம் பின்தங்கிவிட்ட தவறை மறைத்துவிட முயலக்கூடாது.

1968இல் யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற சாதிய எதிர்ப்புப் போராட்டத்தில் கொம்யூனிஸ்ட் கட்சி மிகவும் தீவிரமாகச் செயற்பட்டது. இதன் தீவிரமும் செல்வாக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்களை பாராளுமன்றத்தில் 'குட்டி வியட்நாம்' பற்றிப் பேசி தமது வயிற்றெரிச்சலைக் கொட்டித் தீர்க்க வைத்தது. ஒரு புரட்சிகர காலம் தீவிரமாக போய்க்கொண்டிருந்த ஒருசமூகத்தில் இப்படிப்பட்ட ஒரு 'பாசிச' தலைமை எப்படி உருவானது? என்ற கேள்வி இப்போது தீவிர கவனத்தை வேண்டி நிற்கிறது. இவ்வாறு நடைபெற்றதில் புரட்சிகர கட்சிகள், தமிழ்ப் புத்திஜீவிகளின் பாத்திரம் என்ன என்பதும் இதே அளவு முக்கியத்துவமுடைய பிரச்சனையே. 70களில் சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் தீவிரம் குறைந்துபோனதற்கு உயர்சாதி இளைஞர்களின் ---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



---சரங்களுக்கு ஆயுதங்கள் வந்ததே காரணமென்று 'தண்டில்' சாந்தன் குறிப்பிடுகிறார். இவர் 70 களுடன் தொடர்புடைய இன்னொர் மாற்றத்தை கவனிக்கத் தவறிவிடுகிறார். அதுதான் 1970 இல் பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசு முன்னெடுத்த தமிழர் விரோதக் கொள்கைகளும், இவற்றின் விளைவாக தமிழ்த் தேசியவாதம் தீவிரமடைந்ததுமாகும். இதனால் சாதிய எதிர்ப்புப் போராட்டம் இரண்டாம் பட்சமான நிலையை எடுத்தது. அரசின் தமிழர் விரோதக் கொள்கைகளை எதிர்த்து தமிழ் மக்கள் மத்தியிலிருந்து உருவான தன்னியல்பான எழுச்சியை தமிழரசுக் கட்சியும் (பிற்காலத்தில் த.வி.கூட்டணியும்) உறுதியாகப் பற்றிப் பிடித்தது. ஆரம்பத்திலிருந்தே தமிழ் மக்களின் தேசிய எழுச்சியைப் புரிந்து கொள்ள சரியாக மதிப்பிடத்தவறிய கொம்யூனிஸ்டு கட்சி 70 களில் தொடர்ந்து முன்னேறிய தமிழ் மக்களின் தேசிய எழுச்சியில் எந்தவிதமான தாக்கத்தையும் செலுத்த முடியவில்லை.

மரபுவழி மார்க்சியம் தேசியத்தை சரியாக மதிப்பிடவில்லை. என்ற விமர்சனம் ஒன்று உலகளாவிய அளவில் இருக்கிறது. இலங்கை கொம்யூனிஸ்டு கட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்தே சிங்கள பேரினவாத சக்திகள் அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழருக்கு எதிரான நேரடித் தாக்குதலில் இறங்கியபோது, அதன் எதிர் விளைவாக தமிழ்த் தேசியம் ... எழுந்தது. தமிழ்த் தேசியமானது அடக்குமுறைக்கு எதிரானது என்ற வகையில் தன்னளவில் உள்ளூர முற்போக்கான அம்சத்தைக் கொண்டுள்ளது. தேசியம் என்பதை முதலாளித்துவத்தின் பக்கவிளைவு எனக் கருதிய இலங்கை கொம்யூனிஸ்டு கட்சிகள் ஆரம்பத்திலிருந்தே அதனைப் புறக்கணித்தே வந்தனர். பாராளுமன்ற வாதத்தின் மூழ்கிய சில இடதுசாரிகள் தேர்தல் நோக்கங்களுக்காகவும், சிலர் தம்மையறியாமல் இனவாதத்திற்குப் பலியாகிப்போன நிலையிலும்கூட அக்கட்சியில் இருந்த தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களது தன்னியல்பான போராட்டங்களை ஆதரிக்காமல் ... விட்டார்கள். தாம் அவ்வாறு ஆதரிக்காமல் விட்டதற்கு, தமிழர் கட்சிகளை பிற்போக்கு கட்சிகள் என்று காரணம் காட்டினர். சிங்கள இடதுசாரிகளோ தேவைப்பட்டபோது சிங்கள பேரினவாத முதலாளித்துவக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்தார்கள். ஆனால் தமிழ் இடதுசாரிகள் தமிழ் மக்களது சனநாயக பூர்வமான பேரினவாதத்திற்கு எதிரான போராட்டங்களில்கூட தம்மை இணைத்துக் கொள்ளத் தவறினார்கள். தம்மை இனவாதிகள் என்று கட்சியி... சிங்களத் தலைமைகள் முத்திரை குத்திவிடலாம் என்ற அச்சத்தில் மிகவும் கவனமாகவே கருத்துகளையும் தெரிவித்தார்கள். தலைமையில் ஊடுருவி விட்ட சிங்களப் பேரினவாதத்தை விமர்சிக்கத் தவறினார்கள். இப்படியாக தமிழ் மக்களது தேசிய எழுச்சியிலிருந்து தமிழ் இடதுசாரிகள் எவ்வளவு தூரம் தமிழ் மக்களுக்கு அவர்களை நிரந்தரமாகவே தள்ளி வைத்து விட்டார்கள். தமிழ் இடதுசாரிகள் இதய புறக்கணிப்பின் விளைவு முதலாளித்துவ சக்திகளே தேசிய எழுச்சிக்கு தலைமை தாங்கின. இந்தப் பிற்போக்கு சக்திகள் ஆரம்பம் முதலே தமிழ் இனவாதத்துடன்னேயே தமது அரசியலை முன்னெடுத்தனர். இஸ்ரேல்தான் தமிழ் மக்களுக்கு முன்மாதிரியாகக் காட்டப்பட்டது. தமிழ் மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றப்பட்ட பிற்போக்கு அரசியல் இன்று புலிகளின் வழவில் வந்து சேர்ந்துள்ளது. தேசியம் தொடர்பாக முறையான தத்துவார்த்த ஆய்வுகளை மேற்கொண்டு தமிழ்த் தேசிய இயக்கத்தை சரியாக மதிப்பீடு செய்து, அந்தப் போராட்டத்தில் புரட்சிகர தலைமையை நிலைநாட்டும்வரை இந்த பயங்கரமான பிற்போக்கு நிலைமை ஏற்படுவதை தவிர்க்க முடியாததே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசியம் தன்னுள் உள்ள முற்போக்கான அம்சங்களைக் கொண்டிருந்த போதும், தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்கும் சக்தியின் அரசியலைப் பொறுத்தே அதன் குறிப்பான வடிவம் நிர்ணயம் பெறும். ஒரு புரட்சிகர தலைமை உருவாவது சாத்தியமானால் தமிழ்த் தேசியம் புரட்சிகரமான பாத்திரத்தையே ஆற்றும். அது இல்லாதபோது பம்பிற்போக்கான பாத்திரத்தையே அது தொடரும். பொதுவாகவே தேசிய இயக்கங்களில் உணர்ச்சிமிகுந்த கோசங்கள் இலகுவில் வெற்றிபெறும் வாய்ப்பு அதிகம் என்பதால் பிற்போக்கு சக்திகள் இலகுவில் இங்கு ஊட்டம் பெற்றுவிடும் வாய்ப்புள்ளது. எனவே தமிழ்த் தேசியத்தின் வருங்காலமானது தமிழ் சமூகத்திலுள்ள முற்போக்கு சக்திகளின் கரங்களிலேயே உள்ளது.

இன்றைய நிலைமைகளுக்கு தமிழ்ப் புத்திஜீவிகளின் பங்களிப்புகள் எப்படி காரணமாயின என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும். தமிழ்த் தேசிய எழுச்சி ஓங்கிய காலத்தில், இடதுசாரிக் கட்சிகளின் வழியில் இவர்களும் தேசிய எழுச்சியை முதலாளித்துவ சித்தாந்தம் என ஒதுக்கித் தள்ளினார்கள். 70 களை அடுத்த காலங்களில் இலக்கியம் என்ற களத்தினுள் தம்மை மட்டுப்படுத்திக் கொண்டார்கள். இலக்கியத்தைப் பொறுத்த வரையில் இவர்கள் சில குறிப்பிடத்தக்க சாதனைகளைப் புரிந்தார்கள் என்பது உண்மையே ஆயினும் தமிழ்த் தேசியத்தின் இருப்பே கேள்விக்குள்ளான இன்றைய நிலையில், அதன் தலைமை ஒரு 'பாசிச' கும்பலின் பிடியில் சிக்கிக் கொண்ட இன்றைய நிலையில் இந்த இலக்கிய சாதனைகளை வரலாறு எவ்வாறு மதிப்பிடும் என்பது விவாதத்துக்குரியதே.

இயற்கையின் பொருளாதார வளங்கள் ஒப்பீட்டளவில் குறைந்த ஒரு வரண்ட பிரதேசத்தில், கைத்தொழில் வளர்ச்சிகள் பேரினவாதத்தால் திட்டமிட்டு மறுக்கப்பட்ட நிலையில் வாழும் ஒரு சமூகத்தில் அரச துறையே பிரதான உத்தியோக வாய்ப்பாக அமைந்தது. இப்படிப்பட்ட ஒரு சமூகத்தில் அரச கரும மொழி கல்வியின் பாரபட்சம் என்பவை தீவிரமான பாதிப்புக்களை ஏற்படுத்தும். இவ்வாறே அந்த தேசத்தின் தாயகப்பகுதிகள், விவசாய நிலங்கள், கடற்கரை ஓரங்கள் குடியேற்றங்கள் மூலம் அபகரிக்கப்படுவது அத்தேசத்தின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கக்கூடியவை. குடியேற்றமானது ஒரு பிரதேசத்தின் குடிசன பரம்பலை மாற்றியமைத்து விடக்கூடியது. ஒரு சிறுபான்மை இனத்தை பொறுத்தவரை அது தனது தாயகப் பகுதிகளிலேயே சிறுபான்மை சமூகமாக்கப்படுவதால், ஆ அது தன்னை அரசியல் ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்துவதை சாத்தியமற்றதாக்கி விடலாம். இதன் மூலம் மைய அரசின் அரசியல் அதிகாரத்தில் தனது பங்கை முற்றாகவே இழக்கச் செய்துவிடக்கூடியது. இந்தநிலையி மொழி உணர்வும், மண் மீதான அக்கறையும் வெறும் போலியான மிகைப்படுத்தப்பட்ட உணர்வுகளல்ல. அவை திட்ட வட்டமாக அந்த சமூகத்தில் அரசியல் பொருளாதார அம்சங்களுடன் நெருக்கமான உறவு கொண்டவை. இந்த வகையில் பொருள்வகை காரணிகளாகும். தமிழ்த் தேசத்திடம் இருந்து பறிக்கப்பட்ட இந்த பொருளாதார அரசியல் அம்சங்கள் சிங்கள தேசத்திற்கு சலுகைகளாக வழங்கப்பட்டன. எனவே சிங்கள தேசத்தில் [illegible] பேரினவாதம் வெறும் உணர்ச்சிகளை மட்டும் நம்பி செயற்படவில்லை. அதற்குள் பொருளாதார சலுகைகளும் ஊடுருவி நிற்கின்றன. இப்படியாக இன முரண்பாடுகள் என்று கூறப்படுபவை வெறும் தவறான உணர்வுகளின் ( ) மோதல் அல்ல. திட்டவட்டமான பொருளாதார அரசியல் நலன்களின் மோதலும் கூட. பாதிக்கப்பட்ட தேசத்தை பொறுத்தவரையில் அதன் உடனடி இருப்பும் எதிர் கால வாழ்வும் சம்பந்தப்பட்ட பிரச்சனையாகிறது. இப்படியாக தேசியவாதத்தின் ஆழமான தன்மைகளைப் புரிந்து கொள்ள மறந்த இந்த புத்திஜீவிகள் தேசியவாதத்தை உணர்ச்சி மயமான அம்சமாகக்கருதி எதிர்க்கலானார்கள்.

www.tamilarangam.net



மொழி உரிமை பறிக்கப்பட்டதை எதிர்த்து தமிழ்ச் சமூகம் கிளர்ந்த போது "மொழி என்பது வெறும் ஊடகம் தானே? " என்றார்கள். குடியேற்றங்கள் மூலம் பாரம்பரிய பிரதேசங்கள் அபகரிக்கப்பட்ட போது " எந்த மண்? யாருடைய மண்?" என்று கேலி செய்தார்கள். பிரிவினைக் கோரிக்கை எழுந்த போது " தமிழ் தொழிலாளியை சுரண்ட தமிழீழம் கேட்கிறான் தமிழ் முதலாளி " என்றார்கள். தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்த முதலாளித்துவ சக்திகள் பேரினவாதத்தால் தமிழ்ச் சமூகம் முகங் கொடுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நெருக்கடிகளை திட்டவட்டமாக வெளிப்படுத்தாமல் அறிவுபூர்வமற்று வெறும் உணர்ச்சி மயமான கோசங்களையும், சமயத்தில் இல்லாத கோசங்களையும் கொண்டு தனது அரசியல் அணிதிரட்டலை செய்தன என்பது உண்மையே. பொதுவாக தேசிய இயக்கங்களில் முரன்பட்ட நலன்களை உடைய வர்க்கங்கள் ஒரே தேசிய இயக்கத்தினுள் அணிதிரட்டப்படுகையில் இந்த விதமான பழமைவாதங்கள், பகுத்தறிவுக்கு பொருந்தாத கோசங்கள் கோசங்கள், முன்வைக்கபடுவது உலகளாவிய ரீதியில் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த உணர்ச்சி மயமான கோசங்களை கடந்து தமிழ்த் தேசத்தின் அடிப்படையான ஜனநாயக கோரிக்கைகள் இந்த தேசிய இயக்கத்தில் முன்னுக்கு வந்ததை புத்தி -ஜீவிகளும், இடதுசாரி கட்சிகளும் இனம் கண்டு அந்த ஜனநாயக கோரிக்கைகளை ஆதரித்து தரப்படுத்தியிருக்க வேண்டும். தாமே இன்னும் புரட்சிகரமான முறையில் முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் இந்த விதமான செயற்பாடுகளை இடதுசாரி கட்சிகளோ, புத்தி ஜீவிகளோ முன்னெடுக்க தேசியம் பற்றிய அவர்களது புரிதல் தடையாக இருந்தது.

தேசியம் பற்றிய இவர்களது நிலைப்பாடு இப்படி இருக்க இவர்கள் எவருமே சமூகத்தில் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு போராட்டத்தை தம்முடைய கருத்து நிலையிலிருந்தும் கூட மதிப்பிடுவதற்கு முறையா முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இலங்கையி தமிழ்ச் சமூகத்தின் சமூக பொருளாதார நிலைமை பற்றியோ, உலகளாவிய ரீதியில் நடைபெற்று வரும் மார்க்சிய விவாதங்கள் பற்றியோ தமிழ்ச் சமூகத்துக்கு அறிமுகப்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. தமிழ்த் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டு மார்க்சிய பாதையில் முன்னேறி வந்த ஒரு பகுதியினருக்கு வழிகாட்ட தமிழ்ச் சமூகத்தில் சரிய சரியான தத்துவம் இருக்கவில்லை. இன்னும் கூட இலங்கையில் தமிழ் சமூகத்தில் தேசிய முதலாளிகள் இருக்கிறார்களா? பாட்டாளி வர்க்கம் என்றொரு வர்க்கம் இருக்கிறதா? போன்ற விடயங்கள் இந்த முன்னேறிய பிரிவினரிடையே தலையை பித்துக் கொள்ளும் விவாதமாக இருக்கிறது. ஆனால் விவாதத்தில் ஈடுபடும் எவராவது தமது வாதங்களுக்கு ஆதாரமாக கொள்ளக்கூடிய ஆய்வுகளைக்கூட இந்த புத்திஜீவிகள் கடந்த காலத்தில் முன்வைக்கவில்லை. இதனால் தத்துவார்த்த வறுமை தமிழ்த் தேசியத்தின் முன்னேறிய பிரிவினர் அனைவரிடமும் ஆட்சிசெய்கிறது.

புத்திஜீவிகள் தமது வரலாற்று பாத்திரத்தை ஆற்ற தவறிய போது வரலாறு ஏனைய பிரிவினரிடமிருந்து தனது அன்றய தேவைகளை நிறைவு செய்தது. 15-20 வயதுடைய இளைஞர்களும், சில உதிரி வர்க்கப் பின்னணிகளைக் கொண்டவர்களும் தன்னியல்பாகவே ஆயுத நடவடிக்கைகளில் இறங்கினார்கள். படிப்படியாக தம்மை அமைப்பாக்கி கொண்டார்கள். இந்த இளைஞர்களது ஆரம்பகால அரசியல் அறிவு நம்ப முடியாதளவுக்கு அப்பாவிதனமாக இருந்தது. புலிகளின் ஆரம்பக் கொள்கை அறிக்கை, தமிழீழம் அமைந்ததும் அதனை ஆளும் பொறுப்பை அரசியல்வாதிகளிடம் ஒப்படைத்துவிட்டு தமது அமைப்பை கலைத்து விடுவதாக கூறியது. அன்று விதைத்த அது பிள்ளை வேளாண்மையைத்தான்

www.tamilarangam.net



70 களின் நடுப்பகுதிகளில் போராட்ட அமைப்புக்கள் உருவாகத் தொடங்கிய கால கட்டத்தில் புத்திஜீவிகளின் பங்களிப்பு அறவே இருக்கவில்லை. 80 களின் ஆரம்பத்தில் மிகவும் அரிதாக ஒரு சில புத்திஜீவிகள் இந்த அமைப்புகளுடன் தம்மை இணைத்துக் கொண்டு ஆபத்துக்களை நோக்க தயாராக செயற்பட்டார்கள். அப்போதே ஓரளவு காலம் கடந்திருந்தது. ஏனெனில் அந்த கால கட்டத்திற்குள்ளேயே அந்த அமைப்புகளுள் மோசமான அராஜகப் போக்குகள் முளைவிடத் தொடங்கி யிருந்தன. இந்த புத்திஜீவிகள் இந்த அராஜக போக்குகளை களைவதில் எதுவும் உருப்படியாக சாதிக்க முடியவில்லை. 83 ஜூலையின் பின்பு தேசிய அலை வீசத் தொடங்கிய காலத்தில் பல புத்திஜீவிகள் போராட்ட அமைப்புகளுடன் இணைந்து கொண்டார்கள். இப்படியாக இணைந்து கொண்ட புத்திஜீவிகளின் பங்களிப்புக்கள் குறிப்பிடும்படியாக இருக்கவில்லை. குறிப்பிடதக்க அரசியல் தத்துவார்த்த படைப்புகள் இவர்களிடமிருந்து பிறக்கவில்லை. பெரும்பாலானோர் தாம் சார்ந்த அமைப்புகளை நியாயப்படுத்தும் வேலைகளைத்தான் செய்தார்கள். அமைப்புகளில் காணப்பட்ட மோசமான அம்சங்களைக் கண்ட சிலர் இவற்றிலிருந்து வெளியேறினார்கள். இன்னும் சிலர் போராட்டம் தேக்க நிலையை அடைந்த கால கட்டத்தில் தமது அரசியல் நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டு மீண்டும் ஐக்கியப்பட்ட புரட்சி பற்றி பேசலானார்கள். இன்னும் சிலர் அமைப்புக்களுள் நடந்த ஜனநாயக மீறல்களுக்கு எதிரான போராட்டங்களில் வகித்த பாத்திரங்களை இன்று திரும்பிபார்க்கையில் அவை குறித்து யாருமே பெருமைப்படமுடியாது. இவை எல்லாமாக சேர்ந்து ஒட்டு மொத்தமாக தமிழ்ச் சமூகத்திலும், முன்னேறிய பிரிவினரிடமும் கூட இந்த புத்திஜீவிகள் பற்றி ஒரு ஆரோக்கியமான மனநிலை இல்லாமல் போனதே நடைபெற்று முடிந்தது.

புத்திஜீவிகள் 70 களில் இலக்கியம் படைத்துக் கொண்டிருந்த காலத்தில் இளைஞர்கள் பலர் பல இழப்புகளுடன் தமது அமைப்புப் பணிகளைத் தொடர்ந்தார்கள். எதிரியின் வேட்டைகளாலும், உள்முரண்பாடுகளாலும் அமைப்புகள் பலதடவை சிதைக்கப்பட்ட போதிலும் கூட அவர்கள் மீண்டும் மீண்டும் அமைப்புக் கட்டும் பணிகளைத் தொடர்ந்தார்கள். வெறுமனே 16 பேராக, 4 பேராக மட்டுமல்ல தனியொருவராக விடப்பட்ட நிலையிலும் கூட, மக்களின் ஆதரவு கணிசமாக இல்லாத காலங்களிலும் பல ஆபத்துக்களை எதிர்கொண்டு உயிரைப் பணயம் வைத்து தலைமறைவாக அமைப்புப் பணிகளை களைக்காது செய்தார்கள். இப்படியாக வரலாற்றில் தீர்க்கமான கட்டங்களில் யார் தமது பணிகளை மிகுந்த சிரமத்துடன் செய்து முடித்தார்களோ அவர்களது கரங்களில் அவர்களது பலவிதமான குறைபாடுகளையும் மீறி, போராட்டத் தலைமை சென்றடைந்தது. 70 களில் இளைஞர் அமைப்புகளின் முன்னோடிகளது பணிகளையும், புத்திஜீவிகளது பணிகளையும் இவ்விதமாக ஒப்பிடுவது ஏதோ இழப்புகளையும் தியாகங்களையும் பட்டியல் இட்டுக் காட்டி அதன்மூலம் இந்த அமைப்புக்களின் பிற்கால 'பாசிச' நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக அல்ல. மாறாக, புலிகளின் கரங்களுக்கு தலைமை சென்றதில் தமிழ்ச் சமூகத்தின் முன்னேறிய பிரிவினர் கடந்த காலத்தில் இழைத்த தவறுகளைப் புரிந்து கொள்வதற்காகவே. இன்று மாற்றுத் தலைமையை உருவாக்க வேண்டும் என விரும்பும் புரட்சிகர சக்திகள் இவற்றிலிருந்து படிப்பினை பெறுவது அத்தியாவசியமானது. இன்று தமிழ்த் தேசிய விடுதலைக்கு மூன்றாவது பாதையை அல்லது மாற்றுத் தலைமையை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் நடைபெறும்-----

www.tamilarangam.net



---விவாதங்களை கவனித்தால், அதில் ஈடுபடும் எல்லோர் மத்தியிலும் (எம்மையும்தான் குறிப்பிடுகிறோம்) தத்துவார்த்த ரீதியான பல குறைபாடுகள் பற்றாக்குறைகள் காணப்படுவது வெளிப்படையானது. இப்படியான நிலைமையிலும் பல புத்திஜீவிகள் மௌனம் சாதிப்பது அல்லது சர்ச்சைக்குரியதாக அல்லாதவற்றை மட்டுமே பேசுவது என்ற நிலைப்பாட்டை எடுத்திருப்பது வருந்தத்தக்கது. மூன்றாவது பாதையை உருவாக்குவதிலும் தத்துவார்த்த பணிகளில் அதிகம் பங்களிக்க வேண்டியவர்கள் இன்றைய தமது வரலாற்றுப் பாத்திரத்தைப் புறக்கணித்தால் தமிழ்ச் சமூகம் சபிக்கப்பட்ட சமூகமாக இன்னும் பலகாலம் தவிர்க்க முடியாததாகி விடும்.

எல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கும்போது, எமது தேசிய விடுதலை போராட்டத்தை சீரழித்தது 83 ஜூலைத் தாக்குதல் அல்ல. மாறாக தேசிய இயக்கம் தொடர்பாக இடதுசாரி அமைப்புகளும் புத்திஜீவிகளும் காட்டிய பாராமுகம்தான் என்பது தெளிவாகும். முன்னேறிய பிரிவினர் தமது பாத்திரத்தை ஆற்றத் தவறியமையில் சமூகத்திலுள்ள பிற்போக்கு சக்திகள் அந்த சந்தர்ப்பத்தை பற்றிப் பிடித்துக் கொண்டுள்ளார்கள். தன்னியல்பாகவே வளர்ந்துவந்துள்ள தேசிய விடுதலைப் போராட்டத்தில் 83 ஜூலை தாக்குதல் என்பது ஒரு சம்பவம் மட்டுமே.

இங்கு புரட்சிகர அமைப்புகளதும் புத்திஜீவிகளதும் கடந்தகால செயற்பாடுகள் பற்றி ஒரு நீண்ட விமர்சனத்தை வைக்க நேர்ந்தது. கடந்தகால குறுந்தேசியவாதிகளின் இடதுசாரி எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருந்தோ, அல்லது அமைப்புகளுக்கிடையே பரவலாகக் காணப்படும் புத்திஜீவி எதிர்ப்பு நிலைப்பாட்டிலிருந்தோ அல்ல, மாறாக இன்றும்கூட புரட்சிகர குழுக்களும், புரட்சிகர புத்திஜீவிகளும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆற்ற வேண்டிய பங்கு மிகவும் அதிகம் என்றே கருதுகிறோம். ஆனால் அப்படிப்பட்ட ஒரு பங்களிப்பைச் செய்வதற்கு, முதலில் கடந்தகால தவறுகளுக்கான காரணங்களை தன்னியல்பு சக்திகளின் தலையில் சுமத்திவிட்டு தப்பித்துக் கொள்ளாமல் இந்த தவறுகளில் தமது பங்கு என்ன என்பதில் ஒரு ஆழமான, சுயமான, ஆத்மார்த்தமான பரிசீலனைக்கு தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் கடந்தகாலத் தவறுகளை திறந்த மனதுடன் ஒத்துக்கொண்டு அவற்றுடன் கறாராக கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டும். தமது இன்றைய வரலாற்றுப் பாத்திரத்தைப் புரிந்து கொண்டு உணர்வுபூர்வமாக இன்றைய உடனடிப் பணிகளில் தமது பங்களிப்பைச் செலுத்த முன்வரவேண்டுமெனக் கருதுகிறோம்.

## மாற்றுக் கருத்துக்களின்பாலான அணுகுமுறை

'சமர்' இரண்டில் புலிகள் சக அமைப்புகளைத் தடைசெய்வதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஊறுவிளைவித்ததாகக் கூறும் அதே நேரத்தில் அடுத்த வரிகளில் 'ரெலோ' என்ற துரோகக்குழு சரியான ஒரு சக்தியால் அழிக்கப்படவேண்டியதே என்பதில் நாம் உடன்படுகிறோம் என்றும் குறிப்பிடுகிறது. இந்தக் கருத்தானது ஒரு அமைப்பானது சக அமைப்புகளைத் தடைசெய்வதற்கான உரிமை பற்றிய பிரச்சனையை முன்னுக்குக் கொண்டு வருகிறது. ரெலோ அமைப்பு தடைசெய்யப்பட்ட காலத்தில் மிகவும் வெளிப்படையாகவே ஒரு சீரழிந்த அமைப்பாக இருந்தது என்பது உண்மைதான். ஆனால் அந்தக் ----

www.tamilarangam.net



----காலகட்டத்தில் இருந்த பெரிய அமைப்புகள் அனைத்திலும் இதே தன்மைகள் சில வேளைகளில் இதே அளவிலும் ஆனால் குறைவான பகிரங்கத்துடன் காணப்படவே செய்தன. மக்கள் மீது அராசகத்தைக் கட்டவிழ்த்து விடுவது, அமைப்பினுள் மோசமான சனநாயக மீறல்கள், மக்களிடம் கொள்ளையிடுவது, போதைப்பொருள் பாவனையும் கடத்தலும், சந்தர்ப்பவாத அரசியல் போன்றவை கிட்டத்தட்ட அனைத்து பெரிய இயக்கங்களுக்கும் பொதுவான தன்மையாக இருந்தது. அக்காலத்தில் மிகவும் முன்னேறிய அமைப்பாக கருதப்பட்ட புரட்சிகரக் குழுக்கள் கூட மக்களுக்கு எதிராக ஆயுதங்களை திருப்பிய சம்பவங்கள் இருக்கவே செய்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் ரெலோவை தடை செய்யும் உரிமை, தார்மீக பலம் யாருக்கு, எப்படி வந்தது? ரெலோவில் ஏற்பட்ட இந்த சீரழிவுகளும் அதன் அணிகளில் இணைந்திருந்த, போராட்டத்திற்காக விசுவாசமாக முன்வந்த சாதாரண அங்கத்தவர்களுக்கும் என்ன சம்பந்தம்? இயக்கத்தடை என்பது இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களை வீதியில் அடிக்கத் அடிக்க சுட்டும், எரித்தும் தானே நடந்து முடிந்தது. தம்மை யார் பிரதிநிதித்துவப்படுத்துவது என்பதை தீர்மானிக்கும் உரிமை மக்களுக்கு மட்டுமே உள்ளது. போராட்ட அமைப்புகளைத் தடை செய்யும் உரிமையை மக்கள் யாருக்குமே வழங்கவில்லை. மக்களின் ஆற்றலில் நம்பிக்கை வைக்காது, மக்களது உரிமைகளை தமது கரங்களில் எடுத்துக் கொண்டு தம் இஷ்டம்போல் சில அமைப்புகள் பயன்படுத்த முனைவதுதானே இன்றைய பிரச்சனை.

மாற்றுக் கருத்துக்கள், மாற்று அமைப்புகள் பாலான சகிப்புணர்வின்மை என்பது எமது போராட்டத்தில் அண்மையில் தான் உருவானது என்பதல்ல. 70 களில் தேசிய எழுச்சி தீவிரமடைந்த உடனேயே இதுவும் தொடங்கிவிட்டது. தமிழ் மக்களின் தேசிய எழுச்சி தீவிரமடைந்த காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்த சில அரசியல்வாதிகள் சிங்கள கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டார்கள். முரண்பட்ட அரசியலைக் கொண்டிருந்த இவர்களை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்தி தனிமைப்படுத்தியிருக்கும் வாய்ப்புகள் நிறையவே இருந்தன. அப்படிப்பட்ட வெகுசன அமைப்புகளைக் கட்டி, வெகுசனங்கள் மத்தியில் தொடர்ச்சியான அரசியல் பணியாற்றி வந்திருப்பின் இவர்கள் இலகுவாக அந்நியப்படுத்தப்பட்டு தோற்கடிக்கப் பட்டிருப்பார்கள். ஆனால் அரசியலை தமது பகுதி நேர வேலையாகக் கொண்ட, பாராளுமன்றத்திலேயே குறியாக இருந்த கூட்டி பூர்சுவாக்களுக்கு இதற்கெல்லாம் கால அவகாசமும் பொறுமையும் இருக்கவில்லை மாற்று அரசியலை கொண்டிருந்தவர்கள் 'துரோகிகள்' என்று அரசியல் மேடையில் பகிரங்கப் படுத்தப்பட்டார்கள். குறுகிய காலத்துள் இவர்கள் ஆயுதக் குழுக்களால் கொலை செய்யப்பட்டார்கள். இந்த வகையில் மாற்றுக் கருத்துடையவர்கள்பால் வன்முறையைச் சட்டவிழ்த்துவிடும் போக்குக்கு த.வி.கூட்டணி தான் குரு. பின்பு இவர்களே இதே போக்கிற்குப் பலியானார்கள் என்பது வேறு விடயம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் முழுவதிலும் இதே போக்கு நீடிக்கவே செய்கிறது. ஆரம்பத்தில் த.வி.கூட்டணியின் செல்வாக்கின் கீழ் செயற்பட்ட விடுதலை இயக்கங்கள், பின்பு படிப்படியாக த.வி.கூட்டணியின் செல்வாக்கிலிருந்து விடுவித்துக் கொண்டு சுயாதீனமாக செயற்பட்டன. பிற்காலத்தில் த.வி.கூட்டணிக்கு எதிராகவும் திரும்பின. மாற்றுக் கருத்துக்கொண்ட அரசியல்வாதிகளை, சாதாரண குடிமக்களை மாற்று அமைப்பின் போராளிகளை, சொந்த அமைப்பின் அங்கத்தவர்களை, அழித்தொழிக்கும் போக்குகள் வெவ்வேறு அமைப்புகளில் வேறுபட்ட அளவுகளில்----

www.tamilarangam.net



———காணப்படவே செய்தன. ஆரம்பத்திலிருந்தே இந்தப் போக்கை தீவிரமாக முன்னெடுத்த புலிகள் சக அமைப்புகளைத் தடைசெய்தும், அழித்தும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது ஏக போக தலைமையை நிறுவிக் கொண்டுள்ளனர். இப்போது எம்முன் உள்ள முக்கிமான கேள்வி, நாம் எதனை எதிர்க்கிறோம்? என்பதுதான். புலிகள் என்ற ஒரு அமைப்பையும், அதன் தலைமையிலுள்ள சில தனிநபர்களையுமா? அல்லது குறிப்பிட்ட ஒரு பிற்போக்கு அரசியலையா மாற்றுக் கருத்துக்களின் பால் சகிப்புணர்வு காட்டாத ஒரு வழிமுறையையா?

இன்றுள்ள 'பாசிச' நிலைமையை முடிவுக்கு கொண்டுவர யாராவது உண்மையில் விரும்பினால், முதலில் இந்த நிலைமைக்குக் காரணமாக அடிப்படையில் அமைந்த அரசியலுடன் தம்மளவில் கணக்கு தீர்த்துக் கொள்ள வேண்டும். அது நடைபெறாத வரையில் எமது நல்லெண்ணங்களும், முயற்சிகளும் ஒரு வேளை புலிகளின் தலைமையை அகற்றுவதில் வெற்றி பெற்றால் கூட இதே 'பாசிச' போக்குகளை வேறோர் வடிவத்தில் மீளக் கட்டமைப்பதே மொத்தத்தில் நடந்தேறும். இதுவரை மொத்தத்தில் இந்த தவறான அரசியலின் செல்வாக்கு மறையவில்லை என்பது வருந்தத்தக்க யதார்த்தமாகும்.

## புலிகளை தேசிய சக்தி என்பது எந்த அர்த்தத்தில்?

*******************************

புலிகளை தேசிய சக்தியாக மதிப்பிடுவது அது நடத்தும் தாக்குதல்களையும் பலிகொடுக்கும் தனது அங்கத்தவர்களின் எண்ணிக்கையையும் வைத்துத்தானா? என்ற கேள்வி பரவலாகவே எழுப்பப்படுகிறது. தேசிய சக்தி என்பதை வெறும் யுத்தம் சம்பந்தப்பட்ட விடயமாக குறுக்கிக் கொள்ள முடியாது. அது தமிழ்த் தேசிய இயக்கம் என்ற முழுமையுடன் தொடர்புபடுத்தி மதிப்பிட வேண்டும். தமிழ்த் தேசத்தின் நலன்கள் எவற்றை எந்த அளவிற்கு பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்.? என்பதைதான் இங்குள்ள பிரச்சனை. என்பதிலிருந்து பெறப்படும் மதிப்பீடு மட்டுமே. இந்த மதிப்பீடு புலிகளுக்கான புரட்சிகர அங்கீகாரமாகிவிடாது. மாறாக பேரினவாதமும் தமிழ்ச் சமூகம் முகங்கொடுக்கும் பிரதான எதிரி என்பதைச் சுட்டிக் காட்டும். தேசிய சக்தி என்னும் மதிப்பீடு புலிகளின் தேசியத்தின்பாலான ஊசலாட்டத்தையோ, மக்களின் நலன்களுக்கு விரோதமான அம்சங்களையோ, '' பாசிச '' அரசியலையோ நீண்டகால கண்ணோட்டத்தில் தமிழ்த் தேசியத்தை உள்ளூர சிதைத்து வருவதையோ மறுத்து விடாது.

தேசிய சக்தி என்பது ஒரு சார்பிளவிலான மதிப்பீடு மட்டுமே. ஏனெனில் எந்த ஒரு சக்தியும் அந்த குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் வைத்துத்தான் மதிப்பிடபட வேண்டும். நாம் மனதிற்குள் உருவாக்கிக் கொண்ட இலட்சிய மாதிரிகளுடன் ஒப்பிட்டு மதிப்பீடுகளை உருவாக்க முடியாது. எதிர்காலத்தில் ஒரு புரட்சிகர அமைப்பு தேசிய அரங்கிற்கு வரும் போது புலிகள் பற்றிய இந்த மதிப்பீடு மாறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

## முடிவாக.........

**************

இந்த விவாதங்களில் கலந்து கொள்ளும் பலரும் புலிகளை திட்டித் தீர்ப்பதன் மூலம் புலிகளுக்கு எதிரான தமது நிலைப்பாட்டை திட்டவட்டமாக வெளிப்படுத்துகையில், எமது மதிப்பீடுகள், நாம் புலிகளை நியாயப்படுத்த முனைகிறோமா? என்ற சந்தேகத்தை பலரிடம் ஏற்படுத்தும் ———

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


---- வாய்ப்புள்ளது என்பதைப் புரிந்து சொல்கிறோம். எனவே புலிகள் பற்றிய எமது நிலைப்பாட்டை திட்டவட்டமாக வெளிப்படுத்துவது அவசியம் எனக் கருதுகிறோம். புலிகள் தமிழ்த் தேசியத்தை ஏதோ ஒரு வகையில் முன்னெடுத்துச் சென்றாலும், அவர்கள் தமிழ்த் தேசியத்தை உள்ளூரவும், நீண்டகால நோக்கிலும் சிதைக்கும் பணியையே இதுவரை ஆற்றியுள்ளார்கள். புலிகள் மக்களில் தங்கியிராது மட்டுமல்ல, மக்களது சனநாயக உரிமைகளைப் பறித்து அவர்களை பாசிச அடக்கு முறைக்கு உள்ளாக்குவது, ஏனைய சனநாயக சக்திகளை அழித்தொழிப்பது போன்றவற்றின் மூலம் புலிகள் புதிய சமூகத்தை படைக்க மாட்டார்கள் என்பது ஒருபுறமிருக்க, புலிகள் அடையும் எந்தவொரு வெற்றியும் தமிழ் மக்களது விடுதலை ஆக அர்த்தம் பெறமாட்டாது என்பது முதன்மையான அக்கறைக்குரியதாகும். சாதாரண சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் மீதான தாக்குதல்கள் மூலம் தமிழ்த் தசியத்தை மிகவும் குறுகிய, நோயால் பீடிக்கப்பட்ட தமிழ் இனவாதமாக சிதைத்துள்ளார்கள். இதற்குமேல் தமிழ்த் தேசியமானது தனது சமூகக் கூறுகள் அனைத்தினதும் ஆற்றலை திரட்டி வெளிப்படுத்தும், தனக்கு வெளியில் உள்ள சனநாயக சக்திகளது தார்மீக ஆதரவைப் பெறும் தகுதியை இழந்துவிட்டுள்ளது. இதனால் தமிழ்த் தேசியத்தின் வெற்றிக்கான வாய்ப்புகளை சிதைத்து வருகிறது. இந்திய அரசுடனான உறவுகளைக் கையாண்ட விதத்திலும், இஸ்ரேல் போன்ற நாடுகளுடன் உறவைப் பேணியதாலும், சர்வதேச போதைப்பொருள் கும்பல்களுடனான உறவுகள் பற்றி எழுப்பப்படும் சர்ச்சைகளினாலும் சர்வதேச ரீதியாக எமது தேசிய விடுதலைப் போராட்டம் பெறக்கூடிய பலமான ஆதரவையும் சிதைத்து விட்டுள்ளது. இவற்றுடன் புலிகளிடம் காணப்படும் ஊசலாட்டம், புரட்சிகர தத்துவமின்மை போன்றவற்றையும் சேர்த்துப் பார்த்தால் புலிகள் இதுவரை காலமும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஆற்றிய பங்களிப்புகள் எதிர்மறை பெறுமதியையே உடையதாகும்.

இந்த வகையில் புலிகள் வெறும் குழுவோ, அரசியல் அற்றவர்களோ அல்ல. அதைவிட மிகவும் ஆபத்தான பிற்போக்கு சக்திகள். அவர்கள் தாமாகவே திருந்திவிடுவார்கள் என்ற எந்தவிதமான மயக்கமும் எமக்குக் கிடையாது. புரட்சிகர சக்திகளினால் வரலாற்றிலிருந்தே அகற்றப்பட வேண்டியவர்கள். ஆனால் அதனை எவ்வாறு செய்வது என்பதுதான் இன்றுள்ள பிரச்சனை. புலிகளிடம் இவ்வளவு மோசமான அம்சங்கள் இருந்தும், அவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமைச் சக்தியாக வந்ததும், இன்றுவரை மக்களில் ஒரு பகுதியினரின் ஆதரவையும் பெற முடிவதும் எவ்வாறு என்பதுதான் நாம் காண வேண்டிய தீர்க்கமான வினாவாகும். இன்னும் குறிப்பாக சொல்வதானால் எமது முதன்மையான, அக்கறைக்குரியதாக இருக்க வேண்டிய விடயமே புலிகள் அல்ல. மாறாக தேசிய இயக்கமே ஆகும். தேசியம் என்பது இன்று தமிழ் மக்களது தவிர்க்கமுடியாத வரலாற்றுத் தேவையாகி உள்ளது, எந்த சக்தி தேசியத்துடன் தன்னை இனம் காட்டிக் கொள்கிறதோ, அந்த சக்தியை தாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஆதரிக்க வேண்டிய நிலைக்கு தமிழ் மக்கள் பேரினவாதத்தால் தள்ளப்பட்டுள்ளார்கள். இன்று புலிகள் மட்டுமே தமிழ்த் தேசியத்துடன் தம்மை இனங்காட்டிக் கொள்வதே தமிழ் மக்கள் புலிகளை ஆதரித்தாக வேண்டி ஏற்படுவதற்கான காரணமாகும். தமிழ் மக்கள் இப்படியாக புலிகளை ஆதரிக்க நேர்ந்தாலும், புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் ----

www.tamilarangam.net



---மிகவும் ஆழமானவை. இந்த முரண்பாடுகள் முதன்மை பெறுவதும், பகிரங்க-மாக வெளிப்பட்டு, புலிகள் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுவதும் த்தப்படுவதும் கோட்பாட்டளவில் இரண்டு வழிகளில் சாத்தியப்படலாம்.

1) தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை இன்றுள்ள அமைப்பு முறைகளுக்குள் காணுதல்.

2) புரட்சிகர சக்திகள், தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமைச் சக்திகளாக மாறுதல்.

இப்பிரச்சனை என்பது மிகவும் வளர்ச்சியுற்று இரண்டு தேசங்-களுக்கிடையிலான பிரச்சனை என்றான பின்பு. ஒரே அமைப்புக்குள் தீர்வு காண்பது சாத்தியமற்றதாகும் என்றே நாம் கருதுகிறோம். இலங்கா அரசு சட்டமைக்கப்பட்டிருக்கும் விதம், சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் வளர்ச்சி, ஏகாதிபத்தியங்களுடன் இலங்கா அரசு கொண்டுள்ள உறவு போன்ற அனைத்துமே இப்படிப்பட்ட ஒரு தீர்வினை சாத்தியமற்றதாக ஆக்கிவிட்டுள்ளன. மிக அண்மைக்-கால பேச்சுவார்த்தைகளின் தோல்வியும் இதனையே காட்டுகிறது. பத்து வருட கால யுத்தத்தின் அழிவு, ஈடுசெய்ய முடியாத இழப்புகள், யுத்தத்தின் வெற்றிக்-கான வாய்ப்புகள் அண்மைய எதிர்காலத்தில் காணமுடியாத நிலை, தொடரும் யுத்தத்தில் செலவுகளை தாக்குப்பிடிக்க முடியாத நிலைமை, சர்வதேச நெருக்-கடிகள் போன்ற அனைத்துமே பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அனைத்து தரப்பின-ர்க்கும் மிகவும் வெளிப்படையாகவே தெரிந்தபோதிலும் கூட, தமிழ் மக்களது மிகவும் மிதவாத கட்சிகளைக் கூட திருப்திப்படுத்த சிங்கள கட்சிகளால் முடிய-வில்லை. இந்த நிலையில் தமிழ் மக்களது மிகவும் அடிப்படையான சனநாயக உரிமைகளை இன்றுள்ள அமைப்பு முறைகளினுள் பெறுவது சாத்தியம் இல்லை. என்பது மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியத்தை இன்னும் புரட்சிகரமாகவும் முரணற்றும் முன்னெடுப்பதே புலிகள் தமிழ் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்-படுவதற்கு உள்ள ஒரே வழியாகும். தேசிய இயக்கத்தை புரட்சிகர சக்திகள் முன்னெடுக்காத வரையில் புலிகளை தலைமையிலிருந்து அகற்றுவது சாத்தியப் படப் போவதில்லை. ஒருவேளை இலங்கா இராணுவம், புலிகளை பௌதீக ரீதியாக அழிப்பதில் வெற்றி கண்டாலும் கூட, இன்றைய வரலாற்றுத் தேவைகள் புலிகளை ஒத்த அல்லது அதனிலும் மோசமான ஒரு சக்தியை இலகுவில் தோற்றுவித்து விடும். எனவே தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமை சக்தியாக தம்மை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு, முதலில் தேசியம் பற்றியதொரு ஆரோக்கியமான மதிப்பீட்டிற்கு புரட்சிகர சக்திகள் வந்தாக வேண்டும்.

தேசியம் என்பது இன்று சர்வதேச ரீதியில் ஒரு வரலாற்றுப் போக்காக ஆகிவிட்டுள்ளது. சுதந்திரத்திற்கு பின்னான இலங்கை அரசியலே சாராம்சத்தில் தேசிய அரசியலாகவே அமைந்து, இன்றைய-நிலைமைகளுக்குக் காரணமாகி உள்ளது. இதுதான் இன்றைய புறநிலை யதார்த்தம். புலிகளின் பாசிசப் போக்குகளுக்கு உண்மையிலேயே முடிவுகட்ட யாராவது விரும்பினால், அவர்கள் இந்த யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு, தமது கடந்த கால தவறுகளிலிருந்து மீண்டு, உண்மையான மாற்று சக்தியாக தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் தேசியத்தை சரியாக மதிப்பிடத் தவறிய புரட்சிகர சக்திகள், இன்று அதே----

www.tamilarangam.net



குன்னோட்டத்துடன் புலிகள் பற்றிய விமர்சனத்தை, தேசியத்தை நிராகரிப்பதற்கான காரணமாக முன் வைப்பார்களாயின், புலிகளுக்கு அவர்கள் ஒரு வகையில் உதவியவர்களாகவே வரலாறு தீர்ப்பளிக்கும்.

பேரினவாதத்தின் தன்மை பற்றியும் புலிகளின் கரங்களுக்கு போராட்டத் தலைமை சென்றடைந்ததில் முற்போக்கு சக்திகளது கடந்த கால தவறுகள் பற்றியும் கூட தெளிவைப் பெற்றுள்ள சிலர் கடந்த காலத்தில் நடந்தவற்றையெல்லாம் மறந்துவிட விரும்புகிறார்கள். போராட்டத்தை மீண்டும் புதிதாக, தாம் தவறவிட்ட இடத்திலிருந்து தொடங்க விரும்புகிறார்கள். அதற்காக " இன்று புலிகளை இலங்கா இராணுவம் அழிக்கட்டும் (!) பின்பு நாம் புதிதாக தொடங்குவோம் (!!)" என்ற வகையில் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளார்கள். வரலாறு என்பது காட்டாற்று வெள்ளம் போன்றது. அதில் ஒருதடவை கடந்து சென்றவை என்றென்றைக்குமே கடந்து போனவைதாம். மீண்டும் புதிதாக பழைய இடத்திலிருந்து தொடங்குவது என்பது வெறும் கனவுகளும் பிரமைகளும் தான். புரட்சிகர சக்திகள் செய்யக் கூடியதெல்லாம் தமது கடந்தகால தவறுகளிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டு, சமகால வரலாற்றுத் தேவைகளை சரியாக மதிப்பிட்டு, வரலாற்று ஓட்டத்தில் புரட்சிகரமான தலையீட்டைச் செய்வது தான். இந்தத் தலையீட்டுச செயற்பாட்டின் மூலம் மட்டுமே தமிழ்த் தேசிய இயக்கத்திற்கு ஒரு புரட்சிகரமான தலைமையை உருவாக்குவது சாத்தியப்படும்.

நம்பிக்கை வரட்சி, போலி மயக்கங்கள் போன்றவற்றைக் களைந்துவிட்டு சனநாயக, முற்போக்கு, புரட்சிகர சக்திகள் செயற்பட வேண்டிய காலமிது. புரட்சிகர குழுக்களும் புத்திஜீவிகளும், முன்னேறிய பிரிவினரும் இன்றைய வரலாற்றுக் கடமையை எவ்வாறு ஆற்றுகிறார்கள் என்பதிலேயே 'பாசிசத்தின்' மறைவு மட்டுமல்ல, தமிழ்த் தேசத்தின் எதிர்காலமும் தங்கியுள்ளது.

சமூக அக்கறையுள்ள சனநாயக, முற்போக்கு, புரட்சிகர சக்திகள் இன்றைய வரலாற்றுத் தேவையையும் தமது பாத்திரத்தையும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

************

ஆக்கம் – ஏகலைவன்.     நன்றி – உயிர்ப்பு.

****************

குறிப்பு. தமிழீழ தேசிய விடுதலைப்போராட்டத்திநூடாக வளர்ந்துவரும் மார்க்சிய லெனினிய சக்திகள், தேசிய விடுதலைப்போராட்டத்தை முன்னெடுக்க தொடர வேண்டிய தேவையையும், இதற்கும் இலங்கை புதிய சனநாயக புரட்சிக்கும் உள்ள தொடர்பையும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. பொதுவுடமை கட்சியை கட்டும் பணியில் ஈடுபட்டுள்ள முன்னணி சக்திகள் கடந்தகால போராட்ட போக்கின் சாதக, பாதக அம்சங்களை. நிகழ்கால அரசியல் சக்திகள் பற்றிய தெளிவான நிலைப்பாட்டை முதலில் எடுக்கவேண்டும்.

பாட்டாளி வர்க்க அரசியல் பாதைக்கும், ஆய்வுகள், அணுகுமுறைகளுக்கும். தேசிய போராட்டம் பற்றிய தொழிலாளி வர்க்க பார்வைக்கும் – முதலாளித்துவ, சிறுமுதலாளிய அரசியல் பாதைக்கும், அவர்களது தேசிய போராட்டம் குறித்த பார்வை, நடைமுறைகளுக்கும் இடையில் தீர்க்கமாக கணக்குதீர்த்தாகவேண்டும்.

இது போன்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒரு திட்டவட்டமான திசைவழியை நோக்கி முன்வைக்கும் ஆய்வுகள், வாத விவாதகட்டுரைகள் பரந்த தளங்களுக்கு எடுத்து செல்வதும், முன்னோடிகள் மத்தியில் ஆராயப்படுவதும் மிக மிக அவசியமானது. இதன் பிரகாரம் உயிர்ப்பு வெளியீட்டில் வந்த இரண்டு கட்டுரைகளையும், சமரில் வந்த ஒருகட்டுரையும் பிரசுரித்துள்ளோம். இக் கட்டுரைகள் முன்னோடிகள் மத்தியில் விவாதிக்கப்பட்டு மேலும் செழுமைப்படுத்த வேண்டும்.

ஆசிரியர் குழு
புரட்சிகர வர்க்கமுன்னணியினர் கழகம்.

www.tamilarangam.net



## பெருங்காயம் வாழ்ந்த பாண்டமே பெருமையில் உறங்கு !

********

உணர்ச்சிகள் பொருட்களல்ல,
உடனே பெயரிட்டு அழைப்பதற்கு.
சொற்களைத் திமிரும் படிமங்களும்
விவாணையை மறக்கும் உணர்ச்சிகளும்
உண்டு உண்டு.
அவற்றைப்
பகிர்ந்துகொள்ள இயலாவிடினும்
தெரிவித்தாக வேண்டும்.
இல்லையேல்
நானும் சவமாவேன்.

பனி உறையும் மலரையும்
சூடான குருதி உறையும்
வாளையும் கண்டு
சமமான வியப்புடன் விரியும்
மழலை விழிகளை, இதழ்களை
ஒரு மனிதனால்
பொசுக்க இயலுமா?
கண்களில் நீர் ததும்ப
உதடுகள் பிதுங்க
அச்சத்துடன் ஏறிடும்
குழந்தையின் குரல்வளையை
மனிதக் கரங்களால்
நெரிக்க முடியுமா?
நான் நம்பத் தயங்கியதுண்டு.
இப்போது அச்சத்துடன் நம்புகிறேன்
பம்பாயின் கதறலைக்
கேட்டதனால் அல்ல
அதைக் கேட்க மறுக்கும்
செவிட்டுமையை—தமிழகத்தைப்
பார்த்த பின்னால்
நம்புகிறேன்
நள்ளிரவு பனிரெண்டு மணிக்கு
இரவில் அமைதியைக் கிழித்து
ஒரு கரைவேட்டி முழங்குகிறது.
தமிழகமே நன்றி சொல்
இந்த அமைதியை
உனக்கு அருளிய
பெரியாருக்கு நன்றி சொல்.
பம்பாயில் ஊரடங்கு
சூரத்தில் ஊரடங்கு
கல்கத்தாவில் ஊரடங்கு
திருவனந்தபுரத்தில் ஊரடங்கு
தமிழகத்தில்...... அமைதி
பேருந்துகள் ஓடுகின்றன
திரையரங்குகள் திறக்கின்றன.
கடைவீதிகள் கூவி கலிக்கின்றன
ஆடுகள் 'சுதந்திரமாக' மேய்கின்றன
ஓநாய்களும் சுதந்திரமாக
நோட்டம் பார்க்கின்றன
எனினும் 'அமைதி' குலையவில்லை.
ஆம் !
பெருங்காயம் வாழ்ந்த பாண்டமே!
பெருங்காயத்திற்கு நன்றி சொல்
பூச்சிகள் உன்னை அண்டமுடியாது
நமது சின்னம் பெருங்காயம் !
சம்பிரமான பிரகடனங்கள் !
சிறங்கச் செய்யும் சொற்சிலம்ப
ங்கள் !
உண்மையா?

ஊமையின் அமைதி ஞானமா?
கோழையின் அமைதி விவேகமா?
தமிழகமே
உன் மௌனத்தின் நிறம் இதுதானா?
நம்பியிருப்பேன்...
ராசேந்திரனை
சந்திக்காமலிருந்திருந்தால்

ராசேந்திரன்
வயிற்றுக்காக பம்பாய் சென்று
இதயத்தைத் தேடி
தமிழகம் திரும்பியவர்
தாய் தந்தை
உடன் பிறந்தவள்
மனைவி
மூன்று மழலைகள்
அனைவருமே
அவர் கண்முன்னே
எரிக்கப்பட்டனர்.
பாரதிய ஜனதாவும்
சிவசேனாவும்
மூட்டிய
ஒருமைப்பாட்டு வேள்வியில்
அவர்கள் எரிக்கப்பட்டனர்
கனவுகளைக் கருக்கும்
இந்நாட்டில்
நனவும் சாம்பலாகது.
'தன்னுடைய சாம்பலை'த் தன்
கண்முன்னே கண்டபின்—அவர்
கண்களையும் பிடுங்கினர்
மனக்கண்ணில் உறைந்த
சித்திரத்தை—என்னிடம்
சித்தரிக்கும் போது—அவர்
கண்கள் பனிக்கவில்லை
நா தழுதழுக்கவில்லை
குரல் உடையவில்லை
பிறகு தமிழகம் பற்றிச்
சொன்னார்.
விரட்டிய அதிகாரிகள்
வேட்டையாடிய காவல்துறை
பிச்சையிட்ட தமிழர்கள்....
அவர் கண்கள் கலங்கின
குரல் உடைந்தது.
சிவசேனைக்காரனிடம் அவர்
அதைத்தான் எதிர்பார்த்தார்
தமிழகத்திடம் இதை
எதிர்பார்க்கவில்லை
பத்து நிமிடங்கள்
பத்தே நிமிடங்களில்
எல்லாம் ஊற்றி எரித்து
சாம்பலைக் கையில்
தந்தது—சிவசேனை
அவர் நெஞ்சில் தாங்கிவந்த
தீராத மாறாத சாம்பலை
நூறு முறை
கிளறி, ஊதி—என்
கொதிப்பையும் பார்த்தது தமிழகம்
ராசேந்திரன் கண்கலங்கினார்.
ஊரடங்கு இல்லையென
பெருமைப்படும் தமிழகமே !

www.tamilarangam.net



கலவரமில்லை
கலக்கமும் இல்லை
கொலைவெறியில்லை
இரக்கமுமில்லை
இது பெரியாரின் தேசமல்ல
ஞான சம்பந்தனின் தேசம்
பகுத்தறிவை
ஞானப்பால் பருகிவிட்டது
புலியச்சம் குறித்த
மருத்துவ விஞ்ஞானம்
மொய்த்து விட்டது

நம்புங்கள் !
நமது தோலுக்கு
மூளை உத்தரவு தருவதில்லை
மூளையைத்
தோல் இயக்குகிறது.
இரும்பு, தங்கம், பாதரசம்...
உறுதியில்
அனைத்தையும் வென்றது
நமது தோல்
சிலைத்தை
விழுங்கிச் செரித்த இலக்கை
நீங்கள் கண்டதுண்டா?
தமிழினம்தான்.
கண்கள் கலங்காமல்
உதடுகள் துடிக்காமல்
நெற்றி நரம்புகள் புடைக்காமல்
வெண்ணெயாய்க்
குடலில் கரைந்து விட்டது சினம்.
துண்டிக்கப்பட்ட கைகளுக்காக
கண்ணீர் சிந்தத் தயங்கும்
கண்கள்...
கண்ணீரின் ... ரிப்பைச்
சுவைத்த பின்னும்
துடிக்க மறுக்கும் உதடுகள்...
அமைதி....அமைதி
தமிழகமே
உன் அமைதியின் ஆன்மாவைத்
தேடித்தேடி
நான் கண்டேன்
உன் மவுனத்தின் நிறமென்ன?
கருப்புச்சட்டை
ரஜனி ரசிகனின் சீருடையாக
உருமாறியது
வரலாற்று விந்தையா
வரலாற்று நியாயமா?
நான்கு லட்சம் மனிதர்கள்
தமிழர்கள்
சபிக்கப்பட்ட முஸ்லீம்கள்
நான்கு லட்சம் மனிதர்கள்
வேரோடு
பிடுங்கியெறியப்பட்ட பின்னரும்
ஆயிரம் உயிர்கள்
சுள்ளிகளைப் போல
எரிக்கப்பட்ட பின்னரும்
கலங்காத கண்கள்
தமிழர் கண்கள்
பம்பாயை கொளுத்திய தீவட்டிகள்
கோவையில் ஊர்வலம் வந்தாலும்
குமுறாத நெஞ்சம்
தமிழன் நெஞ்சம்

இன்னும்
எத்தனை சகோதரிகளின்
கனவுகள் கலைக்கப்பட்ட பின்
உங்கள் உணர்வுகள் விழிக்கும்?
எத்தனை தாய்மார்களின்
ரத்தக் கண்ணீர் பெருகினால்
உங்கள் கல்மனம் கரையும்

அறிவார்ந்த நண்பர்களே
உங்களைத்தான் !
வழக்கம்போல நீங்கள்
விருட்டெனத் தலைதிருப்பி
'மடத்தமிழர்களை'த் தேட வேண்டாம்
மந்தைகளைத் தேட வேண்டாம்.
நான்
மலைப்பிரசங்கம் செய்ய
வரவில்லை
ஒலி பெருக்கியினூடாக
காற்றில் விதை தூவ
வரவில்லை
பதியன் போட
அறிவாளுடன் வந்திருக்கிறேன்
உங்களைத்தான் அழைக்கிறேன்
உங்கள் முகவாயைப்
பிடித்துத் திருப்பி
நேருக்கு நேர் கேட்கிறேன்
விழிகளைத் தாழ்த்தாமல்
எனக்கு
விடை சொல்லுங்கள் பார்ப்போம்
பம்பாயில்...
புத்தகங்களை அடுக்கிவைத்து
நம் பிள்ளைகளை எரித்த போது,
குட்டிபோடக் காத்திருந்த
மயிலிறகுகள்
கனவுக் கருத்துகளுடன்
கருகித் தீய்ந்தபோது
நீங்கள்
என்ன செய்து கொண்டிருந்தீர்கள்
உங்கள் பிள்ளைக்கு
ஆங்கிலம்
புகட்டிக் கொண்டிருந்தீர்களா?
நிகழ்காலத்தின்
கரும்புகையை ஊடுருவி
எதிர்காலத்தின்
ஒளியைச் சந்திக்கும் வித்தையை
உங்கள் பிள்ளைக்கு
பயிற்றுவித்துக் கொண்டிருந்தீர்களா?
விந்தியத்தைப் பிளந்துவந்த
நம் தாய்மார்களின் கதறல்
உங்கள் செவிப்பறையில்
மோதிய போது
இளையராஜாவில்
லயித்திருந்தீர்களா?
நம் சகோதரர்களின்
ரத்தம் சுவைத்த ஓநாய்கள்
உங்கள் தெருவில்
உலா வந்தபோது
கதவைத் தாழிட்டுக் கொண்டீர்களா?
செய்தித் தாட்களின்
கருப்பு வரிகளின் ஊடாக
வெள்ளைப் பயங்கரம்
உங்கள் முகத்தில்
வெறித்தபோது
முகம் திருப்பிக்கொண்டீர்களா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்ச்சி——

பார்ப்பன கும்பலின்
கோர நடனம் கண்டு
உங்கள் ரத்தம்
உறைந்ததா?
கொதித்ததா?

உறைந்ததென்றால்
கோழையே... ஒதுங்கு.

கொதித்ததென்றால்
சொல்லுங்கள்
என்ன செய்தீர்கள்?

உண்மையில் வீரியத்தை
நீர்க்கச் செய்யும்
நயமான கவிதைகள்
நாசமாய்ப் போகட்டும்
நேரடியாக செல்லுங்கள்

கையாலாகாதனத்துக்கு
முலாம்பூசி மின்னவைக்கும்
உங்க நடைய
திரிசங்குவின் *
இரவல் சொர்க்கம்
அறுந்து விழட்டும்.

நேரடியாக கேட்கிறேன்
என்ன செய்தீர்கள்?

ஏன் உங்கள் விழிகள்
நிமிர மறுக்கின்றன?

எட்டு திசைகளிலும்
தீப்பற்றி எரியும் உண்மை
கண்களை கூசச் செய்கிறதா?

'நரகத்திலிருந்து!' விளம்பும்
நம் மூதாதையர்களின்
அடக்கவியலாத ஓலத்தில்
நிலம் நடுங்குவதை
நீங்கள் உணரமுடியவில்லையா?

ஏன் உங்கள் விழிகள்
நிமிர மறுக்கின்றன?

பார்ப்பன கொடுவாளால்
துண்டிக்கப்பட்டு இறந்து கிடக்கும்
நம் சகோதரர்களின் தலைகள்
நிலம் நோக்கி தாழ்ந்த
உங்கள் கண்களை
உறுத்தவில்லையா?

அவர்களது விழிகளில்
உறைந்துவிட்ட கோபம்
உங்கள் விழிகளில்
பிரதிபலிக்கவில்லையா?

என்ன செய்தீர்கள்?

நண்பரே,
ஏன் உங்கள் நா வரள்கிறது?
உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு
நீங்கள் சொல்லமுயலும் பதிலை
நான் முன்னரே அறிவேன்.

உங்களால் இயன்றதைச்
செய்தீர்கள்
இயன்றதைச் செய்வீர்கள்.

நல்லது
இயன்றதைச் செய்பவரே
ராசேந்திரனுக்கு
நீங்கள் செய்யக்கூடியது என்ன

பத்து ரூபாய்?
இருபது ரூபாய்?
இரண்டு சொட்டு கண்ணீர்?
ஒரு கவிதை?

இவையெதுவும்
அவருக்கு வேண்டாமாம்

அவருக்கு கரல்குலை வேண்டும்
பார்ப்பன மதவெறியின் கரல்குரலை

இயலாதெனில்
ஒரு தீப்பந்தம்

தமிழகத்தின் 'அமைதி' யைப்
பொசுக்க.

ஆக்கம் ——மருதையன் (நன்றி ——புதியகலாச்சாரம்)

---

* விசுவாமித்திரன் தயவில் மனித உடலுடன் சொர்க்கம் அனுப்பப்பட்ட 'திரிசங்கு' என்ற மன்னன் இந்திரனால் கீழே தள்ளப்பட, திரிசங்குவிற்காக அந்தரத்தில் சொர்க்கம் ஒன்றை உருவாக்கித் தந்தான் விசுவாமித்திரன்.

---

ராசேந்திரனுக்கு

நீங்கள் செய்யக்கூடியது

என்ன?

பத்து ரூபாய்?

இரண்டு சொட்டு கண்ணீர்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தனிநபர் பயங்கரவாதம் பற்றி--

அண்மையில் நடைபெற்ற சில அரசியல் படுகொலைகள் தமிழ் விடுதலைப் போராட்டத்துடன் தொடர்பு உடையவர்களிடையே வேறுபட்ட உணர்வலைகளை ஏற்படுத்தின. சிலர் இந்த கொலைகள் அங்கீகரித்தனர்; இன்னும் சிலரோ அவற்றை நிராகரித்தனர்; கண்டித்தனர் இந்த இரண்டு போக்கினர் இடையேயும் தொடர்ந்து நடைபெற்ற காரசாரமான விவாதங்கள் பல கேள்விகளை எழுப்பின. இந்த விவாதங்களை தொகுத்து பார்க்கையில் பெறப்படும் சாராம்சமான கேள்வி (தனிநபர்பயங்கரவாதத்தை எப்படி பார்ப்பது?) என்பதுதான் தனிநபர் பயங்கர-வாதம் பற்றி கோட்பாட்டுரீதியிலான ஒரு விவாதத்தின் தேவையைக்கருதி எழுதப்படும் இக்கட்டுரையில் சொல்லப்பட்ட நபர்கள், கொலைகளைச் செய்த அமைப்பு ஆகியன தொடர்பான மதிப்பீடுகளை தவிர்த்துக் கொண்டு கோட்பாட்டு விடயங்களில் கவனத்தைக் குவிக்க முனைகின்றேன். பொதுவாகவே சமூகத்தில் நடைபெறும் போராட்டங்களை ஆளும் வர்க்கங்களும் அவற்றின் வெகுசன தொடர்பு சாதனங்களும் எவ்வாறு அணுகுகின்றன என்பதை புரிந்து கொள்ள ஒரு எளிமையான உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

ஒரு பிரபுவின் வயலில் சில விவசாயிகள் வேலை செய்து வந்தார்கள் நாள் முழுவதும் உழைத்தும் அந்த விவசாயிகள் தமது அன்றாட அத்தியாவசியத் தேவை-களையே பூர்த்திசெய்து கொள்ள முடியாத நிலையில் கூலி உயர்வு கேட்டார்கள். நிலப்பிரபு மறுத்து விட்டான். விவசாயிகள் வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் ஆத்திரமுற்ற நிலப்பிரபு தனது அடி ஆட்களை விவசாயிகளின் மீதுஏவி அவர்களது வேலை நிறுத்தத்தை அடக்க முயன்றான். பிரபுவின் அடி ஆட்கள் விவசாயிகளை தாக்கியதில் ஒரு விவசாயி இறந்து போனார். "இரு சாதிக் குழுக்களுக்கிடையே நடந்த மோதலில் ஒருவர் பலி"- பத்திரிகைகளில் ஒரு துண்டுச் செய்தி வெளி வந்திருந்தது. தமதுசகாவின் இறப்பால் கொதித்தெழுந்த விவசாயிகள் நிலப்பிரபுவை கொன்று பழிவாங்கிக் கொண்டனர். பத்திரிகை, வானொலி அனைத்தும் தலைப்புச் செய்தியாய் இதை அறிவித்தனர். கிராமப்புறத்தில் பயங்கரவாதம் தலை தூக்கியிருப்பதாகவும், அதை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் எனவும் அரசியல் பிரமுகர்கள் அறிக்கைவிட்டனர். இப்படியாக நிலப்பிரபு, விவசாயிகளுக்கிடையிலான போராட்டமானது இரு வடிவங்களையுடையது. விவசாயி கொல்லப்பட்டதை. சாதிச்சண்டை எனவும் நிலப்பிரபு கொல்லப்பட்டதை பயங்கரவாதமெனவும், வெளியாருக்கு தந்தது. இதன் உண்மைவடிவம்- சுரண்டும், சுரண்டப்படும் வர்க்கங்களு-க்கு இடையிலான போராட்டம், ஆளும் வர்க்கத்தால் திட்டமிட்டு மறைக்கப்பட்டு சாதிச் சண்டையாகவும், பயங்கரவாதமாகவும் காட்டப்பட்டது. தன்னால் கொல்லப்படுகிறவர்களின் எண்ணிக்கையைக் கூட சரியாக கணக்கெடுப்பில் அக்கறை காட்டாத ஆளும் வர்க்கங்களும், அவர்களது அரசும், தனது வர்க்கத்தவர்கள் கொல்லப்படும் போதோ பெரிதாக ஓலமிடுகிறது. கொல்லப்பட்டவரது படத்தைப் போட்டு, கோரமாக கொலை செய்யப்பட்டுள்ள காட்சியை, அவரது மனைவி பிள்ளைகள் அனாதையாகிவிட்ட கோலத்தை பல விதமான பரிதாபகரமான தோற்றங்களில் படங்களை வெளியிட்டு அநுதாபத்தை-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெற முயல்வது என்பது வெறுமனே மனிதாபிமானம் சம்பந்தப்பட்ட விடயமல்ல. பல நூற்றுக்கணக்கானவர்கள், சில வேளைகளில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்படும் போது மௌனமாக இருப்பார்கள். ஒருவரது மரணத்திற்காக இத்தனை ஓலமிடுகிறார்கள் என்றால், இங்கு மனிதாபிமானத்தை விட இன்னோர் அம்சம் ஓங்கி நிற்பதை கவனிக்க வேண்டும். அதுதான் வர்க்க நலன். கொல்லப்படும் ஒவ்வொரு மனிதருக்காகவும் கவலைப்படுவதாக இருந்தால், அல்ல் மனிதாபிமானத்தால் ஒவ்வொரு மனித உயிர் பறிப்பையும் கண்டிப்பதாக இருந்தால் அதில் மனிதாபிமானத்தைக் காணலாம். ஆனால் கொல்லப்பட்டவர் யார் என்பதை இனம் கண்ட பின்புதான் வாய்திறந்தப்பது என்று முடிவு செய்தால் அது உண்மையான மனிதாபிமானம் ஆகாது.

பெரும்பாலும் ஆளும் வர்க்கங்களும், அவர்களின் அரசும், வெகுசனத்தொடர்பு சாதனங்களும் இப்படிப்பட்ட இரட்டை அளவு கோல்களைக் கொண்டே நிகழ்வுகளை அளக்க முற்படுகின்றன. தமது நோக்கங்களுக்கேற்ப முக்கியத்துவம் கொடுத்து பிரச்சாரம் செய்கின்றன. ஆனால் சமூக உணர்வுள்ளவர்கள் இந்த போலியான புகை மண்டலத்திற் கூடாக ஊடுருவிப் பார்க்கவும், சமூகத்தில் யதார்த்தத்தில் நிகழும் போராட்டங்களை இனங்கண்டு கொள்ளவும் வேண்டும். இதில் தவறிழைக்கும் போது ஆளும் வர்க்க பிரச்சாரத் தந்திரங்களுக்குப் பலியாகி போவதே அடிக்கடி நடைபெறும். வர்க்கங்களாக மக்கள் பிளவுண்டிருக்கும் ஒரு வர்க்கசமுதாயத்தில் அனைவருக்கும் பொதுவான நீதி, ஒழுக்கம், கண்ணியம், மனிதாபிமானம் என்பவை நிலவமாட்டாது. சமூகத்தில் வர்க்கப் பகைமைகளும் மோதலும் எந்தளவிற்கு தீவிரப்படுகிறதோ அந்தளவிற்கு இந்த கருத்தாக்கங்களுக்கு பகைமை வர்க்கங்களுக்கிடையே எதிரெதிர் அர்த்தங்களைப் பெறுவதை கவனிக்கத் தவறக்கூடாது. உற்பத்தியில் ஈடுபடும் போதே அன்றாடம் பல தடவைகள் பகைமை கொண்டு மோதிக் கொள்ளும் சுரண்டும் வர்க்கமும், சுரண்டப்படும் வர்க்கமும் தமது நலன்களை தமது அன்றாட சொந்த வாழ்விலூடாகவே இனம் கண்டு கொள்கிறது. இதனால் ஆளும் வர்க்கம் பெரிதாக போற்றிப் பாராட்டும் சட்டம், நீதி, ஒழுக்கம், மனிதாபிமானம் போன்றவை தன்னை ஏமாற்றுவதற்கு செய்யப்படும் மோசடிகளே என்பதை சுரண்டப்படும் வர்க்கமானது புரிந்து கொள்கிறது. குறைந்த பட்சம், அந்த சட்டத்தை உயர்வாக காட்ட முனையும் சுரண்டும் வர்க்கங்களே அவற்றை விசுவாசமாக பின்பற்றுவது கிடையாது என்பதும் அதற்குத் தெரியும். இவ்வாறேற இந்த வர்க்கம் சமூகத்தில் பரந்துபட்ட மக்களின் நலன்களைப் பேணக்கூடியதாக உண்மையான மனிதாபிமானம் என்றால் என்ன? என்பதையும் வாழ்க்கை அதற்குக் கற்றுக் கொடுக்கிறது. இவ்வாறே சுரண்டும் வர்க்கம் கூட தன்னுடைய சட்டங்கள், நீதி, ஒழுக்கம், மனிதாபிமானம் என்பவையெல்லாம் உழைக்கும் மக்களை ஏமாற்றுவதற்கு புனையப்பட்டவையே என்பதை உணர்ந்து அவற்றின் உண்மை வடிவங்களை வெளியில் தெரிந்துவிடாதபடி கவனமாகவே செயற்படுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆக மொத்தத்தில் சமூகத்தில் முரண்பட்டு மோதிக் கொள்ளும் சுரண்டும்— சுரண்டப்படும் வர்க்கங்கள் இரண்டுமே இந்த பொதுவான "சமூக நெறிகளின்" வர்க்க தன்மைகளை இனங்கண்டு கொண்டு தமது நலன்களுக்கு ஏற்பவே அவற்றை அர்த்தப்படுத்திக் கொள்கின்றன. இவற்றில் எந்தவித மயக்கமும் அவற்றிற்குக் கிடையாது. ஆனால் சற்றையில் தன்னை தொலைத்துவிடும் குட்டி முதலாளி வர்க்கத்திற்கு உறுதியான வர்க்கக் கண்ணோட்டமோ திட்டவட்டமான கோட்பாடு— களோ கிடையாது. இதனால் இன்றைய சமுதாயம் வர்க்கங்களாக பிளவுபட்டிருப்பதை புரிந்து கொள்ளவோ, அரசும், வெகுசன தொடர்பு சாதனங்களும் ஆளும் வர்க்க நலன் காக்கும் வகையில் செயல்படுவதையோ இந்த வர்க்கம் இனங்கண்டு கொள்ளாது. இதனால் இது அடிக்கடி சுரண்டும் வர்க்கங்களின் சித்தாந்தங்களுக்குப் பலியாகிப் போய் அனைவருக்கும் பொதுவான சட்டம், நீதி, மனிதாபிமானம் என்ற மயக்கத்தில் இருக்கிறது.

பரந்துபட்ட மக்களை சுரண்டும்டியும் அவர்களது நலன்களை நசுக்கியும் மிகச் சிறுபான்மையான சுரண்டும் வர்க்கம் வாழ்கிறது. தம்மீது சகிக்க முடியாத வாழ்க்கைச் சுமையை சுமத்திவிட்டு தமது உழைப்பை அபகரித்துக் கொண்டிருக்கும் எதிரியை மக்கள் வெறுக்கவே செய்கிறார்கள். அந்த எதிரியார் என்பதை மக்களுக்கு புரிய வைத்து, அவர்களை அமைப்பாக்கி, அவர்களது போராட்டத்திற்கு வழிகாட்டுவதே புரட்சியாளர்களின் பணி. தமது வர்க்க எதிரியை இனங்கண்டு கொள்ளும் மக்கள் எதிரி வர்க்கத்தை அகற்றியெறிந்து தமது உரிமைகளை மீட்பார்கள். அதற்கான ஆற்றலும் திறமையும் உழைக்கும் மக்களிடம் நிறையவே உண்டு. போராட்டத்தின் பிரதான புரட்சிகர சக்தி மக்களே. மக்களின் எதிரியும், புரட்சியின் இலக்கும் சுரண்டும் வர்க்கமே. மக்கள் சக்தி ஒன்றினால் மாத்திரமே சுரண்டும் வர்க்கத்தை அகற்றியெறிய முடியும் என்பதை புரட்சியாளர் கள் புரிந்து கொள்ள வேண்டும். புரட்சிப் போராட்டத்தில் புரட்சிகர கட்சி என்பது மக்களின் முன்னணிப்படை—வழிகாட்டிஎன்ற பாத்திரத்தையே ஆற்றுகிறது. தனிச்சொத்துடைமையையும் இன்றைய சுரண்டல் அமைப்பையும் பேணிப் பாதுகாப்பதன் மூலம் சுரண்டும் அமைப்பையும்வர்க்கத்தின் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும் செய்து வருகிறார்கள். சுரண்டும் வர்க்கமானது தனது நலன்களை மிகத் திறமையாகப் பேணுகின்ற, தனது நலன் காக்கும் வேலையை மிகச் சாதுரியமாகச் செய்கின்ற நபர்களையே ஆட்சிப் பொறுப்பில் தனது பிரதிநிதியாய் வைக்கின்றது. சுரண்டும் வர்க்க நலன்களுக்கு ஏற்ற விதத்தில் நடக்கும் வரையிலேயே அந்த அரசியல்வாதி அதன் பிரதிநிதியாய் அங்கீகரிக்கப்பட்டிருப்பார். குறிப்பிட்ட கட்டங்களில் குறிப்பிட்ட அரசியல்வாதி பூர்சுவா நலன்களைப் பேணுவதில் சாமர்த்தியத்தைக் காட்டிவிட்டால் அந்த வர்க்கமானது அவரை பிரச்சாரத்தின் மூலமோ இராணுவப் புரட்சியின் மூலமோஆட்சியிலிருந்து வீழ்த்தி [illegible] விட்டு அவரிலும்சாமர்த்தியமான ஒருவரை அந்த இடத்தில் நியமிக்கும். [illegible]

www.tamilarangam.net



இப்படியாக சுரண்டும் வர்க்கமானது தனது நலன் காக்கும் நபர்கள் மீது விழிப்பாயிருக்கிறது. புரட்சி என்பது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தைச் சார்ந்த பெரும்பான்மையான மக்கள் ஒடுக்கும் வர்க்கத்தை—அதன் ஆட்சியதிகாரத்தை— தூக்கியெறிந்து அந்த இடத்தில் உழைக்கும் வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை நிறுவுவதாகும். நிலவும் பூர்சுவா சமூக அமைப்பை தலை கீழாய் மாற்றி அதற்கு பதில் உழைக்கும் வர்க்கத்தின் நலன் காக்கும் சமூக அமைப்பை உருவாக்குவதே புரட்சி என்பதன் அர்த்தம். முறையான வர்க்கக் கண்ணோட்டத்தைக் கொண்டிராத குட்டி முதலாளி வர்க்கமானது சமூகம் வர்க்கங்களாக பிளவுண்டு இருப்பதை இனங் கண்டு கொள்ளவில்லை. அரசின் வர்க்க சார்பைழும் விளங்கிக் கொள்வதில்லை. இதனால் தனிநபர்களையே—அரசியல்பிரமுகர்களை, இராணுவ, பொலிசு அதிகாரிகளை, தனிப்பட்ட முதலாளிகளை, பிரபுக்களை—சமூகத்தின் எதிரிகளாக பார்கிறார்கள். மக்களது புரட்சிகர பாத்திரத்தையும் இவர்கள் புரிந்து கொள்வதில்லை. இதனால் தனித்துவம் வாய்ந்த சில தனிநபர்கள், "சுதாநாயகர்கள் மூலமே புரட்சி நடைபெறுவதாக கருதுகிறார்கள். ஆளும் வர்க்கத்தையும், புரட்சியாளர்களையும் சில நபர்கள் சம்பந்தப்பட்ட விடயமாக குறைக்கி விடுகிறார்கள் தனிநபர்பயங்கரவாதம் இந்த தவறான உலக கண்ணோட்டத்திலிருந்தே பிறக்கிறது.

சுரண்டும் வர்க்கத்தின் நலன்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் அரசியல்வாதிகளையோ, அதிகார வர்க்கத்தைச்சார்ந்த ஒரு சிலரையோ, தனிப்பட்ட சில முதலாளிகளையோ, நிலப்புரபுக்களையோ, ஒழித்துவிடுவதன் மூலம் புரட்சியை சாதித்துவிட நினைப்பதே தனிநபர்பயங்கரவாதத்தின் செயல்நோக்காகி விடுகிறது. தனது பிரதிநிதி ஒருவரை அல்லது தன்னைக் காக்கும் பணியில்ஈடுபடும் சிலரைக் கொல்வது ஆளும் வர்க்கத்தைப் பொறுத்தவரையில் பெரியபாதகங்களை ஏற்படுத்திவிடுவதில்லை. சுரண்டும் வர்க்கமானது விரைவிலேயேஅந்த இடத்துக்கு இன்னொருவரை நியமித்துதனது இருப்பை இலகுவில் பாதுகாத்துக்கொள்கிறது. ஆகவே தனிநபர் பயங்கரவாதமானது புரட்சியை, சமூகமாற்றத்தைக் கொண்டு வந்து விடமாட்டாது. மக்களை அரசியல் போதனையூட்டியும், அமைப்பாக்கியும், போராட வழிகாட்டியும் செலவழிக்கப்பட வேண்டிய புரட்சியாளர்களின் சக்திகள் இப்படியாக தனிநபர் பயங்கரவாதத்தில் விரயமாக்கப்படுவது உண்மையில் புரட்சியை பின்னடையவே வைக்கும். இத்தகைய தனிநபர் பயங்கரவாத நடவடிக்கையானது புரட்சியில் மக்களுக்குள்ள பாத்திரத்தை மறுதலிப்பதோடு மக்கள் தமது புரட்சிகர கடமையை புரிந்து கொள்ள விடாது தடுக்கவும், தமது விடுதலைக்காக சில சாகசக் கதாநாயகர்களை எதிர்பார்த்திருக்கவும் செய்கிறது. இதனால் தனிநபர்பயங்கரவாதம் என்பது புரட்சிக்கு ஊறு விளைவிப்பதாயும் இருக்கிறது. இதனாலேயே சமூகப் புரட்சியாளர்கள் புரட்சியின் பிரதானவழிமுறையாய் தனிநபர் பயங்கரவாதத்தை ஏற்பதில்லை. குட்டிபூர்சுவா வர்க்கமானது சமூக முரண்பாடுகளை வர்க்க அடிப்படையில் பார்க்காது தனி நபர்களூக் கூடாகவே பார்க்கிறது. அதனால் அந்த வர்க்கத்தின் பிரதானமான

www.tamilarangam.net



போராட்ட வழிமுறை தனிநபர் பயங்கரவாதமாய் இருக்கிறது. சமூகப் பிரச்சனைகளுக்கு தனிநபர்களைக் கொல்வதன் மூலம் தீர்வுகாண நினைக்கும் குட்டி பூர்சுவா தனிநபர் பயங்கரவாத போராட்ட வழிமுறைக்கு, மாறாக சமூகப் புரட்சியாளர்கள் வர்க்கப் போராட்டத்தை தமது போராட்ட வழி முறையாய் கொண்டிருக்கிறார்கள்.

சமூகப் புரட்சியாளர்கள் தனிநபர் பயங்கரவாதத்தை நிராகரிக்கிறார்கள் என்பதற்கு அர்த்தம், சுரண்டும் வர்க்கத்தின் பிரதிநிதிகளாக இருந்து மக்களை மோசமாக ஒடுக்குபவர்களுக்கு இயற்கை மரணம்தான் நிகழ வேண்டும் என்பதில்லை சோசலிச சமூகத்திலும் அவர்களுக்கு அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்பதில்லை. சுரண்டும் வர்க்கத்தைக் காப்பாற்றுவதற்காக, போராடும் மக்களை கோரமாக ஒடுக்க முனையும் அனைவருமே மக்களின் விரோதிகள் தான் இவர்கள் மக்களின் தண்டனைக்குள்ளாகி இறக்க வேண்டியவர்களேயன்றி இயற்கை மரணம் அடைய வேண்டியவர்களல்ல. மக்களை நர வேட்டையாடி ஆட்சி செலுத்துபவர்களுக்கு இயற்கை மரணம் ஏற்பட வேண்டும் என எதிர்பார்ப்பது சமூகம் அவர்களுக்கு அளிக்கக் காத்திருக்கும் நியாயமான தண்டனையை அவமதிப்பதாகவே இருக்கும். புரட்சியாளர்கள் கோட்பாட்டளவில் தனிநபர்ப்பயங்கரவாதத்தை நிராகரித்தாலும் ஒரு பிரதானமான வழிமுறையாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட சில குறிப்பிட்ட சூழ்நிலையில் தனிநபர்பயங்கரவாதத்தின் பயன்பாட்டை மறுப்பதில்லை.

குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் குறிப்பிட்ட தனிநபர்கள் தாம் வாழும் சூழலிலிருந்து பெற்றுக் கொண்ட தமது ஆற்றலுக்கும் திறமைக்கும் ஏற்ப தாம் சார்ந்த வர்க்கத்தின் நலன்களைக் காப்பதில் முன்னணியிலிருப்பார்கள். பூர்சுவா வர்க்கத்தின் பிரதிநிதியான குறிப்பிட்ட தனிநபர் தான் சார்ந்த வர்க்கத்தின் நலனைப் பாதுகாப்பதற்காக எவ்வித தயக்கமும் காட்டாது புரட்சிகர தாபனங்களை நசுக்குவதில் தீவிரமாகவும் திறமையாகவும் செயற்படுவாரானால் புரட்சிகர தாபனத்தினதும், புரட்சியாளரதும் பாதுகாப்பு கருதி அவரைக் கொல்வது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. இப்படியான கொலைகள் புரட்சிகர தாபனத்தின் பாதுகாப்பிற்கு தவிர்க்க முடியாததாகி அமையும் சந்தர்ப்பத்தில் அவரைத் தண்டிப்பதை புரட்சியாளர்கள் தந்திரோபாயமாக கையாள்கிறார்கள். உளவாளிகள், துரோகிகள் போன்றவர்களின் நடவடிக்கைகள் புரட்சிக்கு ஊறுவிளைவிக்கும் பட்சத்தில், இவர்களால் புரட்சியாளர்களுக்கு ஆபத்து ஏற்பட்டு புரட்சி நசுக்கப்படும் அபாய நிலைக்குத் தள்ளப்படுமாயிருந்தால் இத்தகையவர்களை தண்டிப்பதும் தவிர்க்க முடியாததாகிறது. குறிப்பான சில தனிநபர்கள் சில குறிப்பான வரலாற்றுக் கட்டங்களில் புரட்சியின் போக்கையே மாற்றியமைக்கும் ஆற்றல் உடையவர்களாய்க் காணப்படுகையில்—அவர்களைத் தண்டிப்பதன் மூலம் புரட்சி பாதுகாக்கப்படுமாயிருந்தால்—அவர்களைத் தண்டிப்பது புரட்சிகர தந்திரோபாயமாகும். உதாரணமாக, ரசியாவின் வலிமைமிக்க 'பூர்சுவா வர்க்கத்தின் பிரதிநிதியான ஜாரும் குடும்பத்தினரும் 1917 ஒக்டோபர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சியின் போது போல்சுவிக்குகளால் கைது செய்யப்பட்டு மக்கள் விசாரணையை முகங்கொடுப்பதற்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். உள்நாட்டுப் போரின் போது வெண்படையினரின் தாக்குதலால் செஞ்சேனை பின்வாங்க நேர்ந்த போது ஜாரை உம், ஏனையோரையும் பாதுகாக்க முடியாத நிலையில் போல்சுவிக்குகள் அவர்களைக் கொன்றனர். வெண்படையினரால் ஜார் மீட்கப்பட்டிருந்தால், சிதறியிருந்த ரசிய பூர்சுவா மற்றும் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களை ஒழுங்கமைத்து வெளிநாடுகளின் உதவியுடன் ஜார் மீண்டும் அரசைக் கைப்பற்றியிருப்பான். எதிர்ப் புரட்சிகர சக்திகள் பலம் பெற எந்த வாய்ப்பையும் அளிக்கக் கூடாது என்பதில் போல்சுவிக்குகள் எச்சரிக்கையாயிருந்ததால் ஜாரைக் கொன்றனர்.

மக்களால் வெறுக்கப்படும் எதிரிகளை புரட்சியாளர்கள் தண்டிப்பதை மக்கள் அங்கீகரிக்கவே செய்கிறார்கள். மக்கள் விரோதிகளை புரட்சியாளர்கள் தண்டிக்கும் போது அது பற்றி பொறுப்புணர்வுடன் மக்களுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள். புரட்சியாளர்களின் நடவடிக்கைகளையும் மதிப்பிட்டு தீர்ப்பளிக்கும் உரிமையுடையவர்களும் மக்களே. இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் புரட்சி சாதிக்கப்பட்டுவிடும் என்றில்லை. ஆனால் இந்த நடவடிக்கைகள் புரட்சிகர செயற்பாட்டில் ஏற்படும் தடங்கலை தகர்த்து புரட்சியாளர்கள் தமது நடவடிக்கைகளைத் தொடர வாய்ப்பளிக்கும் என்ற பட்சத்திலேயே புரட்சியாளர்கள் தனிநபர் பயங்கரவாதத்தினை தந்திரோபாய [illegible] அடிப்படையில் மேற்கொள்வார்கள். அதே நேரம் புரட்சிப் போராட்டத்தில் மக்களுக்கு வழிகாட்டும் பணியை செய்கின்ற புரட்சியாளர்கள் விரோதிகளுக்கு தண்டனையளிக்கும் நீதிபதிகள் மக்களேயென்பதையும் மறந்துவிடக்கூடாது.

தனிநபர் பயங்கரவாதத்தை கோட்பாட்டுரீதியாக நிராகரிப்பதென்பதும் பயங்கரவாத செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் நிராகரிப்பதென்பதும் ஒன்றல்ல. 'தனிநபர் பயங்கரவாதம் புரட்சிக்கு உதவாது. புரட்சியை சீரழித்துவிடும்.' என்பதால் அதை புரட்சியாளர்கள் நிராகரிக்கிறார்கள். குறிப்பிட்ட மனித விரோதிகளுக்கு இயற்கை மரணம் வரவேண்டும் என்பதற்காக அல்ல. புரட்சிகர செயற்பாடுகளுக்கு கிடைக்கும் சாதகமான நிலையை அடிப்படையாய் கொண்டே தனிநபர் பயங்கரவாதத்தை தந்திரோபாய நடவடிக்கையாக புரட்சியாளர்கள் மேற்கொள்கிறார்கள்.

மொத்தத்தில் தனி நபர் பயங்கரவாதத்தை நிராகரிப்பதென்பது புரட்சியின் வழிமுறை பற்றிய பிரச்சனையாகும். இந்த விதத்தில் இது புரட்சியாளர்களது முகாமுக்குள் நடக்கும் ஒரு விவாதமாகும். தனி நபர் பயங்கரவாதம் எவ்வாறு புரட்சிக்கு ஊறு செய்கிறது என்பதை விளக்குவதன் மூலம் தனி நபர் பயங்கரவாதத்தில் ஈடுபடும் சக்திகளை வென்றெடுப்பதே இதன் நோக்கமாகும். இந்த சக்திகள் தமது தவறான போக்கை கைவிடாத நிலையில் இவர்கள் விழிப்புணர்வு பெறும் மக்களால் நிராகரிக்கப்படும் நிலையும் ஏற்படும். ஆனால் இவ்வாறு புரட்சியாளர்களுக்குள் ஒரு விவாதத்தை மக்கள் மத்தியிலுள்ள ஒரு முரண்பாட்டை எதிரி தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள எப்போதும் முனைவான். தன்னால் தினந்தோறும் கட்டவிழ்த்து விடப்படும் பயங்கரவாதத்தை பற்றி எதுவுமே பேசாத அல்லது அவற்றை----

www.tamilarangam.net



நியாயப்படுத்தும் ஆளும் வர்க்கமும் அதன் அரசும், தன்மேல் தொடுக்கப்பட்ட தாக்குதலை பெரியளவில் கூப்பாடு போட்டு கண்டிப்பதுடன், புரட்சிகர முகாமுக்குள் உள்ள ஆனால் தனிநபர் பயங்கரவாதத்தை, நடவடிக்கைகளை ஏற்காத சக்திகளையும் தன்னோடு இணைந்து கண்டிக்க முனையுமாறு செய்யும். இதன் மூலம் புரட்சியாளர்களது போராட்டத்தை கொச்சைபடுத்தவும், மக்கள் மத்தியிலிருந்து தனிமைப்படுத்தவும், புரட்சிகர முகாமுக்குள் உள்ள சிநேக முரண்பாடுகளை பகை முரண்பாடுகளாக்கவும் இதன் மூலம் மக்கள் மத்தியில் தனது அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்தவும் முயலும். புரட்சியாளர்கள் தனிநபர் பயங்கரவாதத்தை நிராகரிப்பது புரட்சிக்கு உதவாது என்பதற்காகவேயன்றி ஆளும் வர்க்கம் கூறுவது போல் அந்த நபர்கள் மக்களுக்கு மாபெரும் தொண்டு செய்தார்கள் என்பதற்காகவோ, அல்லது இவர்களை கொல்வது தவறு என்பதற்கு அல்ல. ஆனால் எதிரியின் சதிக்கு பலியாகிவிடக்கூடாது என்பதில் புரட்சியாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட கொலைகளில் உடன்பாடு இல்லாவிட்டாலும் அவற்றை எதிரியுடன் சேர்ந்து கண்டிக்கவோ, அந்த செயல்களை கண்டிப்பதாக கருதிக்கொண்டு கொல்லப்பட்டவர்கள் மக்கள் மீது புரிந்த பெருங்குற்றங்களை மறைத்து அவர்களுக்கு தியாகி பட்டங்களை மறைமுகமாக வழங்க முயலக்கூடாது இதனை புரட்சியாளர்கள் செய்தால் அவர்கள் தமது சொந்த போராட்டத்தையும் தம்மையும் கொச்சைப்படுத்தி கொண்டதாகவே அமையும்.

ஒரு சிறிய உதாரணத்தை இதற்கு காட்டலாம். உலகு எங்கும் தனது பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துக் கொண்டிருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம். பாலஸ்தீன விடுதலைக் குழுக்களில் ஒன்று நடத்தும் சிறிய தோர் தாக்குதலை பாலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஓ) கண்டிக்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கும். அமெரிக்காவின் நிர்ப்பந்தத்திற்கு பணிந்து பி.எல்.ஓ இந்த நடவடிக்கைகளை கண்டித்தால் அது பாலஸ்தீன மக்களின் போராட்டங்களை கொச்சைப்படுத்துவதாகவும், அமெரிக்க ஏகாதிபத்திய பயங்கரவாதத்தினை நியாயப்படுத்துவதாகவும் தானே அர்த்தப்படும்.

அண்மையில் நடைபெற்ற விவாதங்களின் போது ஒருவர் கருத்து தெரிவிக்கும் போது சம்பந்தப்பட்ட நபர்கள் மக்களுக்கு அநீதி இழைத்திருந்தாலும் கூட அவர்களுக்கு அமையப்போகும் சோசலிச சமுதாயத்தில் வாக்குரிமை உட்பட அனைத்து உரிமைகளும் வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தியிருந்தார். இந்த கருத்தை பரிசீலிப்போம்.

ஆளும் வர்க்கத்தை சேர்ந்த இந் நபர்கள் ஏற்கனவே மக்களை சுரண்டிக் கொழுத்ததன் மூலம் பெருந் தொகையான மக்களது வறுமைக்கும், அறியாமைக்கும், பட்டினிக்கும், நோய்க்கும் காரணமானவர்கள். இதுவே அவர்கள் மக்கள் மீது புரிந்த மாபெரும் குற்றமாகும். இதற்கும் மேலாக உழைக்கும் மக்கள் தமது உரிமைகளுக்கும் விமோசனத்திற்கும் போராட முற்படும் போது தமது சுகவாழ்க்கையையும் பாதுகாத்துக் கொள்வதற்காக, போராடும் மக்கள் மீது மிகவும் மோசமான அடக்குமுறைகளை, பயங்கரவாதத்தை மனித உரிமை மீறல்களை கட்டவிழ்த்து விடுகிறார்கள். இந்த விவாதமாக மக்கள் மீது இழைக்கப்படும் குற்றங்களை மக்களும் ஒரு போதும் மன்னிக்க மாட்டாது. இதற்காக இவர்கள் நாளை மக்கள் முன்பு பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள். மக்கள் வழங்கும் தண்டனைகளை இவர்கள் பெற்றேயாக வேண்டும்.

www.tamilarangam.net

புரட்சியின் பின்பு அமையும் புதிய சமூகத்தில் சுரண்டும் வர்க்கத்தவர்களிற்கு ஒரு வர்க்கம் என்ற வகையில் எதிர்காலமே கிடையாது. உற்பத்திச் சாதனங்களின் சமூக உடமையாக்கமே இவர்களிற்கு பெரிய அடிதான். ஆனால் தனிநபர்கள் என்ற வகையில் அவர்கள் தமது சுரண்டலுக்கும் மேலாக எந்தளவிற்கு மக்களை ஒடுக்குவதில் நேரடியாக பங்காற்றினார்களோ அவற்றிற்காக மக்களிற்கு பதில் சொல்லியாக வேண்டும். இப்படியாக தமது சுகபோக வாழ்விற்கும் சிலவேளைகளில் தனிப்பட்ட உயிரிற்கும் ஏற்படக்கூடிய இழப்புகளை இந்த வர்க்கம் கைகட்டிக் கொண்டு பார்த்திருக்க மாட்டாது. தன்னாலான அனைத்தையும் செய்து ஒரு புரட்சிகர மாற்றத்தை தடுக்க முனையும். அப்படியாக அது தன்னையும் மீறி நிறைவேற்றப்பட்டால் இலகுவில் தோல்வியை ஏற்றுக் கொண்டு, புதிய சமூக ஒழுங்கிற்கு கட்டுப்பட்டு வாழ பழகிக் கொள்ள மாட்டாது. புதிதாக தோன்றிய உழைக்கும் மக்களின் அரசில் பலவீனமான அம்சங்களை பயன்படுத்திக் கொண்டு அதனை கவிழ்த்து விட்டு தனது பழைய ஆட்சியை ஏற்படுத்த தன்னாலான அனைத்தையும் செய்யும். சீர்குலைவு, சதி, அரசியல்படுகொலைகள், அந்நியத்தலையீடு, எதிர்புரட்சி போன்ற எந்தவொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ள முனையும். இப்படிப்பட்ட நோக்கத்துடன் செயற்படும் ஒரு எதிர்புரட்சி வர்க்கத்திற்கு புரட்சியின் பின் பேச்சு, எழுத்து, சனநாயக, வாக்குரிமை சுதந்திரங்களை வழங்குவது என்பது உழைக்கும் வர்க்கம் தனது ஆட்சியை தானே கவிழ்த்துக் கொள்வதற்காகவே அர்த்தப்படும். இதனால் எதிர்புரட்சிகர சக்திகளை நசுக்குவதில் தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது. எதிர்ப்புரட்சியை நசுக்குவதில் தயக்கம் காட்டியதே பாரீசு கொம்யூனின் தோல்விக்கான முதன்மையான காரணம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் சகல பொருளாதார வளங்களையும், தனது கரங்களில் வைத்துக் கொண்டு இருந்த சுரண்டும் வர்க்கங்கள் கல்வி கலாச்சார வாய்ப்புகளை அதிகம் பெற்றிருந்தன. பல தொடர்பு சாதனங்களையும் தனது கரங்களில் வைத்துக் கொண்டு தனது செல்வாக்கினை சமூகம் முழுவதிலும் செலுத்தி வந்தது. இன்னும் கூட ஏனைய நாடுகளில் ஆளும் வர்க்க ஆதரவை உறுதியாக பெற்றுள்ளது ஆளும் கலையில் தேர்ந்தது. தன்னால் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு அதிகார வர்க்கத்தைக் கொண்டுள்ளது. இப்படியாக எல்லா விதத்திலும் இந்த வர்க்கம் உழைக்கும் மக்களை விட வாய்ப்பான நிலையிலேயே உள்ளது. யதார்த்த வாழ்வில் இரண்டு வர்க்கங்களும் இவ்வளவு தூரம் சமத்துவமற்று இருக்கும் போது புரட்சிக்கு பிந்திய அரசியல் அரங்கில் மட்டும் எப்படி சமத்துவத்தை எதிர்பார்க்க முடியும். இதனால் இந்த வர்க்கத்திற்கு சனநாயகம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு வர்க்கம் என்ற வகையில் இல்லாது போகும் வரையில் சாத்தியப்படவே மாட்டாது. புரட்சி என்பது பகைமை கொண்ட இரண்டு வர்க்கங்களின் ஜீவமரணப் போராட்டம். இதில் காட்டப்படும் சிறிய அசட்டை கனமும் கூட புரட்சிக்கு பல தோல்விகளையும் இடையூறுகளையும் ஏற்படுத்தி விடும். ஆதலால் புரட்சிகர பணியில் ஈடுபடுவோர் தமக்குள் இருக்கும் இந்த விதமான குட்டி பூர்சுவா மாயைகளை களைந்து விட வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



–சனநாயகம், மனிதாபிமானம் ------போன்றவற்றை ஆளும் வர்க்க கண்ணோட்டத்தில் இருந்தல்லாமல் பரந்து பட்ட உழைக்கும் மக்களின் கண்ணோட்டத்தில் இருந்து விளங்கி கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும்.

தனி நபர் பயங்கரவாதம் பற்றி பேசும்போது நாம் முக்கியமா ஒரு விடயத்தை வேறுபடுத்திக்கொள்வது அவசியம். அதுதான் மாற்றுக் கருத்துக்களின்பால் சகிப்புணர்வின்மையாகும். புரட்சியின் நலன்கள் என்பவை பரந்துபட்ட மக்களின் நலன்களாகும். சொந்த வாழ்க்கையினூடாகவும் போராட்டத்தினூடாகவும் பரந்துபட்ட மக்கள் தமது நலன்களிற்கு சேவைசெய்யும் கருத்துக்களையும், அமைப்புக்களையும் இனங்கண்டு கொள்ளும் ஆற்றல் உள்ளவர்கள். இதனால் புரட்சியாளர்கள் புரட்சியின் நலன்களுக்கு எதிரான கருத்துக்களை விமர்சித்து தமது சரியான கருத்துக்களை முன்வைக்கையில் தவறான சக்திகளை மக்கள் இனம் கண்டு நிராகரிப்பர். தமது நலன் காக்கும் கருத்துக்களையும் தம்மை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புக்களையும் மக்களே தேர்ந்தெடுப்பர். இதுவே எதிர்தரப்பு மாற்றுக் கருத்துக்களின் பால் புரட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறையாகும்.

பரந்துபட்ட மக்களின் அரசியல் விழிப்புணர்வில் மக்களை வென்றெடுக்கக்கூடிய தமது கருத்துக்களின் பலத்தில் நம்பிக்கையின்மையால் கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளாமல் மாற்றுக்கருத்துக்களை முன்வைப்பவர்களுக்கு எதிராக ஆயுதங்களை நீட்டும் போக்கு தோன்றுகிறது. முதலில் எதிர்தரப்பு அரசியல்வாதிகளுக்கு எதிராகவும், பின்பு புரட்சிகர முகாமுக்குள் உள்ள மாற்று அமைப்புக்களுக்கு எதிராகவும், பின்பு சொந்த அமைப்புக்குள் மாற்றுக்கருத்துக்களை முன்வைப்பவர்களுக்கு எதிராகவும் இறுதியில் தமது கருத்துக்களை ஏற்று கொள்ள மறுப்பவர்களுக்கு எதிராகவும் மக்களுக்கு எதிராகவும் ஆயுதங்கள் திருப்பப்படுகின்றன. இந்த வகையிலான மாற்றுக் கருத்துகளின் பாலான சகிப்புணர்வின்மையே, சனநாயக மீறலே இன்று அதன் உச்ச நிலையில் பாசிச வடிவில் ஆட்சி புரிகிறது. நாம் மேலே குறிப்பிட்ட தனி நபர் பயங்கரவாதத்தையும் இந்த சகிப்புணர்வின்மையும் ஒன்றாக போட்டு குழப்பிக் கொள்ளக்கூடாது. எமது போராட்டத்தில் தனி நபர் பயங்கரவாதத்திலும் பார்க்க இந்த சகிப்புணர்வின்மையே அதிகளவில் தீங்கிழைத்துள்ளது. ஆதலால் எந்த சந்தர்ப்பத்திலும் இந்த சகிப்புணர்வின்மையை அனுமதிக்கலாகாது.

தொகுத்து கூறினால் சமூகமுரண்பாடுகளை சமூக வர்க்கங்கள் அல்லது சமூகப்பிரிவுகளிடையிலான போராட்டங்களாக விளங்கிகொள்ளவேண்டும். பரந்து பட்ட மக்களின் போராட்டத்தின் மூலம் ஆளும் வர்க்கங்களை தூக்கியெறிந்துவிட்டு ஆட்சியதிகாரத்தை கையேற்பதே புரட்சியாளர்களின் இலக்காக அமையவேண்டும். மாறாக எதிரிகளை தனிநபர்களாகப் பார்ப்பதும் சில தனிப்பட்ட கதாநாயகர்களின் செயல் பாடுகள் மூலம் வரலாறு படைக்கப்படுவதாக கருதுவதும் உண்மையில் புரட்சிக்கு தீங்கிழைக்க செய்யும். தனி நபர் பயங்கரவாதம் புரட்சிக்கு தீங்கிழைப்பது என்பதால் புரட்சியாளர்கள் தனி நபர் பயங்கரவாதத்தை கோட்பாட்டு ரீதியாக ஏற்றுக் கொள்வதில்லை. சில குறிப்பான நிலமைகளில் தந்திரோபாயரீதியில் பயன்படுத்துவதை நிராகரிப்பதும் இல்லை. தனி நபர் பயங்கரவாதத்தை நிராகரிப்பது எனும் பிரச்சனை புரட்சியாளர்கள் எதிரியின் கண்ணோட்டத்துக்கு பலியாகிவிடாமல் இருப்பது மிக முக்கியமானது. தனிநபர் பயங்கரவாதமும் மாற்றுக்கருத்துக்களின் பால் சகிப்புணர்வின்மையும் ஒன்றல்ல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



——தமிழீழ விடுதலைப் போராட்டமானது இன்று தமிழ் மக்களின் அனைத்து சுதந்திரங்களையும் தனது காலில் போட்டு மிதிக்கும் ஒரு சக்தியிடம் சிக்கியுள்ளது. இப்படிப்பட்ட ஒரு பாதகமான சூழ்நிலையானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முன்னர் தீவிரமாக ஈடுபட்ட பலர் மத்தியில் நம்பிக்கை வரட்சியை ஏற்படுத்தியுள்ளது. பல சந்தர்ப்பங்களில் அவர்களை கண்ணோட்டங்களையே பாதிக்கும் அளவிற்கு போயுள்ளது. புரட்சி, தாயகம், எதிரிநண்பர், சுயநிர்ணயம், இனவாதம், மனிதாபிமானம், ... போன்ற பல்வேறு விடயங்களிலும் தாம் முன்பு கொண்டிருந்த புரட்சிகரமான கண்ணோட்டங்களைக் கைவிட்டு எல்லாத்துறைகளிலும் தார்மீக அடிப்படையிலான விளக்கங்களை மேற் கொள்ள முனைகிறார்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் எதிரியையே நம்பும் அளவிற்குச் சென்று விடுகின்றார்கள். போராட்டத்தை இன்றைய பிற்போக்கு நிலையில் இருந்து மீட்க வேண்டுமாயின் நாம் செய்ய வேண்டியது, யாதெனில் எதிரிவர்க்க சித்தாந்தத்திற்குப் பலியாகிப் போய்விடாமல், புரட்சியுடன் சம்பந்தப்பட்ட அடிப்படையான பிரச்சனைகளில் இன்றைய பாசிச அர்த்தப்படுத்தல்கள், எதிரியின் தார்மீக விளக்கங்கள் என்பவற்றிற்கு மாறாக புரட்சிகரமான நிலைப்பாடுகளை முன்வைப்பது உடனடி அவசரப் பணியாகின்றது அந்த வகையில் தனிநபர்ப் பயங்கரவாதத்தின் பாத்திரம் குறித்த புரிதலும் அவசர தேவையாகிறது.

(ஆக்கம்— வாணி. நன்றி— உயிர்ப்பு)

இனவெறி அரசுடன்
இணைகின்ற பேச்சுக்கள்
முறியடிக்கப்பட்ட போது
இளைஞர் கரங்களின்
துப்பாக்கிகள்
வழிவைத் தந்தன!

தேசத் துரோகிகளுக்கு
எதிராக இயக்கிய
துப்பாக்கிகள் இன்று
திசை திரும்பிவிட்டனவே!

மக்களின் மகிழ்ச்சிக்காய்
மகத்தான பணிபுரிய
ஏந்திய துப்பாக்கியை
சக போராளிகளுக்கு
எதிராக திருப்புகின்ற
துர்ப்பாக்கியம் அல்லவா
நேர்ந்திருக்கிறது!"

முகமிழந்த மனிதர்களுக்கு
முகப்பவுடர் எதற்கு?
ஆயுதத்தை எதிரியின்
மீதே திருப்புவோம்!

நாங்கள்———
உதிரிகள்தான் ஆனால்
எதிரிகள் அல்ல
என்பதை எதிராளிக்கு
உணர்த்துவோம்!

இன்னும்
எத்தனை காலந்தான்
எமது மக்கள்
கண்ணீர் வெள்ளத்தில் மூழ்குவார்கள்?
எங்களது சிறு
அறுதவுகளைக் கூட
மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

முகமூடிகளைக் களைந்து
முகத்தை காட்டுங்கள்
இல்லையேல் அவை
மக்களாலேயே
கிழித்தெறியப்படும்!

www.tamilarangam.net



**கூட்டுச் சேரா இயக்கத்தின் 10-வது மாநாடு**
**ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளை ஆளும் வர்க்கங்களின் செயலற்றத் தன்மையை காட்டுகிறது.**

கூட்டு சேரா இயக்கத்தின் பத்தாவது மாநாடு 1992 செப்டம்பர் முதல் வாரத்தில் இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்றது. உலக முதலாளித்துவ நெருக்கடி தீவிரமடையும் சூழலில் இந்த மாநாடு நடைபெற்றது வளைகுடா யுத்தம், சோவியத் யூனியனின் சிதைவு ஆகிய இரு நிகழ்ச்சிப் போக்குகளுக்குப் பிறகு முதல் முறையாக இந்த மாநாடு நடை-பெற்றது. இதனால் தான் இந்த மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

ஒரு புதிய உலக ஒழுங்கமைப்பை உருவாக்குவதில் கூட்டு சேரா இயக்கத்தின் பாத்திரம், ஐ.நா.வை ஜனநாயகப் படுத்தல். தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு, வர்த்தக வளர்ச்சி, சுற்றுச் சூழல் மற்றும் வளர்ச்சி மத்திய கிழக்குப் பிரச்சனை, தென் ஆப்பிரிக்கப் பிரச்சனை மற்றும் மனித உரிமைகள் ஆகிய பிரச்சனைகளை இம் மாநாடு விவாதித்தது. இப்பிரச்சனைகளைக் குறித்து கூட்டு சேரா இயக்க மாநாடுகள் இதுவரை வழக்கமாக முன்வைத்த கோரிக்கைகள் தான் இந்த மாநாட்டு அறிக்கையிலும் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

சோவியத் யூனியனின் சிதைவுக்குப் பிறகு, இன்றுள்ள சர்வதேச சூழ்நிலையில் கூட்டு சேரா இயக்கம் என்ன பொதுத் திசை வழியை மேற்கொள்ள வேண்டும். எனத் தீர்மானிப்பது, இந்த மாநாடு எதிர் கொண்ட முக்கியமான பிரச்சனையாகும், இதைப் பரிசீலனை செய்வதுதான் இந்த மாநாட்டைப் பற்றி மதிப்பீடு செய்வதிலுள்ள மையமான பிரச்சனையாகும். எனவே, இந்த மாநாட்-டைப் பற்றி ஒரு சரியான மதிப்பீடு செய்யும் பொருட்டு இன்றைய சர்வதேசச் சூழ்நிலையைப் பரிசீலனை செய்வது அவசியமாகும்.

சோவியத் யூனியனின் சிதைவு இரு துருவங்கள் கொண்ட உலக ஒழுங்கமைப்பு முடிவுக்கு வந்துவிட்டதைக் குறிக்கிறது. இதன் பொருள் அமெரிக்க மேல்நிலை வல்லரசின் தலைமையின் கீழுள்ள ஏகாதி-பத்தியக் கூட்டணிக்கும், சோவியத் சமூக ஏகாதிபத்தியக் கூட்டணிக்கும் இடையில் நடைபெற்று வந்த கெடுபிடிப்போர் முடிவுக்கு வந்துவிட்டது என்பதாகும். இத்தகைய நிலைமையில் உடனடியாக ஒரு உலகப் போர் தோன்றுவதற்கான வாய்ப்பு இல்லை. அமெரிக்கா தனது மேலாதிக்கத்தின் கீழ் ஒற்றைத் துருவ அமைப்பைக் கொண்ட ஒரு உலக ஒழுங்கமைப்பை உருவாக்க முயல்கிறது. அதைப் பிற ஏகாதிபத்திய நாடுகள் ஏற்கத் தயாராக இல்லை. இதனால் உலகை மறு பங்கீடு செய்து கொள்வதின் அடிப்படையில் எத்தகைய புதிய ஏகாதிபத்தியக் கூட்டணிகள் உருவாகும் என்ற பிரச்சனை எழுகிறது. ஆகையால் சர்வதேசச் சூழ்நிலையைப் பரிசீலனை செய்வதற்கு முன்னர் ஏகாதிபத்திய அரசுகள் மற்றும் ஏகபோக முதலாளித்துவ கூட்டணிகள் தோற்றம். அவற்றிற்கிடையில் போராட்டமும் ஒற்றுமையும் குறித்து லெனினியம் என்ன கூறுகிறது என்பதைப் பார்ப்போம்.

## 11. ஏகாதிபத்தியக் கூட்டணி பற்றி லெனினியம்.

**போராட்டமும் உடன்பாடும்.** ஏகாதிபத்திய அரசுகள் மற்றும் ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகளுக்கிடையில் உலகைப் பங்கீடு செய்து கொள்வதற்கான போராட்-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



---கூட்டுறவு வளர்த்தலும் ஆகிய இரண்டு முரண்பட்டப் போக்குகளுக்கு ஊடே தான் மூலதனத்திலும், உற்பத்தியிலும் ஒன்று குவிப்பு வளர்கிறது. இது தான் முதலாளித்துவக் கூட்டுகளுக்கிடையிலான போராட்டம், உடன்பாடுகள் ஆகிய வற்றின் சாரம்சமாகும்.

ஏகாதிபத்திய அரசுகள் மற்றும் ஏகபோக முதலாளித்துவக் கூட்டணிகள் உலகைப் பங்கீடு செய்வதற்குப் புறநிலைக் காரணம், ஒன்று குவிப்பு ஏற்கனவே வந்தடைந்துவிட்ட வளர்ச்சி நிலையாகும், லாபங்களைப் பெறுவதற்காக இந்த முறையை மேற்கொள்ளும்படி அவர்கள் நிர்பந்திக்கப்படுவதே ஆகும். உலகை அவர்கள் தங்களது மூலதனத்தின் விகிதத்திலும் வலிமையின் விகிதத்திலும் பங்கிட்டுக் கொள்கிறார்கள். ஏனெனில் பரிவர்த்தனை பண்ட உற்பத்தியிலும் முதலாளித்துவத்திலும் வேறு பங்கீட்டு முறையும் இருக்க முடியாது. இதுதான் முதலாளித்துவக் கூட்டணிகளுக்கிடையிலான போராட்டத்தின் சாராம்சமாகும் என லெனினியம் கூறுகிறது.

ஏகாதிபத்திய அரசுகள் மற்றும் ஏகபோக முதலாளித்துவக் கூட்டணிகளுக்கிடையில் ஏற்படும் உடன்பாடுகளின் சாராம்சத்தைப் பற்றி லெனின் பின்வருமாறு கூறுகிறார். "உலகைப் பொருளாதார ரீதியில் பங்கீடு செய்து கொள்வதின் அடிப்படையில் முதலாளித்துவ கூட்டுகளுக்கிடையில் சில குறிப்பிட்ட உறவுகள் வளர்கின்றன. அதே போல இதற்கு இணைவாகவும் இதனுடன் தொடர்புடனும் உலகைப் பிரதேச ரீதியில் பங்கீடு செய்து கொள்வதின் அடிப்படையில் காலனியாதிக்கம் மற்றும் செல்வாக்கு மண்டலங்களுக்கான போராட்டத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட சில உறவுகள் வளர்கின்றன.

## ஏகாதிபத்தியங்களின் சமச்சீரற்ற வளர்ச்சி

முதலாளித்துவ நாடுகளிடையில் கூடுமான வரையில் ஏகாதிபத்திய யுத்தங்களைத் தவிர்ப்பதற்காக, விரிவடைந்து வரும் ஏகாதிபத்திய அரசுகள் மற்றும் ஏகபோக முதலாளித்துவக் கூட்டுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. இந்த ஒருங்கிணைப்பு எல்லா ஏகாதிபத்திய அரசுகளையும் கொண்ட ஒரு பொதுவான கூட்டணியாகவோ அல்லது ஒரு ஏகாதிபத்திய கூட்டணி அதற்கு எதிரான இன்னொரு ஏகாதிபத்திய கூட்டணி என்ற ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டணியாகவோ இருக்கலாம். ஏகாதிபத்தியங்களுக்கிடையில், செல்வாக்கு மண்டலங்கள், நலன்கள், காலனிகள் ஆகியவற்றை பங்கீடு செய்து கொள்வதற்காகவே இக் கூட்டணிகள் அமைக்கப்படுகின்றன. இவற்றை ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் பங்கீடு செய்து கொள்வதற்கு முதலாளித்துவத்தில் சாத்தியமான ஒரேயொரு அடிப்படை கூட்டணியில் பங்கு கொள்வோரின் வலிமையைப் பற்றிய அவர்களது பொதுவான பொருளாதார, நிதித்துறை, இராணுவ வலிமை முதலானவற்றை பற்றிய கணக்கீடுதான். இந்த பங்கீட்டில் பங்கு கொள்வோரின் பலம் சமமான அளவில் நீடிப்பதில்லை ஏனெனில் வெவ்வேறு நிறுவனங்கள், டிரஸ்டுகள், கார்ப்பரேஷன்கள், தொழிற்கிளைகள் அல்லது நாடுகளின் ஏற்ற தாழ்வற்ற வளர்ச்சி முதலாளித்துவத்தில் சாத்தியம் இல்லை. ஆகவே முதலாளித்துவ அமைப்பின் எதார்த்த நிலைமைகளில், ஏகாதிபத்தியக் கூட்டணிகள் எந்த வடிவத்தில் அமைந்த வையாயினும், ஒரு ஏகாதிபத்தியக் கூட்டணியாக இருந்தாலும் சரி, அல்லது எல்லா ஏகாதிபத்திய அரசுகளையும் கொண்ட பொதுவான கூட்டணியாக இருந்தாலும் சரி, அவை யுத்தங்களுக்கு இடையிலான காலங்களுக்குரிய "போர் நிறுத்த உடன்பாடுகளாகவே" தவிர்க்க முடியாதபடி இருக்குமேயன்றி வேறல்ல. மேலும், முதலாளித்துவ---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



---வளர்ச்சி ஏற்றத் தாழ்வானதாகவே இருப்பதன் காரணமாக, ஏகாதிபத்தியங்களின் வலிமையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவாறு உலகை மறு பங்கீடு செய்கிற செயலும் தவிர்க்க முடியாததாகி ஒன்றாகி விடுகிறது. ஆகையால் தான் இந்தக் கூட்டணிகள் நிபந்தனைக்குட்பட்டதாகவும், தற்காலிகமானதாகவும் இருக்கின்றன. சமாதானக் கூட்டணிகள் யுத்தங்களுக்கு அடிகோலுகின்றன. அவையும் இந்த யுத்தங்களிலிருந்து உதித்தெழுகின்றன. ஒன்று மற்றொன்றை நெறிப்படுத்துகிறது. உலகப் பொருளாதாரத்திலும், உலக அரசியலிலும் நிலவும் ஏகாதிபத்தியத் தொடர்புகள் உறவுகள் என்ற ஒரே அடிப்படையிலிருந்து சமாதானம் மற்றும் சமாதானமல்லாத வழியிலான போராட்ட வடிவங்கள் மாறிமாறி தோன்றுகின்றன. ஏகாதிபத்தியச் சமாதானங்களுக்கும், ஏகாதிபத்தியப் போர்களுக்கும் இடையிலான உயிர்த் தொடர்புடன் ஏகபோக முதலாளித்துவ கூட்டணிகளுக்கிடையிலான போராட்டத்தையும் ஒருங்கிணைப்பையும் (ஒற்றுமையையும்) பார்க்க வேண்டும்.

## 111 சர்வதேசச் சூழ்நிலை

இருதுருவ அமைப்புக் கொண்ட உலக ஒழுங்கமைப்பு முடிவுக்கு வந்த பிறகு ஒரு புதிய பாணியிலான உலக ஒழுங்கமைப்பு தோன்றவில்லை என்றாலும் உலகில் பிரதான சக்திகளின் வலிமையின் சமநிலையில் (பலாபலவில்) துரிதமாக மாற்றங்கள் நிகழ்கின்றன. அம்மாற்றங்களில் பின்வருவனவற்றைக் குறிப்பானதாகக் கூறலாம்.

1. ஏகாதிபத்தியங்களின் சமநிலையில் மாற்றம் இருப்பினும் அமெரிக்காவின் தலைமை பாத்திரம் தொடர்கிறது.

அமெரிக்காவின் தலைமையின் கீழுள்ள ஏகாதிபத்திய கூட்டணியைச் சேர்ந்த நாடுகளின் பொருளாதார வலிமையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்கா பலவீனமடைந்துள்ளது மேற்கு ஐரோப்பா, குறிப்பாக ஜெர்மனி, மற்றும் ஜப்பான் ஒப்பீட்டளவில் பொருளாதார ரீதியில் முன்னேறி உள்ளன. முதலாளித்துவ வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வான போக்கு என்ற விதி தொடர்ந்து செயற்படுவதை ஒட்டி இம்மாற்றம் நிகழ்ந்துள்ளது. 1960 இல் மொத்த அன்னிய முதலீடு சொத்து மதிப்பில் அமெரிக்காவின் பங்கு 47 சதவீதமாக இருந்தது. 1989 இல் 28 சதவீதமாக குறைந்து விட்டது. அதே சமயம் ஜப்பான், ஜெர்மனி ஆகிய இரண்டின் பங்கு 1960 இல் 1.6 சதவீதம் இருந்தது. 1989 இல் 20.6 சதவீதமாக உயர்ந்து விட்டது.

இவ்வாறு இம்மூன்று ஏகாதிபத்தியச் சக்திகளின் வலிமையில் மாற்றங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவற்றிற்கிடையில் போட்டியும் வளரத் தொடங்கியது. உற்பத்தி மற்றும் மூலதனத்தின் ஒன்று குவிப்பு சர்வதேச மயமாவது ஒரு புதிய மட்டத்திற்கு உயர்ந்துவிட்டதின் விளைவாக அந்நிய நேரடி முதலீடு அதிகரித்தது. இந்த அன்னிய நேரடி முதலீட்டின் அதிகரிப்பு முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் விகிதம் குறைந்து கொண்டிருந்த சூழலில் நடைபெற்றது. ஏகாதிபத்திய நாடுகளின் மூலதனம் அதிக லாபத்திற்கான வாய்ப்பைத் தேடி அன்னிய நாடுகளுக்கு சென்றன. இவ்வாறு ஏகாதிபத்திய நாடுகளுக்கும் ஏகபோக மூலதனக் கம்பனிகளுக்கும் இடையில் போட்டி வளரத் தொடங்கியது. குறிப்பாக அமெரிக்க ஜப்பான் மற்றும் மேற்கு ஐரோப்பா நாடுகளுக்கிடையில் போட்டி தீவிரமடைந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1980 ஆம் ஆண்டுகளில் பிற்பகுதியில் ஜப்பானுடைய நேரடி மூலதனம் அமெரிக்காவிலும், ஐரோப்பியாவிலும் குவிக்கப்பட்டது. கம்ப்யூட்டர் தொழில் துறையில் அமெரிக்க கம்பெனிகளின் போட்டியைச் சமாளிப்பதற்காக அவற்றிற்கு எதிராக ஐரோப்பியக் கம்பெனிகள் ஜப்பானிய கம்பெனிகளின் ஒத்துழைப்பை நாடின. மறுபுறம் பிற மின்னணுக் கருவிகளின் போன்ற துறையில் ஜப்பானிய கம்பெனிகளின் போட்டியைச் சமாளிப்பதற்காக ஐரோப்பிய கம்பெனிகள் அமெரிக்க கம்பெனிகளுடன் ஒத்துழைத்தன. இவ்வாறு ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோக கம்பெனிகளுக்கிடையில் ஒரு சிக்கலான போட்டி ஏற்பட்டது, ஏகாதி-பத்திய நாடுகளின் அரசுகள் தங்கள் நாட்டு ஏகபோக முதலாளித்துவ கம்பெனிகளின் நலன்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு வர்த்தகக் காப்பு கொள்கைகளை தீவிரமாக அமுல்படுத்தத்துவங்கின. இந்த பின்னணியில் தான் ஏகாதிபத்திய நாடுகள் தனி வர்த்தக (பொருளாதார) தொகுதிகளை அமைக்கத் துவங்கின. 1985 இல் இருந்து பிரதேச ரீதியான வர்த்தக தொகுதிகளை அமைக்கும் போக்கு உலகம் முழுவதும் பரவிற்று. ஐரோப்பியப் பொதுச் சந்தை, தென்கிழக்கு மற்றும் கிழக்கு நாடுகளின் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் (ஆசிய பசுபிக் பிரதேச தொகுதி) மற்றும் வட அமெரிக்க சுதந்திர வர்த்தக மண்டலம் ஆகிய மூன்று தனி வர்த்தக தொகுதிகள் அமைக்கப்பட்டன. இவ்வாறு மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள். (ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ்) ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்று ஏகாதிபத்திய சக்திகள் பொருளாதார ரீதியில் இப்பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் பொருட்டு இந்த தனி வர்த்தக தொகுதிகளை அமைக்கின்றன.

சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்காவுக்கும் பிற ஏகாதிபத்திய நாடுகளுக்கும் இடையில் ஒத்துழைப்பு அதிகரிக்கவில்லை. அவற்றிற்கு இடையிலான முரண்பாடுகள் வலுவடைகின்றன. உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தையில் அமெரிக்காவுக்கும், ஐரோப்பியாவுக்கும் இடையேயுள்ள வேற்றுமையும், வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் அரிசி சந்தைப் பிரச்சனையில் அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் இடையிலுள்ள வேற்றுமையும், இந்த நாடுகள் ஒன்று மற்றொன்றின் மீது வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டுவதற்கும் சில சமயங்-களில் வெளிப்படையான மோதல்களுக்கும் இட்டுச் செல்கின்றன. மேலும், முதலாளித்துவ நாடுகளில் மொத்த உற்பத்தி விகிதம் (ஜி.டி.பி.) 1988 இல் 4.5 சதவீதமாக இருந்தது. 1989 இல் 3.3 சதவீதமாகவும்; 1990 இல் 2.6 சதவீதமாகவும் குறைந்து கொண்டே வந்தது. இப்போதும் பொருளாதார மந்த நிலை அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் ஆரம்பமாகிப் பிற நாடுகளில் பரவுகிறது. அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றில் நிச்சயமற்ற நிலை காணப்படுவதன் விளைவாக பல நாடுகளில் பங்கு மார்க்கட்டுக்களில் வியாபாரம் விழுந்து விட்டது. பிரான்சு, இத்தாலி முதலிய ஐரோப்பிய நாடுகளிலும் மந்தநிலை பரவுகிறது. ஐரோப்பிய நாணயங்கள் பரிவர்த்தனை அமைப்பு நிலைகுலைந்துள்ளது. ஐரோப்பிய பண்டங்கள் மார்க்கட்டில் வர்த்தகம் குறைந்துகொண்டே போகிறது. இவ்வாறு முதலாளித்துவ நாடுகளை பொருளா-தார மந்த நிலை தாக்கியுள்ளது. இதன் விளைவாக அமெரிக்கா, ஐரோ-ப்பிய ஏகாதிபத்திய நாடுகள் மற்றும் ஜப்பானுக்கும் இடையில் ஒரு வர்த்தகப் போர் நடந்து கொண்டிருக்கிறது.

www.tamilarangam.net



ஒருபுறம், ஏகாதிபத்திய நாடுகள் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டிருந்த போதிலும் மறுபுறம், ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடும் விசயத்தில் அவை ஒன்றுபடுகின்றன. அவை "நவீன தலையீட்டு வாதத்தை ஆதரிக்கின்றன. 'ஜி7' (ஏழு வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகள்—ஏகாதிபத்தியங்கள்) நாடுகளின் உச்சிக் கூட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு தங்களுக்குள் கருத்தொற்றுமையை உருவாக்கிக் கொள்கின்றன. இவ்வாறு தங்களுக்குள் உருவாக்கிக் கொண்ட கருத்தொற்றுமையையும், உருவாக்கிய புதிய விதிகளையும் பிற நாடுகளின் மீது திணிக்கின்றன. அவை பிறநாடுகளின் உள்விவகாரங்களில் " மனித நேயத்துடன் தலையிடுவதை " நியாயப்படுத்துவதற்காக " மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது என்னும் கொள்கை காலத்திற்கு ஒவ்வாததாக ஆகிவிட்டது" என்றும், " மனித உரிமைகளுக்கு நாடு எல்லைகள் கிடையாது " என்றும் வாதிடுகின்றன. உதவியைத் தருவதற்காகக் கடன்பெறும் நாடுகளின் மீது " பலகட்சி முறை ", " மனித உரிமைகள் ", தனியார் மயமாக்குதல், சந்தை பொருளாதாரத்தை கடைபிடித்தல், இராணுவச் செலவினைக் குறைத்தல் ஆகிய நிபந்தனைகளை விதிக்கின்றன. இத்துடன் அவை உருவாக்கும் நிறுவனங்களில் சேர வேண்டும் என்று நிர்ப்பந்திக்கின்றன.

யுத்த தந்திரக் கொள்கை (இராணுவ—பாதுகாப்பு) பிரச்சனையிலும் அமெரிக்காவுக்கும் ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் ஜப்பான் ஆகியவற்றிற்கும் இடையில் கருத்து வேற்றுமைகளும் முரண்பாடுகளும் வளர்ந்து வருகின்றன. அமெரிக்காவின் யுத்த தந்திரம் சோவியத் அச்சுறுத்தலுக்கு எதிராக படைகளைக் குவிப்பது என்பதிலிருந்து பிரதேச மோதல்களைக் கையாள்வதற்குப் படைகளைக் குவிப்பது என்பதற்கு மாறியிருக்கிறது. இந்த மாற்றத்திற்கு ஏற்ப, இப்போது அமெரிக்கா, ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் உள்ள தனது படை பலத்தைக் குறைத்து வருகிறது மத்திய கிழக்கில் தனது இராணுவ வலிமையை (படைபலத்தை) அதிகரித்து வருகிறது. அமெரிக்காவின் யுத்ததந்திரக் கொள்கையின் மிக முக்கியமான அம்சம் மேற்கு ஏகாதிபத்திய நாடுகளின் கூட்டணிக்கு அதன் தலைமை ஏற்கப்பட வேண்டும் என்பதாகும்.

அமெரிக்காவின் மேலாதிக்கத்தின் கீழ் ஒற்றைத் துருவம் கொண்ட ஒரு உலக ஒழுங்கமைப்பு ஏற்படுவதைப் பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் ஏற்கவில்லை. மேற்கு நாடுகளின் கூட்டுக்கு அமெரிக்காவின் தலைமைப் பாத்திரத்தை அவை ஏற்கவில்லை. அமெரிக்காவின் தலைமை என்பதற்கு மாறாக, அமெரிக்காவுடன் பங்காளிகள் என்ற நிலைக்கு மாற வேண்டும் என்பது அவற்றின் நோக்கமாக இருக்கிறது. அமெரிக்காவுக்கும், பிரான்சுக்கும் இடையில் யுத்ததந்திரம் மற்றும் அணு ஆயுத பிரச்சனைகளில் கடுமையான கருத்து வேற்றுமைகள் உள்ளன. பிரான்சு தனது படைகள் சுயாட்சி பெற்றிருக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. மேற்கு ஐரோப்பா சுதந்திரமாக தனது அரசியல் விருப்பங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பது பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியின் நோக்கமாக இருக்கிறது. அணு ஆயுதங்களைப் பெற்றிருப்பதற்குப் பிரான்சு நியாய உரிமை கோருகிறது. பிரான்சின் யுத்த தந்திரம் சுயேச்சையானதாக விளங்குவதற்கும், கெடுபிடிப்போருக்கு பிந்தைய காலத்தில் முன்னிலை வகிக்கும் நாடாக இருப்பதற்கும் அணு ஆயுதங்களைப் பெற்றிருப்பது இன்றியமையாதது. என பிரான்சு கருதுகின்றது. ஆயுத உற்பத்தியில் அமெரிக்க கம்பெனிகளின்---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்வதேச நிதி நிறுவனங்களினதும், ஏகாதிபத்தியங்களதும் கட்டுக்கடங்காத கசக்கிப் பிழியும் சுரண்டலால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின், பொருளாதார, அரசியல் நவீன காலனிய ஒடுக்குமுறைக்கு எதிராக, உள்நாட்டு பிற்போக்கு அரசுக்கு எதிராக கொதித்தெழுந்த பெருமக்களை, அவர்களது தேசிய சுயாதிபத்திய உணர்வை, தோழர் கொன்சாலோவும், தோழர்களும் புரட்சிகரமான "ஒளிரும் பாதை" வழியை நோக்கி அணிதிரட்டினார்கள். மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனைகளை பெருவின் ஸ்தூலமான நிலமைகளுடன் பொருத்தி வழிகாட்டினார்கள். அதுமட்டுமல்லாது, பெருவிய கொம்யூனிஸ் கட்சியை எல்லாவகை திரிபு, நவீன திரிபுகளுக்கும் சாட்டை அடி கொடுத்து, புரட்சிகர கொம்யூனிஸ் கட்சியாக வளர்த்தெடுத்தார்கள். 'பெருவிய மக்கள் குடியரசை' நிறுவும் பாதையில் மக்களின் ஆயுதப்படையைகட்டி, விடுதலை யுத்தத்தினை தொடங்கினார்கள். 'பெருவிய கொம்யூனிஸ் கட்சி' பெருவிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக மாறிவிட்டது. சர்வதேச புரட்சிகர இயக்கத்தில் (      ) சிறந்த பங்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. இத்தனை அரும் செயல்களையும் செய்யும் பெரு கொம்யூனிஸ் கட்சி க்கு தலைமை தாங்கிவரும் தோழர் கொன்சாலோ கைது செய்யப்பட்டதை எதிர்த்து, ' கொன்சாலோவின் உயிரைப் பாதுகாக்க "விண்ணையும் மண்ணையும் உலுப்புவோம்" என்ற முழக்கத்தின் கீழ் உயிரைப் பாதுகாக்கும் இயக்கத்துக்கு சர்வதேச புரட்சிகர இயக்கம் அழைப்பு விடுத்தது. 'சர்வதேச அவசரகால கமிட்டி' நிறுவப்பட்டுள்ளது. உலகின் பல பாகங்களிலும் கொம்யூனிஸ்ட்டுகள், தேசிய விடுதலைப் புரட்சியாளர்கள், சனநாயகவாதிகள், மனித உரிமைவாதிகள், இவர்களது இயக்கங்கள் எல்லாம் விடுதலை செய்யக் கோரும் இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நோக்கின் அது அடிப்படையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாகும். அத்தோடு புதிய சனநாயகப் புரட்சியின் பகுதியுமாகும். தமிழீழ மக்களின் புரட்சிகரப் போராட்டத்தினூடாக வளர்ந்து வரும் மார்க்சிய லெனினியவாதிகளும், குழுக்களும் ஏகாதிபத்தியத்தின் எதிரிகள் என்ற வகையில் மட்டுமல்லாது, தொழிலாள விவசாய வர்க்கத்தினதும், உழைக்கும் பரந்துபட்ட மக்களினதும் முன்னோடிகள், மார்க்சிய லெனினிய மா ஓ சிந்தனைகளின் புதல்வர்கள் உலக பொதுவுடமை இயக்கத்தின் சகோதரர்கள் என்ற மகோன்னத உறவினால் பிணைக்கப்பட்டவர்கள்.

தோழர் கொன்சாலோவின் உயிரை பாதுகாக்கும் இயக்கத்தில், தோழர் கொன்சாலோவை விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற இயக்கத்தில் முழு மனதுடன் நமது தளங்களில் பங்காற்றுவோம்.

அமைப்புக் குழு
பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகம். (இலங்கை)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோழர்

## கொன்சாலோ (எ) அபிமேல் குஸ்மான்

## உயிரைப் பாதுகாக்க உதவுவோம்!

## அவரை விடுதலை செய்ய முழங்குவோம்!




உலகில்
மீண்டும்
எழுகிறது.
புதிய தென்புடன்
உண்மைக்
கொம்யூனிஸ்டுக்களும் கொம்யூனிசமும்.

ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் உள்
நாட்டு பிற்போக்கு ஆளும் வர்க்க 'பாசிச' அரசாங்கங்களுக்கும், நவகாலனிய
ஆதிக்க ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராக மக்களின் தேசிய விடுதலை போராட்—
டங்களும், வர்க்க புரட்சிகளும் வீறு கொண்டு நடந்து கொண்டிருக்கிறது.
கொம்யூனிஸ் கட்சியின் தலைமையில் நடக்கின்ற போராட்டங்கள், பிற்போக்கு
அரசுகளுக்கும், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களுக்கும் பெரும்
அச்சுறுத்தலைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மீண்டும் ஒருநாட்டில் கொம்யூனிஸ்
டுகள், பாட்டாளி வர்க்கத்தை ஆட்சி அதிகாரத்திற்கு கொண்டு வந்துவிடுவார்கள்
என்று, உலகளவில் பயபீதியில் நடுங்கிக் கொண்டிருக்கிறது. ஏகாதிபத்தியம்.
லத்தீன் அமெரிக்க நாடான பெரு நாட்டின் பெரு
கொம்யூனிஸ்ட்டு கட்சியின் தலைமையில் பெருவிய மக்கள், தமது விடுதலைக்கும்
தேசிய சுதந்திரத்திற்குமாக "ஒளிரும் பாதையில்" ( )
பியூஜிமோரி பாசிச அரசுக்கும், அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களுக்
கும் எதிராக மக்கள் யுத்த வழியில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.
இத்தகைய மகோன்னதமான, ஒடுக்க—
ப்பட்ட அடக்கப்பட்ட மக்களின் சாதனையை மீண்டும் ஒரு வரலாற்று எழுச்சியை
திருப்பத்தை தலைமை தாங்கும் பெரு கொம்யூனிச கட்சியின் தலைவர்
கொன்சாலோ (எ) அபிமேல் குஸ்மான் அவர்கள் 1992 புரட்டாதி 12ம் திகதி
சி.ஐ.ஏ. இனால் வழிநடத்தப்படும் பியூஜிமோரி அரசின் பொலிசார "டின்கோட்"
கைதுசெய்து சிறையிலடைத்துள்ளது. இது ஏகாதிபத்தியங்களுக்கும், பிற்போக்கு
வாதிகளுக்கும் ஒரு குளிர்ச்சியான செய்தி. ஆனால் உலகெங்கும் போராடும்
மக்களுக்கும், மக்கள் இயக்கங்களுக்கும் தாங்க முடியாத மாபெரும் துயரச்
செய்தி.

PROLETARIAT VANGUARD'S ORGANISATION

PROVO

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்